பல்கலைக்கழக மானியக்குழு (UGC) அங்கீகாரம் பெற்ற மாதஇதழ்

New Centurian Ungal Noolagam ISSN 2394-7535-123

நியூ செஞ்சுரியின்

உங்கள் நூலகம்

மாத இதழ்

New Centurian Ungal Noolagam (Tamil English - Bilingual Monthly)

மலர் : 18 Vol : 18	இதழ் : 05 Issue : 05	www.ncbhpublisher.in	ஆகஸ்ட் 2025 August 2025	விலை Price ₹ 45/-	ஆண்டு சந்தா Annual Subscription ₹ 540/-

ஈரோடு புத்தகத் திருவிழா 2025

28.7.2025 அன்று சென்னை, காமராசர் அரங்கத்தில் கவிஞர் ஜீவபாரதியின் "காலம்தோறும் கம்யூனிஸ்டுகள்" என்ற நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. இதில் நிதி மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் அகில இந்தியப் பொதுச் செயலாளர் டி.ராஜா, தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், கவிப்பேரரசு வைரமுத்து, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன், மேலாண்மை இயக்குநர் க.சந்தானம் மற்றும் ஓவியர் அன்பு ஆகியோர் கலந்துகொண்டனர்.

கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

நியூ செஞ்சுரியின்

உங்கள் நூலகம்

மாத இதழ்
திருவள்ளுவராண்டு 2055
மலர் - 18 இதழ் - 05 - ஆகஸ்ட் 2025

ஆசிரியர்
த. ஸ்டாலின் குணசேகரன்

ஆசிரியர் குழு
க. சந்தானம்
பேராசிரியர் ஆ. சிவசுப்பிரமணியன்
முனைவர் ச. சுபாஷ் சந்திரபோஸ்
முனைவர் ந. முத்துமோகன்
முனைவர் மு. இராமசுவாமி
முனைவர் நா. இராமச்சந்திரன்
முனைவர் பா. ஆனந்தகுமார்
முனைவர் ஞா. ஸ்டீபன்
ப. கு. ராஜன்
முனைவர் இரா. அறவேந்தன்
முனைவர் இரா. காமராசு
முனைவர் உ. அலிபாவா

இதழ் வடிவமைப்பு
கா. குணசேகரன்

நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142). ஜானி ஜான்கான் ரோடு.
இராயப்பேட்டை. சென்னை - 600 014
ungalnoolagam@gmail. com
இணைய தள முகவரி: www. ncbhpublisher. in

தனி இதழ் ₹ 45. 00. ஆண்டு சந்தா ₹ 540. 00
மாணவர்களுக்கு ₹ 500. 00
ஆயுள் சந்தா ₹ 5400. 00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 4050. 00
சந்தா தொகையை
New Century Reader's Sangam
Central Bank of India
Ambattur Branch. Chennai - 600 050
A/c. No. 1035249018
IFSC Code : CBIN0282161
என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

ஆசிரியர்
உங்கள் நூலகம்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், (பி) லிட். ,
41-பி. சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்.
அம்பத்தூர். சென்னை - 600 050.
தொலைபேசி எண் : 044-26251968, 26258410

உள்ளே...

1. புத்தகத் திருவிழா என்பது ஒரு பண்பாட்டு நிமிர்வு
ஆசிரியர் குழு...... 04

2. படித்துப் பாருங்கள்
ஆ. சிவசுப்பிரமணியன் 06

3. வி.எஸ். தொழிலாளர்களின் தோழர்
Dr. பிரபாஹரன். கெ 11

4. வாசிப்புப் பழக்கம் பண்பாட்டைப் புரிந்துகொள்ள உதவியாக இருக்கும்
மயிலாடுதுறை மருதசாமி...... 15

5. புதிய வெளிச்சத்தில் தமிழகக் கல்வி வரலாறு
சுஜா சுயம்பு........ 22

6. கண்டுகொள்ளப்படாத தியாகங்கள்
க. பழனித்துரை 27

7. தொல்இன வரலாற்று மாட்சிமைக்கான உரிமைக் கோரும் நூல்
நா. சந்திரசேகரன் 31

8. தமிழ்ச் சிறுகதைகளில் தமிழவனின் இடம்
சுப்பிரமணி இரமேஷ்...... 37

9. புறநானூற்றில் குடிமக்கள் ஈகைத்திறமும் விருந்தோம்பலும் கவிஞர் மெய்ஞானி பிரபாகரபாபு
முனைவர் ம. பிரபாகரன் 43

10. நிழல் பக்கங்களின் நிஜம்
ரா. சிலம்பரசன் 49

11. பேராசிரியர் ஆ. ஏகாம்பரம் சென்னை பல்கலைக்கழக கல்விப் புலத்தில், மாணவர்கள், ஆய்வாளர்கள் உருவாக்கம்
முனைவர் கோ. ஜெயக்குமார் 55

12. தொல்காப்பிய நெறியும் பொருள்கோடலில் உரையாளர்களின் கருத்தியல் சார்பும் மோ. செந்தில்குமார்
சி. லுபுனா லிலானி 59

13. தமிழால் மருத்துவக்கல்வி முடியும்
ஆ. கார்த்திகேயன்...... 65

14. காலனி வாழ்க்கைக் காட்சிகள் உள்ளடக்கிய புதுக்கோட்டை சரித்திரம்
சி. ஆர். ரவீந்திரன் 67

15. Exploring Familial Dynamics and Self-Discovery in Preeti Shenoy's When Love Came Calling and All the Love You Deserve
Ms. Keerthi Surendran
Lt Dr B. Ajantha Parthasarathi...... 71

புத்தகத் திருவிழா என்பது ஒரு பண்பாட்டு நிமிர்வு

சென்னையில் காயிதே மில்லத் கல்லூரி மைதானத்தில் நீண்டகாலம் புத்தகச் சந்தை நடந்து வந்தது. ஆண்டுக்கொருமுறை ஜனவரி மாதத்தில் பொங்கல் சமயத்தில் விரிந்த ஏற்பாடுகளுடன் அப்புத்தகக் கண்காட்சி நடைபெறும். அதனை பபாசி – தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் வெளியீட்டாளர்கள் சங்கம் நடத்தியது. இன்றளவும் அக்கண்காட்சி மேலும் விரிவடைந்து. வேறு இடங்களில் தொடர்ந்து அதே அமைப்பால் நடத்தப்பட்டு வருகிறது.

நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேசன் நிறுவனத்தின் ஆயிரக்கணக்கான ஊழியர்களின் நன்மை கருதி ஆண்டுக்கொரு புத்தகக் கண்காட்சி நடத்தி வருகிறது. அங்குக் குழந்தைகளை ஈர்க்கும் வண்ணம் விளையாட்டு அம்சங்களையும் மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களையும் இணைத்து வேறு ஒரு முறையில் நடத்தி வருகின்றனர். கண்காட்சி அவர்களது நிறுவனத்திற்கு சொந்தமான இடத்தில் நடக்கிறது. தங்குவதற்கு அங்கு நிறுவனத்தின் தேவைக்காகக் கட்டிவைக்கப்பட்டுள்ள அறைகள் பதிப்பாளர்களுக்கும் புத்தக விற்பனையாளர்களுக்கும் பயன்படுகின்றன. மத்திய அரசின் நிறுவனமே நடத்துவதால் அதற்குண்டான ஆள்பலம், பொருளாதார பலம் ஆகியவை உள்ளன.

பிறகு ஈரோடு போன்ற இடங்களில் கடந்தகால் நூற்றாண்டுக்குள் தான் புத்தகத்திருவிழாக்கள் நடைபெறத் தொடங்கின. அவை தனியார் ஏற்படுத்தியுள்ள சமூகநல அமைப்புகளால் நடத்தப்படுபவை.

இப்போது தமிழ்நாடு அரசே வருடத்திற்கு ஒருமுறை அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் ‘புத்தகத் திருவிழா’ வை நடத்த அரசு ஆணை பிறப்பித்ததோடு நிதி உதவியும் செய்து வருகிறது.

‘புத்தகக் காட்சி’, ‘புத்தகக் கண்காட்சி’ என்று வழங்கப்பட்டு வந்த புத்தகச் சந்தைகளின் பெயர்களிலிருந்து ஒரு மாற்றத்தைச் செய்து

‘புத்தகத் திருவிழா’ என்ற பெயர் 2005ஆம் ஆண்டு முதன் முதலில் ஈரோடு புத்தகச் சந்தைக்குச் சூட்டப்பட்டது.

அதுபெயர்மாற்றம்வேண்டும்என்றமுறையில் மட்டுமல்லாமல் எத்தனையோ வகையான திருவிழாக்கள் ஆண்டுதோறும் மக்களால் விதவிதமாகக் கொண்டாடப்படுகின்றன. மதம் சார்ந்தவை சில, சாதி சார்ந்தவை சில, பகுதி சார்ந்தவை சில, இசைக்குழுக்கள் சார்ந்தவை சில, மொழிசார்ந்தவை சில. அறிவுக்கென்று ஒரு திருவிழா கொண்டாடப்பட வேண்டும், புத்தகங்களைக் கொண்டாடுகிற திருவிழா தான் அறிவுத்திருவிழா. இவ்வாறான பல காரணங்களையும், உள்ளீடுகளையும் ஆய்ந்து தான் ‘புத்தகத்திருவிழா’ என்று ஈரோட்டில் பெயர் சூட்டப்பட்டதாக அத்திருவிழாக் குழுவினர் அறிவித்தனர்.

இப்போது அரசு ஆணையிலேயே ‘திருவிழா’ என்ற சொல்தான் பயன்படுத்தப்பட்டுள்ளது.

உலகெங்கும் எத்தனையோ பதிப்பகங்கள் சமூக மாற்றத்திற்கே வித்திட்டுள்ளன. உலகையே புரட்டிப் போட்ட புத்தகங்களை எங்கோ ஒரு மூலையில் இயங்கிக் கொண்டு வந்த எளிய பதிப்பகங்களால் பதிப்பிக்கப்பட்டுள்ளன. இதுவே அறிவுலக வரலாறு.

நூல்கள் தனிமனிதன் உயர்வுக்கு அடித்தளமிடுகின்றன. மனிதர்களைப் பக்குவப்படுத்துகிற, பண்படுத்துகிற வலிமை நூல்களுக்கு உண்டு. எத்தனையோ தனிமனிதர்கள் தங்களது தொழில் வளர்ச்சிக்கு நூல்கள் அடித்தளமிட்ட வரலாற்றை அவர்கள் எழுதிய நூல்கள் வழியாகப் பதிவு செய்துள்ளனர். ஆளுமையை மேம்படுத்துகிற ஆற்றலும் நூல்களுக்கு உண்டு.

அதே போன்று ஒட்டுமொத்த சமூகத்தையே சிந்திக்க வைக்கிற, செயல்படத் தூண்டுகிற, விழிப்புணர்வை ஏற்படுத்துகிற, எழுச்சிபெற அடித்தளமிடுகிற நூல்களும் உண்டு. பல நாடுகளின் விடுதலைக்கும், புரட்சிக்கும் சில நூல்கள் விதைகளாக விளங்கியுள்ளன.

கல்வியில் சிறந்து விளங்கும் நாடுகளே உலகின் சிறந்த நாடுகள் பட்டியலில் முதல் வரிசையில் நிற்கின்றன. காலகாலமாக கல்விக்கு அடிப்படையே நூல்கள் தான்.

இத்தகைய தனிச்சிறப்பும், சிறப்புத்தகுதியும் மிக்க நூல்களை கடைக்கோடி மனிதர்கள் வரை எடுத்துச் செல்லும் பணியை புத்தகத் திருவிழாக்கள் செய்கின்றன.

புத்தகத்திருவிழாக்களில் மாலையில் நடைபெறுகிற சொற்பொழிவு நிகழ்வுகள் புத்தக வாசிப்பைத் தூண்டிவிடுகிற வித்தையை நேரடியாகவோ மறைமுகமாகவோ செய்கின்றன.

புத்தகம் வாங்க மட்டுமே வருபவர்கள், உரைகளைக் கேட்பதும் சொற்பொழிவைக் கேட்பதையும் மட்டுமே நோக்கமாகக் கொண்டு வருபவர்கள் அவ்வுரைகளின் தாக்கத்தால் நூல்கள் வாங்குவதும், அத்திருவிழாக்களின் நடைமுறைகளாகின்றன. பொதுவாக அவை அறிவு வேள்விக்கு அடித்தளமிடுகின்றன.

சமூக நோக்கத்துடன், கல்விக் கண்ணோட்டத்துடன், அறிவு வேட்கையுடன், அறிவியல் பார்வையுடன், பண்பாட்டுச் சிந்தனையுடன், புத்தகத் திருவிழாக்கள் உயிரோட்டத்துடன் நடத்தப்படுகிற போது நாட்டில் புத்தெழுச்சி ஏற்படும் என்பதில் இரண்டு கருத்திற்கு இடமிருக்க முடியாது.

●

ஆசிரியர் குழு

படித்துப் பாருங்களேன்...

ஆ. சிவசுப்பிரமணியன்

அமராவதி ஆற்றுப் பள்ளத்தாக்கின் தொல்லியல்

- பொருந்தல் அகழ்வாராய்ச்சிகள்

கா. இராஜன் & வி. பி. யதிஷ் குமார்

(K. Rajan& V. P. Yathees Kumar 2014: Archaeology of Amaravathi River – ***porunthal Excavations,*** Indira Gandhi Rashtriya Manav Sangrahalaya, BHOPAL & Sharda publishing House, New Delhi 110 085).

பொதுவாக 1970 களிலும் அதற்கு முன்பாகவும் சங்க இலக்கியத்தை ஆய்வு செய்த அறிஞர்கள் தமிழக வரலாற்றை மீள் உருவாக்கம் செய்வதிலேயே தமது கவனத்தைச் செலுத்தியுள்ளனர். சமூகம், பொருளாதாரம், அரசியல் மற்றும் பண்பாட்டுக் கூறுகள் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தவை என்று பார்க்காமல் இவற்றைத் தனித்தனியே ஆய்வு செய்தனர் (ராஜன். கா. 2010 :4).

ஒரு நாட்டின் அல்லது ஒரு வட்டாரத்தின் வரலாற்று வரைவுக்குப் பல்வேறு அறிவுத்துறைகளின் துணை தேவைப்படுகிறது. இவற்றுள் கடந்த காலம் குறித்த ஆய்வுக்குப் பெரிதும் துணைபுரிவது தொல்லியல் ஆகும். நம் நாட்டைப் பொருத்த அளவில் ஆங்கிலக் காலனிய ஆட்சியின் போது சில ஆங்கில உயர் அதிகாரிகள், கிறித்தவ மறைப்பணியாளர்கள் ஆகியோர் தனிப்பட்ட ஆர்வத்தின் அடிப்படையில் தொல்லியல் ஆய்வில் ஈடுபட்டுள்ளனர், தமிழ்நாட்டில் செயல்பட்ட கால்டுவெல் கொற்கையில் சிறிய அளவில் அகழ் ஆய்வுகள் நடத்தி சில பொருள்களைச் சேகரித்துள்ளார். ஜகோர் என்ற செர்மானியர் ஆதிச்சநல்லூரில் 1876 இல் அகழ்ஆய்வு செய்து சில தொல்லியல் சான்றுகளைச் சேகரித்துள்ளார். இவை ஈமத்தாழிகள், மனித மண்டை ஓடுகள், எலும்புக்கூடுகள், இரும்புக் கருவிகள்,

மட்பாண்டச் சிதறல்கள், உலோகத்தாலான சிறிய அளவு கடவுள் உருவங்கள்,தானிய உமி, தவிடு, தானியம் எனப் பலதரத்தவை. இவர் சேகரித்த தொல்பொருள்கள் சில செர்மன் நாட்டின் அருங்காட்சியகம் ஒன்றில் இடம் பெற்றுள்ளன. இவ்வாறு தனிமனிதர்களின் முயற்சியை அடுத்து காலனிய அரசும் தன் பார்வையை இந்தியத் தொல்லியல் ஆய்வில் செலுத்தத் தொடங்கியது.

தொல்லியல் துறை ஒன்று 1861இல் Archeologycal survay of India என்ற பெயரில் ஆங்கில அரசால் இந்தியாவில் உருவாக்கப்பட்டது. இதன் வளச்சிநிலையாக உயர் கல்வியில் குறிப்பாகப் பல்கலைக் கழகங்கள் சிலவற்றில் தனித்துறையாக, தொல்லியல் துறை உருவானது.

தமிழ்நாட்டைப் பொறுத்தளவில் தொல்லியல் என்ற பரந்துபட்ட சமூக அறிவியலின் ஒரு கூறான கல்வெட்டியல் மட்டுமே இத் துறையால் முன்னெடுக்கப்பட்டது. அதிக அளவுக் கல்வெட்டுக்களைக் கொண்ட மாநிலமாகத் தமிழ்நாடு விளங்குவதும் இதற்குக் காரணம். தென் இந்தியாவில் ஐம்பத்தையாயிரம் கல்வெட்டுக்கள் உள்ளதாகவும் அவற்றில் இருபத்தேழாயிரம் கல்வெட்டுக்கள் தமிழ்நாட்டில் உள்ளதாகவும் வரலாற்றறிஞர் ஏ. சுப்பராயலு (2021: 76) குறிப்பிட்டுள்ளார். தொடக்கத்தில் இந்திய ஒன்றிய அரசின் தொல்லியல் துறை தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிக் கல்வெட்டுக்களைப் படியெடுத்து தென்னிந்தியக் கல்வெட்டுக்கள் என்ற தலைப்பில் வெளியிடத் தொடங்கியது. இவற்றுள் பெரும்பாலானவை மொழி அடிப்படையில் தனித்தனித் தொகுதிகளாகவும், ஒருசில இந்நான்கு மொழிக் கல்வெட்டுக்களையும் ஒரு சேரக்கொண்டதாகவும் வெளிவந்துள்ளன. 1961 ஆவது ஆண்டில் தமிழ்நாடு அரசு மாநிலத்துக்கான தொல்லியல் துறை ஒன்றைத் தொடங்கியது(சுப்பராயலு: மேலது78).

போதிய நிதிநல்கை இல்லாமையாலும், பணியாளர்கள் போதாமையாலும் கல்வெட்டுக்களைப் படியெடுத்தல், அவற்றை வெளியிடுதல் என்ற பணிகளையே இது தொடக்கத்தில் பெரிதும் மேற்கொண்டது. தொல்லியல் என்ற சமூக அறிவியல் துறையின் சிறப்பான ஓர் உறுப்புதான் கல்வெட்டியல். ஆனால் கல்வெட்டுக்களே தொல்லியல் என்ற எண்ணம் உருவாகிவிட்டது.

இருப்பினும் சிறிய அளவிலான அகழ்ஆய்வுகளை இத்துறை குறைந்த நிதிநல்கையுடன் மேற்கொண்டது. இவ்வகையில் பூம்புகார், அழகன்குளம், பாஞ்சாலங்குறிச்சி, கொற்கை, மாங்குடி, கரூர், பட்டறைப் பெரும்புதூர் என்பன குறிப்பிடத்தக்கன. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையான சில புதிய சான்றுகளை வெளிக்கொணர்ந்தன(தகவல்: கல்வெட்டியல் அறிஞர் முனைவர் சாந்தலிங்கம்).

என்றாலும் பரந்து பட்ட தமிழ்நாட்டின் தொன்மையான வரலாற்றை வெளிப்படுத்தும் வகையிலான ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. இக் குறையைக் கீழடி, ஆதிச்சநல்லூர், சிவகளை ஆகிய ஊர்களில் இப்போதைய மாநில அரசின்ஆர்வத்துடன் கூடிய ஒத்துழைப்புடன் மேற்கொண்ட அண்மைக்கால அகழ்ஆய்வகள் போக்கி விட்டன. இவை தமிழரின் நாகரீகம் பண்பாடு, தமிழ்மொழியின் தொன்மை என்பனவற்றை வெளிக்கொணர்வதில் முக்கிய பங்காற்றியுள்ளன.

இச்செய்திகளின் பின்புலத்தில் அமராவதி ஆற்றங்கரைப் பகுதியில் பேராசிரியர் கா. ராஜன் 2009, 2010 ஆவது ஆண்டுகளில் தம் தலைமையிலான குழுவினருடன் நிகழ்த்திய அகழாய்வின் கண்டுபிடிப்புக்களை இந்நூலின் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார்.

நூல் ஆசிரியர்கள்

இந்நூலின் ஆசிரியரான கா. ராஜன், புதுச்சேரி பல்கலைக் கழகத்தின் வரலாற்றுத் துறையில் பேராசிரியராகப் பணியாற்றியவர். தென்இந்தியாவின் குறிப்பிடத்தக்க தொல்லியலாளர்களில் ஒருவர். சென்னைப்



கா. இராஜன்

வி. பி. யதிஷ் குமார்

பல்கலைக் கழகத்தில் பண்டைய வரலாறு, மற்றும் தொல்லியலில் முதுகலைப் பட்டத்தையும், தில்லியிலுள்ள தொல்லியல் பள்ளியில் தொல்லியலில் முதுகலைப் பட்டயத்தையும் மைசூர்ப் பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டத்தையும் பெற்றவர். தென் இந்தியாவின் வரலாற்று வரைபட நூல் (அட்லஸ்) உருவாக்கும் குழுவின் தலைவர்களில் ஒருவராகப் பணியாற்றியுள்ளார். வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொடங்கி வரலாற்றின் தொடக்ககாலம் வரையிலான 1500க்கும் மேற்பட்ட தொல்லியல் ஆய்வுக்கான களங்களை இவர் கண்டறிந்துள்ளார். இவ்வகையில் இவர் தொகுத்து வெளியிட்டுள்ள இக்களங்களின் பட்டியல் Catalogue of Archaeological Sites in Tamilnadu என்ற பெயரில் இரண்டு தொகுதிகளாக வெளியாகியுள்ளது.

இவற்றுள் மயிலாடும்பாறை, தாண்டிக்குடி, பொருந்தல், கொடைக்கானல் ஆகிய நான்கு ஊர்களிலும் இவர் மேற்கொண்ட அகழ்ஆய்வுகள் குறிப்பிடத்தக்கவையாகும். இருபத்தியைந்து பெரும் ஆய்வுத்திட்டங்களை (Major research projects) மேற்கொண்டு எண்பத்தியைந்து ஆய்வுக்கட்டுரைகளையும் பத்து ஆய்வு நூல்களையும் இவர் எழுதியுள்ளார்.

இந் நூலின் இணையாசிரியரான யதிஷ்குமார் வரலாற்றிலும் தொல்லியலிலும் முதுகலைப்பட்டம் பெற்றவர். தமிழ்ப்பல்கலைக்கழகத்தில் சுவடியியலில் முதுநிலை பட்டயப்பயிற்சியும் புதுவைப் பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டமும் பெற்றவர். இந்திய அரசின் தொல்லியல் துறையில் உதவித் தொல்லியலாளராகப் பணிபுரிகிறார். பவானி, வைகை, அமராவதி ஆற்றுப் பள்ளத்தாக்குகளில் ஐந்நூறுக்கும் மேற்பட்ட தொல்லியல் ஆய்வுக்குரிய களங்களைக் கண்டறிந்துள்ளார். தென் இந்தியாவின் வரலாற்று வரைபட நூல் உருவாக்கத்திலும், தாண்டிக்குடி, கொடுமணல், கொடைக்கானல் அகழ்ஆய்வுகளிலும் மிகுந்த ஆர்வத்துடன் பங்காற்றியுள்ளார். மேலே குறிப்பிட்ட தொல்லியல் ஆய்வுக் களங்கள் பட்டியல் நூலின் இணையாசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.

நூலின் உள்ளடக்கம்:

A4 அளவிலான இந்நூல் பதினான்கு இயல்களைக் கொண்டதாய் 600க்கும் மேற்பட்ட பக்கங்களுடனும் மிகுதியான ஒளிப்படங்களுடனும் இரு தொகுதிகளாக வெளிவந்துள்ளது. முதல் தொகுதி பதினான்கு இயல்களுடன் முந்நூற்று அறுபது பக்கங்களில் அமைந்து அகழ்ஆய்வுக் களமான பொருந்தல் கிராமத்திற்குள் மட்டுமின்றி கடந்த காலத் தமிழ் நாட்டின் இரும்புக் காலம், புதிய கற்காலம் என நூற்றாண்டுகளைக் கடந்து பின்னோக்கி அழைத்துச் செல்கிறது.

இரண்டாவது தொகுதியில் ஏழு பின்னிணைப்புகள் இடம் பெற்றுள்ளன. (1) அமராவதி ஆற்றுப் பள்ளத்தாக்கின் முக்கிய தாவரவகைகள். (2) இப்பகுதியின் தொல்லியல் களங்களின் பட்டியல். (3) இக்களங்கள் குறித்த செய்திகள். (4) இப்பகுதியின் கல்வெட்டுக்கள் (5)) தென் இந்தியாவின் கண்ணாடி குறித்த புதிய ஆய்வுகள் january 2012 (6) பொருந்தலின் phytolith ,palynological ஆய்வுகள் (7) பொருந்தல் அகழ்ஆய்வகளில் கிட்டிய மட்கலங்களின் தாதுக்கள் குறித்த ஆய்வு.

இவற்றுடன் ஆய்வில் துணை நின்ற நூல்களின் விரிவான பட்டியலும், பொருள் சுட்டியும் இடம் பெற்றுள்ளன. உள்ளடக்கத்துடன் மட்டுமின்றி தெளிவான ஒளிப்படங்களுக்கும் குறைவில்லை. சுருங்கக்கூறின் ஆழமான உள்ளடக்கத்திற்கு ஏற்ப நூலின் வடிவமைப்பும் சிறப்பான முறையில் அமைந்துள்ளது

இந் நூலைப் படித்துமுடித்தவுடன் ஒருவகையான பெருமித உணர்வு நம்மிடையே தோன்றுவதைத் தவிர்க்க இயலாது. ஆனால் வெறும் உணர்ச்சி சார்ந்த ஒன்றாக இன்றி அறிவியல் சார்ந்த ஒன்றாக நூலாசிரியர்கள். உருவாக்கியுள்ளனர். கட்டுரையின் பக்க நீட்சியைத் தவிர்க்கும் வழிமுறையாக இந்நூலின் முதல் தொகுதியின் உள்ளடக்கம் மட்டுமே இங்கு சுருக்கமாக அறிமுகமாகிறது.

பொருந்தல்:

அமராவதி ஆற்றின் பள்ளத்தாக்குப் பகுதியில் கரூர், நெடுங்கூர், பொருந்தல், தாண்டிக்குடி என்ற நான்கு முக்கிய தொல்லியல் அகழ்ஆய்வுக் களங்கள்.

உள்ளன. இவற்றுள் திண்டுக்கல் மாவட்டத்தில் மேற்குத்தொடரச்சி மலை அடிவாரத்தில் உள்ள ஒரு சிறிய கிராமமே பொருந்தல். சங்ககாலக் கவிஞர்களில். ஒருவரான இளங்கீரனார் என்பவர் பொருந்தில் என்ற ஊர்ப்பெயரை அடைமொழி. யாகப் பெற்றுள்ளார். இப் பொருந்தில் இன்று பொருந்தலாக மருவியுள்ளது என்ற கருத்து உள்ளது.

இது திண்டுக்கல் நகரில் இருந்து தென்மேற்கே 56. கி.மீ. தொலைவிலும் பழனி நகருக்குத் தென் மேற்கில் 12. கி.மீ.தொலைவிலும் உள்ளது. பொருந்தலாறு என்ற பெயர் கொண்ட ஆற்றின் கரையில் அமைந்தமையால் இப்பெயரைப் பெற்றுள்ளது. (இதே ஆறு பழனியில் சண்முகா ஆறு என்ற பெயரால் அழைக்கப்படுகிறது).

பொருந்தலைச் சுற்றித் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த பல இடங்கள் உள்ளன (மேற்குறித்த நூல் 2014:43).

பொருந்தல் அகழ்ஆய்வுகள்:

பொருந்தலில் 2009, 2010 ஆண்டுகளில் இருகட்டங்களாக நடந்த அகழாய்வில் வாழ்விடப் பகுதிக்கு மேற்கே உள்ள இடுகாட்டில் இறந்தோரைப் புதைக்கும் நான்கு ஈமக்குழிகள் கண்டறியப்பட்டன. ஆய்வறிக்கையில் அடையாளப்படுத்தும் நோக்கில் இவற்றிற்கு M1, M2, M3, M4, எனத் தனியே அடையாள எண்கள் இடப்பட்டன. இப் பகுதியில் கிடைத்த கண்ணாடிமணிகளும் அவற்றை உருக்கும் உலைகள் காணப்பட்டமையும் இங்கு வாழ்ந்த மக்கள் கண்ணாடி மணிகளை உருவாக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்தனர் என்பதை வெளிப்படுத்தின. அடுத்து இப் புதைகுழிகள் நான்கிலும் நெல்மணிகளைக் கொண்ட நான்கு கால்களுடன் கூடிய சுடுமண் கலன்கள் (சாடிகள்) இருந்தன. ஈமக் குழிகளில் சில பொருள்களையும் இறந்தோர் உடலுடன் சேர்த்துப் புதைக்கும் உலகளாவிய மரபு இங்கும் நிலவியுள்ளது.

ஆய்வுக்குழுவில் இடம் பெற்றிருந்த முனைவர் பிரேமலதா(சிரிலங்காவின் பட்டமேற்படிப்புத் தொல்லியல் நிறுவனம்) முனைவர் னுபமா (புதுச்சேரி பிரெஞ்சு ஆய்வு நிறுவனம்) என்ற தொல்லியல் அறிஞர்கள் இருவரும் இந் நெல்மணிகளை ஆய்வு செய்து இவை இயற்கையாக வளர்ந்த நெற்பயிரின் மணிகளல்ல. பயிர்செய்த நெல்லின் மணிகள் என்று அறிவித்தனர்.

அகழாய்வில் வெளிப்பட்டவை:

மேற்கண்ட நான்கு ஈமக்குழிகளை அகழ்ந்தெடுத்ததன் வாயிலாகக் கிடைத்த பயன்களை நூலாசிரியர்கள் பின்வருமாறு தொகுத்துரைத்துள்ளனர்:

1. ஒரே ஈமக்குழியில் 8533 கண்ணாடி மணிகள் கண்டறிந்தமை
2. ஒரு ஈமக்குழியில் உயர் எண்ணிக்கையில் 328 குவார்ட்ஸ் மணிகளைக் கண்டறிந்தமை
3. ஒரு ஈமக்குழியில் 7020 steatite மைக்ரோ மணிகள் கண்டறிந்தமை
4. நான்கு ஈமக்குழிகளிலும் நெல் கண்டறிந்தமை
5. தமிழ்பிராமி எழுத்துப் பொறிப்புடன் கூடிய இரண்டு மோதிரம் தாங்கிகளை(பிரிமணை) கண்டறிந்தமை. இவை கி. மு. ஐந்தாம் நூற்றாண்டுக் காலத்தவை.
6. ஈமக்குழிப் பொருள்களில் ஒன்றாக வைக்கப்பட்ட அதிக எண்ணிக்கையிலான பானைகள்.

இப்படிப் பொதுப்படையாகக் கூறிவிட்டு, ஒவ்வோன்றையும் தனித்தனியாக விரிவாக ஆராய்ந்துள்ளனர். இவற்றுள் காலக்கணிப்புடன் இணைந்த மூன்று செய்திகள் மிகவும் ஆழமானவை என்பதுடன் தமிழ்நாட்டின் வரலாற்று வரைவில் பெரிய அளவிலான தாக்கத்தை ஏற்படுத்துபவை (பக்கம்:171) இது குறித்த இவர்களது, பங்களிப்பு இவர்கள் கண்டறிந்த நெல் மணிகளில் இருந்தே தொடங்குகிறது.

ஈமக்குழி நெல்லின் காலக்கணிப்பு:

பொருந்தலின் ஈமக்குழிகளில் கண்டெடுக்கப்பட்ட நெல்லின் காலத்தைக் கண்டறிந்தால் அதன் தொன்மை வெளிப்படும் என்பதன் அடிப்படையில் அதன் வகைமாதிரிகளை (சாம்பிள்கள்)அமெரிக்காவிலுள்ள பீட்டா ஆய்வகத்துக்கு அனுப்பினர். அங்கு நெல்லின் வகைமாதிரிகளை 'ரேடியோ மெட்ரிக் முறையில்' ஆய்வு செய்து இந் நெல் கி. மு. 490-520 (கி. மு. 5-6 நூற்றாண்டு) காலத்திற்கு உட்பட்டது என்று கண்டறிந்தனர்.

ஆசிரியர்களின் வரலாற்றுப் பார்வை:

இந்நூலின் அறிமுக உரையில் தென் இந்தியாவின் தொல்லியல் ஆய்வுச்சிக்கல்களைத் தொட்டுக்காட்டிவிட்டு மானுடகுல வளரச்சியில் இரும்பு யுகம் தொடங்கி வரலாற்றின் தொடக்க காலம் வரையிலான பண்பாட்டு மாற்றங்களைப்

புரிந்து கொள்வதென்பது தென் இந்தியத் தொல்லியலாளர்களுக்கு ஓர் அறைகூவலாக உள்ளது என்கிறார்கள். தம் பயன்பாட்டிற்காக. இயற்கை வளங்களைச் சுரண்டுதல் ஒவ்வொரு நிலப்பகுதியிலும் வகித்த மாறுபாடான நிலைகளைக் குறிப்பிட்டுள்ளதுடன் வாணிபத்தின் பங்களிப்பையும் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

வலுவான அகழ்ஆய்வுத் தரவுகளை வாசகன் முன்வைத்து ஒதுங்கிக் கொள்கிறார்கள். இத்தரவுகளே நூலாசிரியர்களின் வரலாற்று நோக்கை நாம் அறியச் செய்கின்றன. வரலாறு என்பது ஒரு சமூக அமைப்பில் இருந்து மற்றொரு சமூக அமைப்பிற்கு மாறுவதே என்ற ரொமிலா தாப்பரின் கூற்றை நினைவூட்டியுள்ளார்கள்.

தொல்லியல் அகழ் ஆய்வு என்பது முதுமக்கள் தாழி என்றழைக்கப்படும் ஈமத்தாழிகளை மட்டுமே மையமாகக் கொண்டது என்று பரவியுள்ள கருத்துக்கு மாறாகப் பொருந்தல் அகழ்ஆய்வகள் பாசிமேடு என்ற குடியிருப்புப் பகுதியிலும் பாண்டியன் காடு என்ற இடுகாட்டிலும் நிகழ்த்தப்பட்டுள்ளன. மேலும் ஆய்வுக்களத்தின் பொருள்சார் பண்பாட்டை ஆய்வுசெய்வது குறித்த தொலைநோக்கான குறிக்கோளை அவர்கள் கொண்டிருந்தமையை பின்வருமாறு வெளிப்படுத்தியுள்ளனர்.

(1) இரும்புக் காலம், வரலாற்றின் தொடக்ககாலம், (சங்க காலம்) மத்தியகாலம் என்பனவற்றை அடையாளப்படுத்தல். (2) வாணிப மையங்கள், வாணிபப் பாதைகளைக் கண்டறிதல். (3) குடியிருப்புகளின் அமைப்புகளையும், அமைப்பொழுங்குகளையும் ஆராய்தல் (4) இரும்புக் காலத்தில்இருந்து வரலாற்றின் தொடக்ககாலம்வரை நிகழ்ந்த பண்பாட்டு மாற்றங்களை மதிப்பீடு செய்தல். (5) கண்ணாடித் தொழில் நுட்பத்தை ஆராய்தல்(6) தமிழ்-பிராமி அறிமுகமான காலத்தை உறுதிப்படுத்தல்.

இக்குறிக்கோள்களுடன் இவர்கள் மேற்கொண்ட அகழ்ஆய்வகள் வழி வெளிக்கொணர்ந்த முக்கியவரலாற்று உண்மைகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். (1) இந்தியாவின் பிராமி எழுத்து முறையானது கி.மு.ஐந்தாம் நூற்றாண்டிலேயே அசோகர் காலத்துக்கு இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னரே தமிழ்நாட்டில் உருவாகிவிட்டது. (2) இந்தியாவின் வரலாற்றுத் தொடக்ககாலம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் இருந்துதான் தொடங்கியது என்று இதுவரை நிலவிவந்த கருத்துக்கு மாறாக கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலேயே தொடங்கி விட்டது. (3) நெல் சாகுபடியும். ஐந்தாம் நூற்றாண்டிலேயே அறிமுகமாகி இருந்துள்ளது.(4) இரும்புக் காலத்தில் உருவான பெருங்கற்கால (மெக்காலித்தி) கல்லறைகள் வரலாற்றின் தொடக்க காலத்திலும் தமிழகத்தில் தொடர்ந்துள்ளன.

இவர்கள் முன்வைத்துள்ள தரவுகள் பொருள் உற்பத்திமுறையும் அதன் விநியோகமும் வரலாற்றிலும் பண்பாட்டிலும் வகிக்கும் வகிபாகத்தைக் கண்டறிவதில் கொண்டு சேர்க்கிறது. நூலின் இறுதிப்பகுதியில் முன்வைத்துள்ள பின் வரும் கருத்துக்கள் இவர்களது வரலாற்றுப் பார்வையை வெளிப்படுத்துவதுடன் வரலாற்று வரைவில் ஈடுபடுவோருக்கு வழிகாட்டியாகவும் விளங்குகின்றன. இது, இந் நூலின் வழி அவர்கள் விடுக்கும் அறிவுரை அல்லது செய்தி எனலாம்.

‘தொல்லியல் மற்றும் வரலாற்றியலர்கள் ஒருவர்க்கொருவர் உதவிசெய்தல், விளக்குதல் வழி சமூகமாற்றத்தின் செயல்முறைகளைப் புரிந்து கொள்ளத் தீவிர முயற்சி எடுக்க வேண்டும். ஓர் அமைப்பிலிருந்து இன்னொரு அமைப்பிற்கு மாறும் வரலாற்றுச் செயல்முறையைத் தொடர்ச்சியான ஒன்றாகப் பார்க்கவேண்டும். தொல்லியல், கல்வெட்டு, இலக்கிய மற்றும் நாணயவியல் தரவுகள் அரசியல், சமூக, பொருளாதார, மதச் சூழலுடன் பொருத்தி பகுப்பாய்வு செய்யப்படவேண்டும். ஒரு குறிப்பிட்ட வகை முதன்மைச் சான்றுகள் ஒரு குறிப்பிட்ட கருத்திற்கு அழுத்தம் தரலாம்.சான்றாக, தமிழ்நாட்டின் தொடக்ககாலத்திய வரலாற்றுச் சான்றுகளான தமிழ் பிராமிக் கல்வெட்டுக்கள். சமண சமயத்தை முதன்மைப் படுத்துகின்றன. அதேபோழ்து சங்க இலக்கியங்கள் சமண சமயத்தைப் புறக்கணித்துள்ளன.எனவே ஒவ்வொரு சான்றுகளின் தன்மையையும் உள்ளடக்கத்தையும் புரிந்து கொள்ள அது உருவான சூழலைக் கண்டறியவேண்டும்.’

துணை நூல்கள்

- ராஜன் கா. (2010) **தொல்லியல் நோக்கில் சங்ககாலம்.**
- 2018, தமிழ் பிராமியின் காலம் - சிக்கல்களும் தீர்வுகளும், **ஆவணம்** 2018.
- Y.Subbarayalu 2012. ‘Tamil Epigraphy Past and present’ South India under The Cholas.

●

கட்டுரையாளர்: நாட்டார் வழக்காற்றியல் ஆய்வாளர்.

அஞ்சலி

வி.எஸ். தொழிலாளர்களின் தோழர்

1923 அக்டோபர் 20ஆம் தேதி ஆலப்புழையில் புன்னப்புரை என்னும் ஊரில் தையல் தொழிலாளரான சங்கரன், அக்கம்மாள் ஆகியோரின் இளைய மகனாக தோழர் அச்சுதானந்தன் பிறந்தார். அவர் பிறக்கும் போது கேரள சமூகம் மறுமலர்ச்சியின் தொடக்க காலத்தில் பயணித்தது. பொய்கையில் அப்பச்சன், அய்யங்காளி, ஸ்ரீ நாராயண குரு போன்றோர் கேரளத்தில் சமூக சீர்திருத்தத்தின் சிந்தனைகளை விதைத்தனர். மிகவும் வறுமையான சூழலில் தனது வாழ்க்கைப் பயணத்தைத் தொடங்கிய தோழர் வி. எஸ் நான்கு வயதில் தனது அம்மாவை இழந்தார். வைசூரி நோயால் பாதிக்கப்பட்ட அவரது அம்மா ஊருக்கு ஒதுக்குப்புறமாக கட்டப்பட்டிருந்த ஒரு குடிசையில் தான் தங்க வைக்கப்பட்டிருந்தார். தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட அவரை தூரத்தில் நின்று மட்டுமே அவரால் பார்க்கமுடிந்தது.

பின்பு 11ஆம் வயதில் தந்தையையும் இழந்தார்.

தந்தையின் மரணத்திற்குப்பிறகு வறுமை காரணமாக ஆப்பிரின் என்னும் ஆங்கிலேய கயிறு கம்பெனியில் வேலைக்குச் சேர்ந்தார்.

திருவிதாங்கூரில் சாதிய ஒடுக்குமுறை தலைவிரித்து ஆடியது. ஜமீந்தார்களும் திவான்மார்களும் ஆங்கிலேயர்களும் தொழிலாளர்களை கொத்தடிமைகளாகவே நடத்தினர்.

ஒரு பக்கம் சாதிய ஒடுக்குமுறை மற்றொரு பக்கம் முதலாளித்துவத்தின் சுரண்டல் தொழிலாளர்களின் வாழ்க்கை மிகவும் பரிதாபமாக நகர்ந்தது. தான் வேலை செய்த கயிறு தொழிற்சாலையில் தொழிலாளர்களுக்கு

Dr. பிரபாஹரன். கெ

குறைந்த கூலி வழங்கப்பட்டது. தொழிலாளர்களின் கூலி உயர்வை வலியுறுத்தி தொழிலாளர்களை திரட்டிப் போராட்டம் நடத்துவதற்காக வி.எஸ். துணிந்தார். அங்கிருந்துதான் அச்சுதானந்தன் என்னும் கம்யூனிஸ்ட் கட்டமைக்கப்படுகிறார்.

சுரண்டலுக்கு எதிரான முதல் போராட்டம் அவரது தலைமையில் இத்தொழிற்சாலையில் நடத்தப்பட்டது. அவருக்கு 14 வயது இருக்கும் போது இப்போராட்டம் நடைபெறுகிறது. ஆங்கிலேய ராணுவம் அவரைக் குறி வைக்கிறது. மீனவத் தொழிலாளிகள், கயிறு தொழிலாளிகள், காயங்குளத்தில் குட்டநாட்டில் விவசாய தொழிலாளர்கள் போன்றோரின் உரிமைப் போராட்டத்திற்காக குரல் கொடுக்கும் இளைஞராக மாறுகிறார். அவ்வேளையில் கேரளத்தின் தோழர்களின் தோழன் என்று அறியப்படும் தோழர் பி. கிருஷ்ண பிள்ளையிடம் அவர் அறிமுகமாகிறார். காங்கிரஸ் கட்சி உறுப்பினராக ஆரம்ப காலத்தில் அரசியல் வாழ்க்கையைத் தொடங்கிய அவர் இ. எம். எஸ். நம்பூதிரிபாடின் தலைமையிலான காங்கிரஸ் சோசியலிஸ்ட் பார்ட்டியில் இணைகின்றார். அன்று முதல் அவர் மனதளவில் கம்யூனிசத்தை ஏற்கிறார்.

இளமையிலேயே ஜமீன்தார்களின் கொடுங்கோல் ஆட்சி முறையை எதிர்க்கிறார். கொட்டாம்பட்டியில் கஞ்சி குடிக்க மாட்டோம், தம்புரான் என்று உங்களை அழைக்க மாட்டோம் என்னும் கோஷத்தை எழுப்பி விடுகிறார். அந்த முத்திரை வாக்கியத்தை குட்டநாட்டில் உள்ள விவசாயிகள் மனதார உள்வாங்கிக் கொண்டு ஜமீன்தார்களுக்கு எதிராகவும் ஆங்கிலேயர்களுக்கு எதிராகவும் எழுச்சி பெறுகின்றனர். அத்துடன் வி. எஸ். அச்சுதானந்தன் ஒரு தொழிலாளி சமூகத்தின் இளம் தலைவராக மாறுகிறார். அவரை ஆங்கிலேய அதிகாரிகள் குறி வைக்கின்றனர். 1930களில் கம்யூனிஸ்ட் கட்சி தடைச் சட்டம் திருவிதாங்கூரில் அமலாகிறது.

கம்யூனிஸ்ட் கொள்கையின் அடிப்படையில் செயல்படுபவர்களை தேடிப்பிடித்து ஆங்கிலேயர்களும் அவர்களுக்கு உடந்தையாக செயல்பட்ட மன்னர்களின் சிப்பந்திகளும் வேட்டையாடினர். எனினும் கேரளத்தில் கம்யூனிஸ்ட் போராட்டம் அதிதீவிரமாக நடைபெற்றது. திருவிதாங்கூரை ஆண்டு வந்த மன்னர்களில் ஒருவரான திவான் சர் சி. பி, கம்யூனிஸ்டுகளாக செயல்பட்டு வரும் இளம் தோழர்களை வேட்டையாடுவதற்கான உத்தரவைப் பிறப்பிக்கிறார். அக்காலத்தில் கம்யூனிஸ்ட்வாதிகள் தலைமறைவு வாழ்க்கையை மேற்கொள்கின்றனர். அவ்வாறு ஆலப்புழாவில் விவசாயிகளை ஒன்று சேர்த்து புன்னப்புரை- வயலார் போராட்டம் நடைபெறுகிறது. வெறும் 23 வயதை மட்டுமே எட்டி இருந்த வி. எஸ் அச்சுதானந்தன் முழுமனதாக அதில் செயல்பட ஆரம்பித்தார். பலமுறை ஆங்கில ராணுவத்தால் அவர் வேட்டையாடப்படுகிறார். எனினும் மீண்டும் கிடைத்த சந்தர்ப்பங்களில் எல்லாம் தலைமறைவு வாழ்க்கையின் போதும் கூட போராட்டத்தின் கிளர்ச்சியை ஏற்படுத்தும் விதமாக தோழர் அச்சு தானந்தன் செயல்பட்டு வருகிறார்.

அன்றைய திருவிதாங்கூர் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் டி. பி பத்ரோஸின் வேண்டுதலுக்கு இணங்க தோழர் சச்சிதானந்தன் கோட்டயத்தை அடுத்துள்ள பாலா என்னும் ஊருக்கு தலைமறைவு வாழ்க்கையை வாழ்வதற்காக அனுப்பி விடப்படுகிறார். அப்போது கம்யூனிஸ்ட் தலைவர்களின் பெயர் மாற்றப்படும். அவ்வாறு வி. எஸ் அச்சுதானந்தனுக்கு அலெக்ஸ் என்னும் பெயர் அளிக்கப்பட்டது. அவர்களுக்கென்று செய்திகளைக் கொண்டு செல்ல கம்யூனிஸ்ட் ரகசிய தோழர்கள் செயல்படுவார்கள். அவர்கள் ரகசிய தூதுவர்கள் டாக் என்று அழைக்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் வி.எஸ்.அச்சுதானந்தனின் அருகில் சென்று கட்சி கொடுத்த காகிதத்தை கொடுத்து திரும்பும் வழியில் திருவிதாங்கூர் போலீஸ்காரர்கள் சந்தேகத்தின் பெயரில் சிறை பிடித்தனர். 1946 அக்டோபர் மாதம் 23ஆம் தேதி அது அரங்கேறியது. அதன் பின் போலீஸ்காரர்கள் அவரைத் தங்களுடைய கஸ்டடியில் ஸ்டேஷனுக்கு கொண்டு சென்றனர். இதற்கிடையே அச்செய்தி ஆலப்புழையில் சி. ஐ. டியாக இருந்த வாசு பிள்ளை என்னும் அதிகாரிக்கு கைமாறப்பட்டது.

இங்கு தலைமறைவாக இருந்த ஒருவரை கைது செய்துள்ளோம். அவரின் பெயர் அலெக்ஸ் என்று கூறுகிறார். தாங்கள் தேடிக் கொண்டிருந்த அந்த அச்சுதானந்தன் தான் இவரா? என சந்தேகமாக உள்ளது. ஆகையால் நீங்கள் இங்கு விரைந்து வரவும் என்று அறிவிக்கப்பட்டது.

இதை கேட்டு ஆனந்தம் அடைந்த சி.ஐ.டி வாசுபிள்ளை உடனடியாக பாலா போலீஸ் ஸ்டேஷனுக்கு சென்றார். அங்கு சென்றபோது அச்சுதானந்தனை அடித்து சித்திரவதைப்படுத்திக் கொண்டிருந்தார்கள். கம்யூனிஸ்டுகளைப் பற்றி அவர்கள் ஒளிந்திருக்கும் இடத்தைப் பற்றி கூறவில்லை என்றால் அடித்துக் கொன்று விடுவோம் என்று போலீசார் மிரட்டினர். அதற்கு ஒத்துழைப்பு வழங்காத அச்சுதானந்தன் எவ்வளவு அடி வாங்க முடியுமோ அவ்வளவு அடியை வாங்குகிறார். போலீஸ் அவரை சக்கையாகப் பிழிந்து எடுத்தது. இதனிடையே அவரை அடையாளம் காட்டுவதற்காக ஆலப்புழா ஸ்டேஷனிலிருந்து வந்திருந்த வாசுபிள்ளை அவரை மேலும் சித்திரவதைப்படுத்த முடிவு செய்கிறார். சாக்குகளிலும் துணிகளிலும் கருங்கல் கட்டப்பட்டு அவ்வுடல் அடித்து சின்னாபின்னம் ஆக்கப்பட்டது. எவ்வளவு அடித்தாலும் அவர் தனது

தோழர்களை காட்டிக் கொடுக்க மறுத்தார். பின்பு அங்கிருந்த போலீஸ்காரர் லாக்கப் கம்பிகள் வழியாக அவருடைய காலை இழுத்து வைத்து தனது கையில் இருந்த பயோனட்டை வைத்து பாதத்தில் குத்தி ஒரு ஓட்டையை போட்டார். ரத்தம் பொதுபொதுவென ஒழுகியது. உறுதியுள்ள கம்யூனிஸ்ட் ஆக இருந்த வி. எஸ் தன்னை எவ்வளவு சித்திரவதைப்படுத்தினாலும் தனது தோழர்களைப் பற்றி ஒரு வார்த்தை கூட கூறக்கூடாது என்ற உறுதியோடு இருந்தார்.

போலீஸ்காரர்கள் அவர் இறந்து விடுவார் என்று முடிவு செய்தனர். பின்பு அங்கு நிரந்தரக் குற்றவாளியாக இருந்த கள்ளன் கோலப்பன் என்ற கைதியின் உதவியுடன் அந்த உடம்பை போலீஸ் ஜிப்பில் ஏற்றினர். மீனச்சல் ஆற்றின் கரையோரமாக அவ் உடலை தூக்கி எறிய போலீஸ்காரர்கள் திட்டமிடுகின்றனர். ஆனால் போகும் வழியில் உடம்பு அசைவது போல் அந்தக் கைதி கோலப்பனுக்கு தோன்றியது. போலீஸ்காரர்களிடம் "சார் உயிர் இருக்கிறது, இவரை அரசாங்க மருத்துவமனைக்குக் கொண்டு போனால் காப்பாத்தி விடலாம்" என்றார். சரி அவ்வாறே ஆகட்டும் என்று போலீஸ்காரர்கள் சம்மதித்தனர். அவ்வாறு மாசக்கணக்கில் ஆஸ்பத்திரியில் பராமரிக்கப்பட்டு அச்சுதானந்தனின் உயிர் காப்பாற்றப்பட்டது. போராட்டத்திற்கான மறுஜென்மம் அது. அத்துடன் அச்சுதானந்தனின் போராட்டம் பல மடங்கு அதிகரித்தது.

பாவப்பட்டவர்களுக்காகவும், தொழிலாளர்களுக்காகவும், சமூகத்தில் ஒதுக்கி வைக்கப்பட்டவர்களுக்காகவும் அவருடைய சத்தம் ஒலித்துக் கொண்டே இருந்தது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் தேர்தல் வெற்றி கேரளத்தில் சாத்தியமானது. ஒருங்கிணைந்த கேரளத்தில் 1956இல் நடைபெற்ற தேர்தலில் 60 சீட்டுகளைப் பெற்றது. ஐந்து சுயேட்சைகளின் உதவியுடன் கம்யூனிஸ்ட் கட்சி அதிகாரத்தில் ஏறியது. ஆனால் 1957ல் அதில் ஒரு குறுக்கீடு ஏற்பட்டது. தேவிகுளம் சட்டமன்ற தொகுதியில் இருந்து வெற்றி பெற்ற ரோசம்மா புன்னூஸ் என்னும் கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளருக்கு எதிராக போட்டியிட்ட காங்கிரஸ் கட்சியின் பிரபலமான தலைவர் பி. கே நாயரின் வேட்பு மனு போதுமான காரணங்கள் இல்லாமல் தள்ளுபடி செய்யப்பட்டதை ஒட்டி காங்கிரஸ் கட்சியினர் தொடர்ந்த தேர்தல் வழக்கு வெற்றி பெற்று அத்தொகுதியில் இடைத்தேர்தல் நடத்த உத்தரவிடப்பட்டது. அப்போது வி. எஸ் அச்சுதானந்தனின் போராட்ட குணத்தை காணமுடிந்தது. கம்யூனிஸ்ட் கட்சியின் ஆலப்புழா மாவட்ட செயலாளராக இருந்தபோது தான் அச்சுதானந்தன் அத்தேர்தல் கமிட்டியின் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

ஆறு மாதமும் கடுமையான குளிர் நிலவும் மூணாறுக்கு அவர் வந்து சேர்ந்தார். கட்சிக்கு சொந்தமாக கட்டிடம் கூட இல்லை. எல்லாம் ஆங்கிலேயர்களின் பிடியில் இருந்தது அல்லது பெரிய பெரிய முதலாளிகளின் கைவசம் மட்டுமே இருந்தது. மூணாறில் 1975 வரை ஆங்கில வியாபாரிகளின் ஆட்சி தான் நடைபெற்றது. பெயருக்கு மட்டுமே மூணார் சுதந்திர இந்தியாவின் ஒரு பகுதியாக அறியப்பட்டிருந்தது. தனது இளமைக்காலம் முதல் ஆங்கிலேயர்களின் அதிகாரத்தையும் அவர்களுடைய அடாவடித்தனத்தையும் கண்டு வளர்ந்த அச்சுதானந்தன் அதனைக் கண்டு அஞ்சவே இல்லை. தொழிலாளர்களை தன்னுடன் சேர்த்தார். ஒரு எஸ்டேட்டிலிருந்து மற்றொரு எஸ்டேட்டிற்கு செல்ல வேண்டுமானால் சுமார் மூன்று முதல் ஆறு கிலோமீட்டர் தூரம் வரை நடக்க வேண்டும். தொழிலாளர்கள் தங்கி இருந்த லாயங்கள் ஆங்கிலேய கண்காணிமாரின் கண்காணிப்பில் இருந்தது. கம்பெனியில் வேலை செய்யாதவர்கள் யாரும் அங்கு நுழையகூட முடியாத நிலை ஏற்பட்டது. தொழிலாளி சமூகத்திலிருந்து உயர்ந்து வந்த தொழிற்சங்கத் தலைவர்களின் துணையுடன் தோழர் அச்சுதானந்தன் 36 எஸ்டேட்டுகளையும் சென்றடைந்தார். பகலும் ராத்திரியும் தேர்தல் வேலையில் ஈடுபட்டார். தமிழ்நாட்டில் இருந்து கொண்டு வரப்படும் அரிசி, சர்க்கரை, தானியங்கள் போன்றவற்றின் சாக்குகளில் தான் அவர் படுத்து உறங்கினார்.

அன்று துடிப்புடன் செயல்பட்ட 11 இளம் தோழர்களையும் தன்னுடன் சேர்த்துக் கொண்டார். அவர்களில் பெரும்பாலானோர் மூணார் நகரத்தை சுற்றி அமைந்திருந்த ஹோட்டல்களில் கூலி வேலை செய்து வந்தனர். அவர்களின் உதவியுடனே அந்த நாட்களைக் கழித்தார். சில நேரம் உணவு கிடைக்கும். சில நேரம் உணவு கிடைக்காது. ஹோட்டலில் மிச்சம் மீதி உள்ள உணவுகளைக் கொண்டு வந்து தோழர்கள் அவருக்குக் கொடுப்பர். எஸ்டேட் தொழிலாளர்களின் வீடுகள் அதைவிட பரிதாபமான நிலையில் இருந்தது. அங்கிருந்து அவருக்கு ஒரு கம்பளி கூட கிடைக்காது எனினும் தொழிலாளத் தோழர்கள் அவர்களால் முடிந்த அளவிற்கு தங்களது தோழரான அச்சுதானந்தனுக்கு உதவி செய்து வந்தனர்.

இவ்வாறு நாட்கள் நீங்கின. பரபரப்பான அந்தத் தேர்தல் கேரளத்தை மேலும் பரபரப்பாகியது. காங்கிரஸின் தேர்தல் பிரச்சாரத்திற்காக தமிழ்நாட்டின் முதிர்ந்த காங்கிரஸ் தலைவர் கர்மவீரர் காமராஜர் மூணார் பகுதிக்கு வருகை தந்தார். அப்போதைய காங்கிரஸ் தலைவர் இந்திரா காந்தி போன்றோர் அந்த தேர்தல் பிரசாரத்தில் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளருக்காக களம் இறக்கப்பட்டனர். ஆனால் அச்சுதானந்தன் பிரமுகர்கள் யாரையுமே களம் இறக்கவில்லை. இளையராஜா அவரது அண்ணன்

பாவலர் பாஸ்கரன் போன்றோரின் குழுவைப் பயன்படுத்தி இசையால் தொழிலாளர்களிடம் ஓட்டு வாங்க முயற்சி செய்தார். மட்டுமன்றி காங்கிரஸ் கட்சியில் இருந்து விலகி இருந்த எம். ஜி. ஆர். மூணாருக்கு ஒரு படப்பிடிப்பிற்காக வந்திருந்தார். அவரையும் தங்களுக்கு சாதகமாக வி. எஸ் பயன்படுத்திக் கொண்டார்.

மூணார் ஒரு தொழிலாளர்களின் களம் ஆகையால் தேர்தல் செலவிற்கு பணப்பற்றாக்குறை ஏற்பட்டது. தமிழகத்திலிருந்து வந்திருந்த தோழர் ஜீவானந்தம், ராமமூர்த்தி போன்றோரின் உதவியுடன் தமிழகத்தில் பிற பகுதிகளுக்கும் இந்தியாவின் பிற பகுதிகளுக்கும் கடிதங்களை அனுப்பினார். தோழர்கள் தங்களால் முடிந்த பணத்தை காசோலையாக அனுப்ப வேண்டும் என்று கடிதத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டது. அவ்வாறு தொழிலாளர்களும் தோழர்களும் தங்களால் முடிந்த பணத்தை மூணாறுக்கு அனுப்பினர்.

தேர்ந்தெடுப்பு செலவு போக மீதமுள்ள பணத்தை அங்குள்ள கட்சித் தலைவர்களிடம் கொடுத்து கட்சி ஆபீஸில் கட்ட வேண்டும் என்று கூறி நிதியை ஒப்படைத்துவிட்டு அச்சுதானந்தன் மூணாறில் இருந்து வெளியேறினார். சில நாட்களுக்குப் பிறகு தேர்தல் முடிவு வெளிவந்தது. அதில் கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளார் ரோசம்மா புன்னூஸ் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளர் பி. கே நாயரை விட 7800 வாக்குகள் முன்னிலை பெற்று வெற்றி அடைந்தார். ஒருங்கிணைந்த கேரளத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் மகத்தான வெற்றிகளில் ஒன்றாக அந்த வெற்றி வரலாற்றில் இடம் பிடித்தது. ஏனெனில் 60 சீட்டை மட்டுமே பெற்றிருந்த கம்யூனிஸ்ட் கட்சி 5 சுயேட்சை எம்எல்ஏக்களுடன் ஆட்சியைத் தக்க வைத்தது. இவ்வாறு செல்லும் இடங்களெல்லாம் போராட்டத்தின் தீயைப் பற்ற வைத்த தோழர் வி. எஸ். ஒரு நூற்றாண்டின் கம்யூனிஸ்ட் வரலாற்றை போராட்டத்தால் நிரப்பினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாற்றில் இது போன்ற ஒரு தலைவர் அரிது. அச்சுதானந்தன் மக்களின் தலைவர். அவர் செல்லும் இடமெல்லாம் எப்பொழுதும் சாதாரணத் தொழிலாளர்கள், குழந்தைகள், விவசாயிகள், பெண்கள் மற்றும் இளைஞர்கள் அவரைப் பற்றிக் கொள்வர்.

அவர் முன்னெடுக்கும் எல்லாப் பிரச்சினைகளும் மக்கள் பிரச்சினைகளாகவே இருந்தது. கடந்த காலங்களில் அவர் உயர்த்திய பிரச்சினைகள் எல்லாம் ஏழை எளியவர்களின் பிரச்சினைகளாக இருந்ததற்கு காரணம் அவர் தனது கொள்கையில் என்றும் உறுதியானவராக இருந்தார். முதலாளித்துவ சாம்ராஜ்யத்துவ சக்திகளுக்கு அவர் எப்போதுமே பயப்படவில்லை. மூணார் தேயிலைக்காடுகளில் நடைபெற்ற பொம்பிளை ஒருமைப் போராட்டம் அதற்கு ஒரு எடுத்துக்காட்டாக அமைகிறது.

2015 செப்டம்பர் மாதத்தில் கிட்டத்தட்ட எட்டு நாட்களாக மூணார் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் சம்பள உயர்வுப் போராட்டத்தை நடத்தி வந்தனர். அப்போராட்டத்தை கேரள சமூகம் முக்கியமான போராட்டங்களில் ஒன்றாகக் கருதியது. அரசியல்வாதிகள் அப்புறப்படுத்தப்பட்டனர். ஆனால் போராட்டக் களத்தில் வி. எஸ் அச்சுதானந்தன் என்னும் புரட்சியாளர் வந்தவுடன் எட்டு மணி நேரத்தில் அப்பிரச்சனைக்கு ஒரு முடிவு ஏற்பட்டது. தொழிலாளர்களின் சம்பளம் உயர்த்தப்பட்டது. தலைமுறை தலைமுறையாக மூணாறை மூணாறாக மாற்றிய தொழிலாளர்களுக்கு சொந்தமாக ஒரு 10 சென்ட் இடத்தையாவது வழங்க வேண்டும் என்று நிரந்தரமாக கம்பெனிக்காரர்களிடமும் அரசாங்கங்களிடமும் முறையிட்டுக் கொண்டே இருந்தார். அது மட்டுமல்லாமல் அவர் முதலமைச்சராக இருந்தபோது டாட்டா கம்பெனியினர் கையகப்படுத்திய ஆயிரக்கணக்கான ஏக்கர் சர்க்கார் பூமியை மூணாறில் பிடித்தெடுத்தார்.

அது முறைப்படி தொழிலாளர்களுக்கு போய்ச் சேர வேண்டும் என்று குரல் கொடுத்தார். ஆகையால் அவரை சாதாரண மக்கள் 'போராளிகளின் போராளி' என்றே அழைக்கின்றனர். இவ்வாறு சென்ற இடமெல்லாம் தோழர் வி. எஸ். தொழிலாளர்களின் தோழரானார்.

ஆகையால் இந்நூற்றாண்டில் வாழ்ந்த கம்யூனிசவாதிகளின் மாதிரியாக அவர் மக்கள் மனதில் நீங்காத இடம் பெற்றுள்ளார். தமிழகத்தின் தலைசிறந்த கம்யூனிஸ்ட்வாதிகளான தோழர் சங்கரய்யா, தோழர் நல்லகண்ணு போன்றோரைப் போல கேரள மக்களின் மனதில் அவரும் நீங்காத புரட்சியாளராக மரணத்திற்குப் பிறகும் தொடர்வார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வரலாற்றில் தலைசிறந்த தலைவர்களாகக் கருதப்படும் இ. எம். எஸ், ஏ. கே. ஜி போன்றோர் தங்களை தொழிலாளி வர்க்கத்தின் தத்துப் பிள்ளை என்றே அடையாளப் படுத்திக்கொள்ள ஆசைப்பட்டனர். அவ்வாறே மக்களால் அழைக்கப்பட்டனர்.

ஆனால் வி. எஸ் என்றுமே தொழிலாளி வர்க்கத்தின் சொந்த மகனாகவே தொழிலாளர்களின் மனதைக் கவர்ந்துவிட்டார். ஆகையால் தான் இந்நூற்றாண்டில் நடைபெற்ற மனிதர்களுக்கான போராட்டங்களில் வி. எஸ் என்னும் இரண்டு எழுத்து போராட்டத்தின் முகமுத்திரையாக பதிக்கப்பட்டது.

●

கட்டுரையாளர்: மூணாறு எழுத்தாளர்,
மார்க்சிய சிந்தனையாளர்.



வாசிப்புப் பழக்கம் பண்பாட்டைப் புரிந்துகொள்ள உதவியாக இருக்கும்

- மயிலாடுதுறை மருதசாமி

இலக்கிய வாசிப்பையும் கலைஇலக்கியப் பெருமன்றச் செயல்பாடுகளையும் இரு கண்களாகக் கருதி இயங்கி வருபவர் மயிலாடுதுறையைச் சேர்ந்த மருதசாமி. ஏறத்தாழ அறுபது ஆண்டு காலமாக தமிழில் வெளிவரும் இலக்கியப் படைப்புகளையும் பத்திரிகைகளையும் தொடர்ந்து ஆர்வமுடன் படித்து வருகிறார். எண்பது வயதைக் கடந்திருக்கும் அவர் இளமைத்துடிப்போடு இன்றும் தேடித்தேடி வாசித்து வருகிறார். அவருடைய வற்றாத ஆர்வமும் உற்சாகமும் நாம் அனைவரும் கற்றுக்கொள்ள வேண்டிய குணங்கள்.



சந்திப்பு: பாவண்ணன்

கேள்வி: உங்கள் இளமைக்காலத்தில் கல்விச்சூழல் எப்படி இருந்தது ? உங்களுக்கு வாசிப்புப்பழக்கம் எப்படி ஏற்பட்டது ?

பதில்: மயிலாடுதுறைக்கு அருகிலிருக்கும் அகரக்கீரமுடி என்னும் கிராமத்தில் ஒரு விவசாயக்குடும்பத்தில் நான் பிறந்தேன். என் அப்பாவின் பெயர் ரத்தினம். அம்மாவின் பெயர் ராஜம்மா. இரண்டு அண்ணன்மார்களை அடுத்து பிறந்தவன் நான். அப்பா விவசாயம் பார்த்து வந்தார். எங்கள் கிராமத்திலேயே இருந்த தொடக்கப்பள்ளியில் ஐந்தாம் வகுப்பு வரை படித்துவிட்டு ஐந்து கிலோமீட்டர் தொலைவில் இருந்த கூறைநாடு உயர்நிலைப்பள்ளியில் ஆறாம் வகுப்பில் சேர்ந்து படித்தேன். கிராமத்திலிருந்து பள்ளிக்கூடத்துக்கு நண்பர்களோடு கூட்டமாகச் சேர்ந்து நடந்துதான் சென்று திரும்புவோம். கிராமத்துக்கும் பள்ளிக்கும் இடையிலிருந்த கேணிக்கரை என்னும் இடத்தில் திருவள்ளுவர் படிப்பகம் என்ற பெயரில் ஒரு படிப்பகம் இருந்தது. நாளேடுகளும் வார மாத இதழ்களும் அங்கே வைத்திருப்பார்கள். அந்த ஊரைச் சேர்ந்த திராவிட இயக்கச் சார்புடைய இளைஞர்கள் கூட்டாகச் சேர்ந்து அந்தப் படிப்பகத்தை நடத்தி வந்தார்கள். அந்தப் படிப்பகத்துக்குள் சென்று நாளேடுகளையும் இதழ்களையும் படிக்கத்

தொடங்கினேன். படக்கதைகளைப் படிப்பதிலும் உலகச்செய்திகளை அறிந்துகொள்வதிலும் எனக்கு எப்போதும் ஆர்வம் உண்டு. அந்த ஆர்வம்தான் என்னை வாசிப்புப் பழக்கத்துக்குள் இழுத்து வந்தது. என் வயதொத்த இளைஞர்கள் பலரும் விளையாட்டில் ஆர்வமாக இருந்தபோது நான் படிப்பகத்தில் பத்திரிகைகளைப் படித்து பொழுது போக்குபவனாக இருந்தேன். ஒன்பதாம் வகுப்புக்கு வந்த பிறகு நகரிலேயே இருந்த மாணவர் விடுதியில் எனக்கு இடம் கிடைத்தது. அதனால் தினந்தோறும் கிராமத்துக்குச் சென்றுவர வேண்டிய அவசியம் இல்லாமல் போய்விட்டது. ஆகவே, எனக்குக் கிடைத்த ஓய்வுப்பொழுதுகளை பள்ளிக்கூடத்திலேயே இயங்கிவந்த நூலகத்தில் கழித்தேன். படிப்பகத்தில் இருந்ததுபோல பள்ளி நூலகத்தில் வார, மாத இதழ்கள் கிடைக்கவில்லை. செய்தித்தாள் மட்டுமே இருந்தது. கூடவே அடுக்கடுக்காக புத்தகங்கள் இருந்தன. ஏராளமான சிறுவர் கதை நூல்களும் அறிவியல் நூல்களும் இலக்கிய நூல்களும் இருந்தன. அவற்றை எடுத்து படிக்கத் தொடங்கினேன். அக்காலத்தில் மு. வரதராசனார் அவர்கள் எனக்குப் பிடித்த எழுத்தாளராக இருந்தார். அவர் எழுதிய தம்பிக்கு, அன்னைக்கு, தங்கைக்கு, நண்பர்க்கு என்னும் தலைப்புகளில் கடித வடிவில் அவர் எழுதிய புத்தகங்கள் எனக்கு மிகவும் பிடித்திருந்தன. ஒருவர் தம் வாழ்க்கையில் கடைபிடிக்கவேண்டிய நல்ல பழக்கவழக்கங்களைப் பற்றி மு. வ. தம் புத்தகங்களில் விரிவாகவே எழுதியிருந்தார். படிக்கப் படிக்க, அக்கருத்துகள் அனைத்தும் என் வாழ்க்கைப்பாதையை அமைத்துக்கொள்ள மிகவும் உதவியாக இருந்தன.

பள்ளிப்படிப்புக்குப் பிறகும் உங்கள் வாசிப்புப்பழக்கம் தொடர்ந்ததா ?

என்னை வடிவமைத்துக்கொள்ள உதவியதே அந்த வாசிப்புப்பழக்கம்தான். அது இல்லாமலிருந்தால், ஒரு பாமரனாக நான் எப்படி எப்படியோ ஆகியிருப்பேன். 1960ஆம் ஆண்டில் எஸ். எஸ். எல். சி. தேர்வில் நான் பள்ளியில் உயர்ந்த மதிப்பெண்களோடு தேர்ச்சி பெற்றேன். என் ஆசிரியர்களும் நண்பர்களும் என்னைக் கல்லூரியில் சேர்ந்து படிக்கும்படி அறிவுரை கூறினார்கள். ஆனால், நான் வேலைக்குச் செல்லவேண்டிய ஒரு நெருக்கடியில் இருந்தேன். அந்தக் காலத்தில் அஞ்சல்துறையில் பள்ளியிறுதித்தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் ஆட்களைத் தேர்ந்தெடுத்து மூன்று மாதப் பயிற்சியளித்து அஞ்சல்நிலையத்தில் எழுத்தர்களாகப் பணிநியமனம் செய்தார்கள். 1963இல் அப்படி ஒரு விளம்பரம் பத்திரிகையில் வந்தது. நான் மதிப்பெண் பட்டியலோடு அந்த வேலைக்கு விண்ணப்பித்தேன். மதுரை கோட்டத்தில் எனக்கு வேலை கிடைத்தது. அப்போது அறுபது ரூபாய் அடிப்படைச் சம்பளம். அகவிலைப்படியும் இதர படிகளும் சேர்ந்து கிட்டத்தட்ட நூறு ரூபாய் சம்பளமாகக் கிடைத்தது. அப்போது அது பெரிய தொகை. பயிற்சி முடிந்ததும் திண்டுக்கல் அஞ்சல் நிலையத்தில் பணியில் சேர்ந்தேன். திண்டுக்கல்லில் இருந்த நூலகத்தைத் தேடிச் சென்று அங்குக் கிடைத்த புத்தகங்களையும் வார மாத இதழ்களையும் படிக்கத் தொடங்கினேன். அங்கு சென்று ஒரு மணி நேரம் உட்கார்ந்தால் கல்கி, விகடன், குமுதம் என பல இதழ்களையும் படித்துவிடலாம். மு. வ. வைத் தொடர்ந்து பிற எழுத்தாளர்களின் புத்தகங்களை அந்த நூலகத்தில்தான் எடுத்து வாசித்தேன். செலவைக் குறைத்து சிக்கனமாக இருந்து, பணத்தை மிச்சப்படுத்தி சொந்தமாகவும் புத்தகங்கள் வாங்கிப் படித்தேன். கல்கண்டு இதழ் அக்காலத்தில் நான் விரும்பிப் படித்த இதழ். அதில் வெளிவந்த தமிழ்வாணன் கேள்வி பதில் பகுதி எனக்கு மிகவும் பிடிக்கும். பல உலகத் தகவல்களையும் வரலாற்றுச் செய்திகளையும் சுருக்கமாகத் தெரிந்துகொள்ள அந்த வாசிப்பு எனக்கு உதவியது. திடீரென ஏற்பட்ட ஒரு யோசனையின் விளைவாக, அந்தக் கேள்வி பதில் பகுதிகளை மட்டும் இதழிலிருந்து வெட்டியெடுத்து ஒரு கோப்புக்குள் கட்டிவைத்து சேகரிக்கத் தொடங்கினேன். அதிக அளவில் அவை சேர்ந்ததும், அவற்றையெல்லாம் ஒரு தொகுதியாக பைண்டிங் செய்து பாதுகாப்பாக வைத்துக்கொண்டேன். அப்படி பல தொகுதிகள் என்னிடம் இருந்தன. வயதான பிறகு, தொடர்ந்து பாதுகாக்க முடியாத நிலை ஏற்பட்டபோது, அவற்றையெல்லாம் விருப்பத்தோடு கேட்ட நண்பர்களுக்குக் கொடுத்துவிட்டேன். திண்டுக்கல் அஞ்சல்நிலையத்தில் வேலைக்குச் சேர்ந்ததும் அங்கு ஏற்கெனவே இயங்கிவந்த தொழிற்சங்கத்தில் இணைந்துகொண்டேன். தொழிற்சங்கத்தில் பல நல்ல வாசகர்கள் இருந்தனர். அந்த உறவும் நெருக்கமும் என் வாசிப்புப்பழக்கம் தொடரக் காரணங்களாக இருந்தன. காரைக்குடியில் பணியாற்றிய ஜெகன் போன்ற தலைவர்களோடு நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. எளிமை, நேர்மை, அர்ப்பணிப்பு, போராட்டம் ஆகியவை

அவருடைய அடையாளங்கள். தாமரை இலக்கிய இதழ் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அப்போது தி. க. சி. அவர்கள் அந்த இதழுக்கு ஆசிரியராக இருந்தார். ஒவ்வொரு மாதமும் தாமரை இதழைப் படித்ததும் அதில் வெளிவந்த படைப்புகள் குறித்து ஒரு கடிதம் எழுதி அந்த இதழுக்கு அனுப்பிவிடுவேன். பல சமயங்களில் தி. க. சி. என் கடிதத்துக்குப் பதில் எழுதியிருக்கிறார். வெகுகாலம் அக்கடிதங்களையெல்லாம் நான் பாதுகாப்பாக வைத்திருந்தேன். சமீபத்தில்தான் எப்படியோ தொலைந்துவிட்டன. அஞ்சல் துறையில் இணைந்த பிறகும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக என் வாசிப்புப்பழக்கமும் தொடர்ந்தது. தொழிற்சங்கப் பொறுப்பில் இருந்த ஜெகன், அக்காலத்தில் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்திலும் தீவிரமாகச் செயல்பட்டு வந்தார். அவருடைய பங்களிப்புடன் 1968இல் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மூன்றாவது மாநில மாநாடு திருச்சியில் நடைபெற்றது. குன்றக்குடி அடிகளார், நா. வானமாமலை, தொ. மு. சி. ரகுநாதன், தா. பாண்டியன், ஜெயகாந்தன் போன்றோரின் உரைகளை விரும்பிக் கேட்டேன். அந்த உரைகள் எனக்குப் புதிய வெளிச்சத்தைக் கொடுத்தன. அதுதான் நான் கலந்துகொண்ட முதல் இலக்கிய நிகழ்ச்சி. பல புதிய புத்தகங்களை அந்த வளாகத்தில் பார்த்துத்தான் தெரிந்துகொண்டேன். அவற்றையெல்லாம் வாங்கிவைத்துக்கொண்டு ஒவ்வொன்றாகப் படிக்கத் தொடங்கினேன்.

பல எழுத்தாளர்களை நேரில் பார்த்திருப்பதாகவும் உரையாடிப் பழகியிருப்பதாகவும் நீங்கள் சொல்லும் தகவல்களைக் கேட்க மகிழ்ச்சியாக இருக்கிறது. எந்த எழுத்தாளருடன் நீங்கள் முதலில் நெருங்கிப் பழகினீர்கள் ?

நா. பார்த்தசாரதிதான் நான் நெருங்கிப் பழகிய முதல் எழுத்தாளர். அப்போது அவருடைய குறிஞ்சிமலர் நாவலைத் தொடராக ஒவ்வொரு அத்தியாயத்துக்காகவும் காத்திருந்து படித்தேன். அரவிந்தன் இன்றளவும் என் மனத்துக்குள் பதிந்திருக்கும் இலட்சியக் கதாபாத்திரம். என் வழக்கப்படி, குறிஞ்சிமலர் தொடர்கதை அத்தியாயங்களை மட்டும் தனியே கத்தரித்துவைத்து பைண்டிங் செய்து வைத்திருந்தேன். பலருக்கு

அதைப் படிக்கக் கொடுத்திருக்கிறேன். அஞ்சல்நிலையத்தில் என்னோடு பணிபுரிந்த கல்யாணசுந்தரம் என்னும் நண்பர் எனக்கு மிகவும் நெருக்கமானவர். அவர் ஏதோ ஒரு வகையில் எழுத்தாளர் நா. பார்த்தசாரதி அவர்களோடு நல்லுறவில் இருந்தார். நா. பார்த்தசாரதி ஆண்டுக்கு ஒருமுறை கொடைக்கானலில் சில நாட்கள் தங்கிச் செல்வதை அவர்தான் எனக்குத் தெரிவித்தார். நான் நா. பா. வுடைய வாசகர் என்று தெரிவித்ததும், நா. பா. கொடைக்கானலுக்கு வந்திருந்த சமயத்தில் என்னை அழைத்துச் சென்று அவரிடம் அறிமுகப்படுத்தினார். அவர் என்னை ஒரு வாசகராகக் கருதாமல் சக நண்பராகவே என்னை நடத்திப் பழகியது எனக்கு மகிழ்ச்சியளித்தது. அடுத்தடுத்து நான் ஒவ்வொரு ஆண்டும் அவரைச் சந்தித்தேன். சில ஆண்டுகளுக்குப் பிறகு, மதுரை மாவட்டத்திலிருந்து மாற்றல் பெற்று நான் மயிலாடுதுறைக்கு வந்து சேர்ந்த பிறகுகூட எங்களுடைய மடல் தொடர்பு தொடர்ந்தது. சில இலக்கிய, கட்சி நிகழ்ச்சிகளுக்கு அவர் மயிலாடுதுறைக்கு வந்தபோதெல்லாம் நான் அவரைச் சந்தித்துப் பேசியதுண்டு. 1965ஆம் ஆண்டில் தமிழ்ப் புத்தாண்டு அன்று அவர் தீபம் என்னும் பெயரில் இலக்கிய மாத இதழைத்

தொடங்கினார். அது நான் மிகவும் விரும்பிப் படித்த இதழ். 1987 இறுதியில் நா. பார்த்தசாரதி மறைந்தார். அதையடுத்து 1988ஆம் ஆண்டில் தமிழ்ப் புத்தாண்டு அன்று வெளிவந்த இதழோடு தீபம் தன் பயணத்தை நிறுத்திக்கொண்டது. இடைப்பட்ட இருபத்து மூன்று ஆண்டுகளாக வெளிவந்த எல்லா இதழ்களையும் படித்து சேகரித்துவைத்திருந்தேன். நா. பா. அவர்களோடு பழகியதைப்போலவே எழுத்தாளர் சு. சமுத்திரம் அவர்களோடும் நெருங்கிப் பழகியிருக்கிறேன்.

சிறுகதை, நாவல், கட்டுரைகளில் எதை நீங்கள் விரும்பிப் படிப்பீர்கள் ?

என் பதில் உங்களுக்கு வியப்பை அளிக்கலாம். எந்த இதழாக இருந்தாலும் நான் முதலில் கட்டுரைகளைத்தான் விரும்பி வாசிப்பேன். அதற்குப் பிறகு அந்த இதழில் வெளிவந்திருக்கக்கூடிய நேர்காணல்களை விரும்பி வாசிப்பேன். நேர்காணல் ஒரு படைப்பாளியின் படைப்புலகத்தையும் அக உலகத்தையும் ஒருசேர நம் முன்னால் வைக்கிறது. இலக்கியம் என்பதற்கு அப்பால் ஓர் எழுத்தாளருடைய கருத்துநிலைகளையும் ஆர்வங்களையும் அறிந்துகொள்ள நேர்காணல்கள் உதவியாக இருக்கின்றன. கடந்த முப்பது நாற்பது ஆண்டுகளாக நான் படித்த பத்திரிகைகளில் வெளிவந்த நேர்காணல்களையெல்லாம் தனியே கத்தரித்து பைண்டிங் செய்து பல தொகுதிகளாக வைத்துள்ளேன். புதிய பார்வையில் வெளிவந்த உங்களுடைய நேர்காணல் பிரதி இல்லை என்று நீங்கள் சொன்னபோது, அதை நான் என்னுடைய தொகுப்பிலிருந்து பிரதியெடுத்துக் கொடுத்ததற்கு அந்தச் சேமிப்புதான் காரணம்.

உங்களைக் கவர்ந்த எழுத்தாளர் யார் ?

ஜெயகாந்தன்

ஜெயகாந்தனுடைய சிறுகதைகளிலும் நாவல்களிலும் உங்களுக்கு எது மிகவும் பிடிக்கும் ?

ஜெயகாந்தனின் ஒவ்வொரு படைப்பும் எனக்குப் பிடித்தமானதுதான். பிடிக்காதது என ஒன்றுகூட அவர் எழுத்துலகில் இல்லை. நீங்கள் கேட்டதற்காக, எனக்கு மிகமிகப் பிடித்த படைப்புகளைச் சொல்கிறேன். அக்கினிப்பிரவேசம், உண்மை சுடும், ஒரு பிடி சோறு, ட்ரெடில், யுகசந்தி, இலக்கணம் மீறிய கவிதை, பத்தினி பரம்பரை, சில நேரங்களில் சில மனிதர்கள், யாருக்காக அழுதான், ஒரு வீடு ஒரு மனிதன் ஒரு உலகம், கருணையினால் அல்ல, பாரிசுக்குப் போ. புத்தகத்தைப் பிரித்துப் பார்க்காமலேயே இப்போதுகூட இந்தக் கதைகளை நான் சொல்லமுடியும். அந்த அளவுக்கு மனத்தில் பதிந்துபோய் இருக்கின்றன. ஜெயகாந்தனைப் பற்றிப் பேச்சு வந்ததும் ஒரு முக்கியமான விஷயம் நினைவுக்கு வருகிறது. 1965இல் அவர் இயக்கி வெளிவந்த உன்னைப்போல ஒருவன் திரைப்படம் ஏதோ காரணத்தால் வெளியூர் திரையரங்குகளுக்கு வரவில்லை. மனமகிழ் மன்றங்களும் இலக்கிய அமைப்புகளும் படப்பெட்டிகளை நேரிடையாக அவரிடமிருந்தே பெற்று திரையிட்டு வந்தன. அப்போது நான் திண்டுக்கல் அஞ்சல் நிலைய ஊழியர்களின் மனமகிழ் மன்றத்தின் செயலாளராக இருந்தேன். ஜெயகாந்தனுடன் தொடர்பு கொண்டு திரைப்படப் பெட்டிகளை வரவழைத்து, மாவட்ட ஆட்சியரின் அனுமதியோடு ஒரு திரையரங்கத்தில் ஒரு நாளைக்கு ஒரு காட்சியென இரு நாட்கள் வெளியிட ஏற்பாடு செய்தேன். இரு காட்சிகளுக்கும் அரங்கு நிறையும் அளவுக்குப் பார்வையாளர்கள் வந்திருந்தனர். அந்தப் படத்துக்குத்தான் அந்த ஆண்டின் மிக உயர்ந்த தேசிய விருது கிடைத்தது. ஜெயகாந்தனின் அறிமுகம் எனக்குப் பல விதங்களில் உதவியாக அமைந்தது. எண்பதுகளில் மயிலாடுதுறையில் கலை இலக்கியப் பெருமன்றத்தின் செயலாளராக இருந்த சமயத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட பல நிகழ்ச்சிகளுக்கு அவர் வந்து சொற்பொழிவாற்றியிருக்கிறார்.

இத்தனை ஆண்டு காலமாக வாங்கிப் படித்த சிறுபத்திரிகைகளைச் சேர்த்து வைத்திருக்கிறீர்களா ?

காலமெல்லாம் சேர்த்து பாதுகாத்து வைத்திருந்த புதையலை கண்முன்னாலேயே பறிகொடுத்துவிட்டவனின் கதைதான் என் கதை. அறுபதுகளில் நான் பணியில் சேர்ந்து சம்பாதிக்கத் தொடங்கிய பிறகு சிக்கனமாகச் செலவு செய்து பணத்தைச் சேமித்து வாங்கிய பத்திரிகைகளை எறும்பு சேமிப்பதுபோல சேமித்துவைத்திருந்தேன். 1981ஆம் ஆண்டு வரை அந்தச் சேமிப்பு என்னிடம் இருந்தது. 1982இல் பதவி உயர்வு பெற்று நான் வேறு ஊருக்கு மாற்றலாகிச் சென்றேன். புதிய ஊருக்கு என்னால் எல்லாப் புத்தகக்கட்டுகளையும் சுமந்துகொண்டு செல்லமுடியவில்லை. அதனால் ஜெயகாந்தன் புத்தகங்களையும் சில தொழிற்சங்க இதழ்களையும் மட்டும் என்னோடு எடுத்துச் சென்றேன். எஞ்சியிருந்த எல்லாப் புத்தகங்களையும் சிறுபத்திரிகைகளின் தொகுதிகளையும் எடுத்துச் சென்று என் பெற்றோர் வசித்த வீட்டில் வைத்துவிட்டுச் சென்றேன். பாதுகாப்பின்மை

காரணமாக, அவை அனைத்தும் அந்த வீட்டில் கறையானுக்கு இரையாகிவிட்டன. என் வாழ்வில் ஏற்பட்ட என்னால் தாங்கமுடியாத பேரிழப்பு இது. ஆயினும் நான் மனம் சோர்ந்துவிடவில்லை. போனதை நினைத்து வருத்தப்படுவதில் பயனொன்றுமில்லை என என்னை நானே தேற்றிக்கொண்டு புதிதாக புத்தகங்களையும் இதழ்களையும் வாங்கிச் சேமிக்கத் தொடங்கினேன். இதழ்களில் நல்ல கட்டுரைகளையும் நல்ல புத்தக மதிப்புரைகளையும் நல்ல நேர்காணல்களையும் அஞ்சலிக்கட்டுரைகளையும் படிக்க நேரும்போதெல்லாம் அவற்றையெல்லாம் தனியே வெட்டியெடுத்து தொகுத்து வைத்துக்கொள்வேன்.

இலக்கிய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதுண்டா ?

பொழுதைப் பயனுள்ளதாக்கி மகிழ தொடர்ந்து இலக்கிய நிகழ்வுகளில் கலந்துகொள்கிறேன். ஒவ்வொரு நாளும் பத்திரிகைகளில் வெளிவரும் இலக்கிய நிகழ்ச்சிகள் தொடர்பான செய்திகளைத்தான் முதலில் பார்ப்பேன். மனத்துக்குப் பிடித்தமான நிகழ்ச்சிகளைத் தேர்ந்தெடுத்து அவற்றுக்குச் செல்வேன். அதற்காக மயிலாடுதுறையிலிருந்து இரண்டுமூன்று மணி நேரப் பயணம் செய்யவேண்டும் என்றாலும் தயங்கமாட்டேன். புதுச்சேரி, தஞ்சாவூர், மதுரை என எல்லா ஊர்களுக்கும் இலக்கிய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளச் சென்றிருக்கிறேன். எல்லா ஊர்களிலும் எனக்கு தொழிற்சங்கம் தொடர்பாகக் கிடைத்த நல்ல நண்பர்கள் இருக்கின்றனர். அவர்களையெல்லாம் சந்திக்க இத்தகு நிகழ்ச்சிகளை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொள்வேன்.

மொழிபெயர்ப்புப்படைப்புகளைப் படிப்பீர்களா ? உங்களுக்குப் பிடித்த மொழிபெயர்ப்பு எது ?

எனக்கு மிகவும் பிடித்த மொழிபெயர்ப்பு நூல் மாக்சிம் கார்க்கி எழுதிய தாய். சோவியத் பிரசுரம் வெளியிடுவதற்கு முன்பாகவே அந்த நாவல் எழுத்தாளர் தொ. மு. சி. ரகுநாதன் மொழிபெயர்ப்பில் அன்னை என்னும் தலைப்பில் வெளிவந்திருந்தது. கா. ஸ்ரீ. ஸ்ரீ. மொழிபெயர்ப்பில் வந்த காண்டேகர் நாவல்களையும் ஆர். சண்முகசுந்தரம், த. நா. குமாரசாமி, குறிஞ்சிவேலன் மொழிபெயர்ப்பில் வந்த நாவல்களையெல்லாம் விரும்பிப் படித்திருக்கிறேன். உங்கள் மொழிபெயர்ப்பில் வெளிவந்த புதைந்த காற்று, ஊரும் சேரியும், கவர்ன்மென்ட் பிராமணன் நூல்களையும் படித்திருக்கிறேன்.

வீட்டில் நூலகம் வைத்திருக்கிறீர்களா ?

கறையான் தின்றதுபோக எஞ்சிய புத்தகங்களையெல்லாம் சேர்த்து வீட்டிலேயே பாரதியார் நூலகம் என்னும் பெயரில் வைத்திருக்கிறேன். எட்டயபுரத்தில் உள்ள, ஆய்வாளர் இளசை மணியன் நிர்வகித்த பாரதி ஆய்வு மையத்தின் ரகுநாதன் நூலகத்துக்கும், பேராசிரியர் பாஸ்கர் துணைவேந்தராகப் பணியாற்றியபோது அவருடைய வேண்டுகோளை ஏற்று தஞ்சை தமிழ்ப்பல்கலைக்கழகத்துக்கும், மயிலாடுதுறையின் தனியார் கல்லூரி நூலகத்துக்கும், திரைப்பட இயக்குநர் பா. இரஞ்சித்தின் கூகை நூலகத்துக்கும், திரைப்பட ஒளிப்பதிவு இயக்குநரும் சிறந்த வாசகருமான ஆர். டி. ராஜசேகரின் அலுவலக நூலகத்துக்கும் என்னுடைய சேமிப்பிலிருந்து ஏறத்தாழ ஆயிரம் புத்தகங்களை அன்பளிப்பாகக் கொடுத்துவிட்டேன். அவை போக இப்போது என் பாரதியார் நூலகத்தில் ஏறத்தாழ இரண்டாயிரம் புத்தகங்கள் உள்ளன. 1955 முதல் 2024 வரை சாகித்திய அகாதமி விருது பெற்ற எல்லா தமிழ்ப்புத்தகங்களும் என்னிடம் உள்ளன. 1970 முதல் 2019 வரை இலக்கியச் சிந்தனை அமைப்பின் பரிசைப் பெற்ற எல்லாப் புத்தகங்களும் உள்ளன.

சாகித்திய அகாதமி விருது பெற்ற நூல்களை வாங்கிச் சேகரிக்கவேண்டும் என்கிற எண்ணம் எதனால் ஏற்பட்டது ?

கலை இலக்கிய மேம்பாட்டுக்கும் பன்மொழிகள் புழங்கும் நாடான இந்தியாவில் மொழிகளுக்கிடையே ஒரு பரிமாற்றம் நிகழவேண்டும் என்னும் நோக்கத்துக்காகவும் நேரு பிரதமராக இருந்த காலத்தில் உருவாக்கிய அமைப்புதான் சாகித்திய அகாதமி. ஒவ்வொரு மொழியிலும் சிறந்த படைப்பென தேர்ந்தெடுக்கப்படும் நூலுக்கு விருது அளிப்பதோடு அந்நூலை இந்தியாவில் உள்ள பிற மொழியினரும் வாசிப்பதற்கு உகந்தவகையில் அந்தந்த மொழிகளில் மொழிபெயர்த்து வெளியிட்டு வருகிறது. அவற்றை வாங்கிப் படிப்பது என்பது, இந்தியப் பண்பாட்டைப் புரிந்துகொள்வதற்கு உதவியாக இருக்கும் என்கிற எண்ணத்தால் அப்படிப்பட்ட புத்தகங்களை வாங்கிச் சேமிக்கத் தொடங்கினேன்.

(06. 07. 2025 அன்று கடலூரில் ஓர் இலக்கிய நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்காக அவர் வந்திருந்தபோது, அவரோடு நிகழ்த்திய உரையாடல் இது)

●

தமிழ்நாடு அரசு
மக்கள் சிந்தனைப் பேரவை
இணைந்து நடத்தும்

ஈரோடு புத்தகத் திருவிழா – 2025

ஆகஸ்ட் 01 முதல் 12 வரை – சிக்கய்ய கலை மற்றும் அறிவியல் கல்லூரி மைதானம், ஈரோடு

இலங்கைத் தமிழறிஞர் ந.சி.கந்தையா பிள்ளை நினைவு

உலகத் தமிழர் படைப்பரங்கம்

நூல்களைத் திரட்ட உதவிடுவீர்!

அன்புடையீர்,
வணக்கம்.

இந்தியா நீங்கலாக உலகெங்குமுள்ள தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகளைத் தாய்த்தமிழகத்தில் உள்ளோருக்கு அறிமுகம் செய்யும் நோக்கிலும், அயலகத் தமிழர்களின் படைப்பாற்றல் மற்றும் பண்பாட்டு – கலாச்சார உணர்வுகளை இங்குள்ளோரும் புரிந்து அவர்களை நேசிக்கச் செய்யும் அடிப்படையிலும், தமிழ்கூறும் நல்லுலகில் உள்ள அனைத்துத் தமிழர்களுக்குமான ஓர் உறவுப்பாலமாக – மக்கள் சிந்தனைப் பேரவை தொடர்ந்து ஒவ்வோராண்டும் ஈரோடு புத்தகத் திருவிழாவில் ‘ உலகத் தமிழர் படைப்பரங்கம் ’ என்ற பெயரில் ஒரு சிறப்பு அரங்கத்தை சிரத்தையெடுத்து அமைத்து வருகிறது

ஆயிரக்கணக்கான தலைப்புகளில், பல்லாயிரக்கணக்கான அயலகத் தமிழ்நூல்கள் இந்தச் சிறப்பு அரங்கத்தில் ஆண்டுதோறும் இடம்பெறுகின்றன. வேறுபல நாடுகளில் தமிழ்மொழியின் வளர்ச்சிக்காகவும், தமிழர்களின் மேன்மைக்காகவும் உழைத்த பெருமக்களின் திருவுருவப்படங்கள் அவர்களைப் பற்றியான குறிப்புகளுடன் இவ்வரங்கத்தில் மக்களின் பார்வைக்கு வைக்கப்படுகின்றன. வெளிநாட்டுத் தமிழ் ஆளுமைகளை வரவழைத்து அவர்கள் இங்கு உரை நிகழ்த்த ஏற்பாடு செய்யப்படுகிறது. புத்தகத் திருவிழாவில் பொதுமக்களால் மிகவும் கவனத்திற்குரிய அரங்காக ஒவ்வோராண்டும் இது திகழ்ந்து வருகிறது

இந்த ஆண்டு ‘ இலங்கைத் தமிழறிஞர் ந.சி. கந்தையா பிள்ளை அவர்களின் நினைவு உலகத்தமிழர் படைப்பரங்கம் ’ என்ற பெயரில் இச்சிறப்பரங்கம் அமைக்கப்படவுள்ளது

மாநிலந்தழுவிய அளவில் தேசியத்தரத்துடன் நடைபெறும் ஈரோடு புத்தகத் திருவிழாவில் இடம்பெறும் இந்தச் சிறப்பு அரங்கிற்கு நூல்களைத் திரட்டும் முயற்சியில் புத்தகப் பதிப்பாளர்கள், தமிழ் அமைப்புகள், புத்தக ஆர்வலர்கள் என அனைவரும் மனமுவந்து பங்கேற்று உதவுமாறு மக்கள் சிந்தனைப் பேரவை ஓர் அன்பான வேண்டுகோளை முன் வைக்கிறது

வெளிநாட்டில் வாழ்கிற தமிழர்களின் படைப்புகளை இவ்வரங்கத்தில் விற்பனைக்காக வைக்க அந்தந்த நாட்டிலுள்ள படைப்பாளிகள், செயல்பட்டு வருகிற தமிழ் அமைப்புகள் உதவிடலாம்

காலமாகிவிட்ட படைப்பாளிகளாக இருப்பினும் அவர்களது படைப்புகள் சிறந்தவையாக இருக்குமெனில் அவர்களது குடும்பத்தினரோ, தமிழ் அமைப்புகளோ, அவர்களது நண்பர்களோ அப்படைப்புகளைப் பேரவையிடம் சேர்க்கலாம்

வெளிநாட்டில் செயல்பட்டு வரும் பதிப்பகங்களும் இவ்வாறு தாங்கள் பதிப்பித்த வெளிநாடு வாழ் தமிழர்களின் சிறந்த படைப்புகளை அனுப்பலாம்

வெளிநாட்டில் வாழ்கிற தமிழர்களின் படைப்புகள் தாய்மண்ணில் உள்ள அவர்களது இல்லங்களிலோ அல்லது உறவினர்களிடமோ இருக்குமெனில் அவர்களிடம் இவ்விபரம் தெரிவித்து பேரவையைத் தொடர்பு கொள்ள வைக்கலாம்

வாழும் நாடு குறித்த விபரங்களடங்கிய ஆய்வு நூல்கள், அந்தந்த நாடுகளில் தமிழ்மொழி வளர்ச்சிக்காகவும் தமிழர்களின் உயர்வுக்காகவும் தொண்டாற்றியவர்களின் வாழ்க்கை வரலாற்று நூல்கள், அந்தந்த நாட்டின் இயல்பிற்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப உருவான படைப்புகளான கவிதை, கட்டுரை, சிறுகதை ஆகியவற்றின் தொகுப்புகள், நாவல்கள், காப்பியங்கள், இலக்கிய ஆய்வு நூல்கள், பயண அனுபவங்கள், அறிவியல் நூல்கள், திறனாய்வு நூல்கள், சிறப்பு மலர்கள், அங்கு செயல்பட்டு வருகிற தமிழ் அமைப்புகளின் வெளியீடுகள் போன்ற நூல்கள் வரவேற்கப்படுகின்றன

வெளிநாட்டில் வாழ்கிற தமிழர்களின் படைப்புகளை தமிழகத்திலுள்ள பதிப்பகங்கள் வெளியிட்டிருப்பின் அவை பற்றிய விபரங்களைப் பேரவைக்கு உடனடியாகத் தெரிவித்தால் அப்பதிப்பகங்களைப் பேரவையே அணுகி புத்தகங்களைப் பெறலாம். அல்லவெனில் அப்பதிப்பகத்தார் மூலமாகப் பேரவையின் தலைமையை படைப்பாளிகளே அணுகலாம்

ஒவ்வொரு படைப்பிலும் குறைந்தபட்சம் 10 பிரதிகள் அனுப்பினால் திருவிழா முடிந்தபிறகு விற்பனைத் தொகையில் கழிவுபோக மீதமுள்ள தொகையும், விற்பனையாகாத நூல் பிரதிகளும் உடனடியாகத் திருப்பிக் கொடுக்கப்படும்

தொலைபேசியில் – மின்னஞ்சலில் இவ்விபரங்களை உடனடியாகத் தெரிவிக்கலாம்

காலம் மிகக் குறைவாக இருப்பதால் உடனடியாகக் களமிறங்கி உதவி செய்வதன் மூலம் இத்திட்டத்தை மிகச் சிறப்பாக நிறைவேற்றிட உரியவர்கள் அனைவரும் மனமுவந்து ஒத்துழைப்பு நல்கிட பேரவையின் சார்பில் அன்புடன் வேண்டுகிறோம்

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி

T. STALIN GUNASEKARAN

President, Makkal Sinthanai Peravai

A-47, Sampath Nagar, Erode - 638 011. | Landline : 0424 2269186

Websites
www.makkalsinthanaiperavai.org
www.erodebookfestival.org
www.tstalingunasekaran.com

Gmail
info@makkalsinthanaiperavai.org
stalingunasekaran.t@gmail.com

Find us on facebook makkalsinthanaiperavaierode
erodebookfestival
YouTube @makkalsinthanaiperavai

தமிழகத்தில் ஆசிரியர்களும் மாணாக்கர்களும்:
எஸ். ஜெயசீல ஸ்டீபன் | தமிழில் கீ. இளங்கோவன் |
வெளியீடு:என்சிபிஎச், சென்னை | விலை: ரூ. 270/-

புதிய வெளிச்சத்தில் தமிழகக் கல்வி வரலாறு

இந்தியப் பகுதிகள் குறிப்பிட்ட காலகட்டங்களில் பல்வேறு ஐரோப்பிய அரசுகளின் ஆளுமைக்கு உட்பட்டும் மீண்டும் பிற அரசுகளால் மறுகையகப்படுத்தமும் செய்யப்பட்டன. இது தொடர் நிகழ்வாக நடந்தேறியதை இந்திய வரலாற்று வரிசைகள் பல நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. வணிகம் சார்ந்த அவர்களின் வருகையில் இடைப்பிறவரலாக, இந்திய நிலப்பகுதிகளின் ஆட்சியில் பங்குகொண்டு அவர்கள் நிகழ்த்திய குறுக்கீடுகள் கீழைத்தேய மக்களின் மதம், கல்வி, தத்துவம், வாழ்வியலின் பிற அம்சங்களில் மாற்றங்களைக் கொண்டு வந்தன. அவற்றை ஏற்கத்தக்கதாக விதந்து கொண்டாடுவோரும் இந்திய அறிவு மரபையும் அதன் பண்பாட்டு வேர்களையும் முற்றும் முழுவதுமாக அழித்தொழித்ததாக வெறுத்துத் தூற்றுவோரும் உண்டு.

உண்மையில் பிரித்தானிய வருகைக்கு முன்பே இந்தியாவில் அறிவுசார் செயல்பாடுகளின் தொடர்ச்சியைக் காணமுடிகின்றது. ஆவணமாக்கம் பற்றிய முழுமையான புரிதல் இல்லாவிடினும் இந்திய இலக்கியங்கள், அகழ்வாய்வு உள்ளிட்ட பிற ஆய்வு மூலங்களின் வழியும் பிறமொழி ஆய்வாளர்களின் குறிப்புகளின் வழியாகவும் இந்திய அறிவு மரபின் பரிமாணங்களையும் பரிணாமத்தையும் விளங்கிக்கொள்ள முடிகிறது. மருத்துவம், வானியல், கட்டிடக்கலை, கணிதம் உள்ளிட்ட அவர்களின் அறிவு மரபின் வெளிப்பாடுகளை மொழியின்வழி படைக்கப்பட்ட இலக்கியங்களின் துணைகொண்டே நாம் விரிவாகப் புரிந்துகொள்கிறோம். இலக்கியப் படைப்பாக்கத்தின் அடிப்படையாக அமையும் மொழி ஆளுமையை ஒரு படைப்பாளனுக்கு உறுதிப்படுத்துவதாக அமைவது அவனது கல்விப் பின்புலம். அது மட்டுமல்ல, ஒரு மனிதன் தனது வாழ்புலத்தில் பிற சமூகப் பிரக்ஞையுடன் தொய்வின்றி இயங்குவதற்கும் பிற

சுஜா சுயம்பு

சமூகப் பிராணிகளுடன் தொடர்பு கொள்வதற்கும் தேவைப்படுகின்ற அடிப்படைப் புரிதலையும் அறிவையும் கற்றல் என்ற செயல்பாட்டின் மூலமே பெறுகிறான். எனவே, பிரதிகளை வாசித்துத் தெளிதல் என்ற ஒற்றைப் பொருண்மையைத் தாண்டிய வெளியில் கற்றல் என்ற சொல்லை நாம் கையாளுவது அவசியம்.

தமிழ், தமிழர் வரலாற்றைப் பற்றிய புரிதலை விரிவாக்கிக் கொள்வதற்கான ஆய்வுகள் பல அண்மைக்காலங்களில் போற்றத்தகும் வகையில் வெளிவந்து கொண்டிருக்கின்றன. நியூ செஞ்சுரி புத்தகத்தின் தமிழ் மக்கள் வரலாறு வரிசையில் அத்தகைய கவனம் பெறத்தக்க நூலாகத் **தமிழகத்தில் ஆசிரியர்களும் மாணாக்கர்களும்** என்ற நூல் வெளிவந்துள்ளது. இந்நூலின் ஆசிரியர் ஜெயசீல ஸ்டீபன் காலனிய ஆவணங்களை மையத் தரவாகக் கொண்டு அச்சுக் கலையின் மூலம் தமிழ் வளர்ச்சியின் புதுவாழ்வு, காலனியத் தொடக்க காலம், சிப்பாய்களும் போர்களும், அய்ரோப்பியர்கள் தமிழகத்திலிருந்து நடத்திய உலகளாவிய அடிமை வணிகமும் காலனிய அடிச்சுவடுகளும், தண்டனையடைந்த தமிழ்க் குற்றவாளிகள், தமிழகத்தில் சாதியைக் கண்டுபிடித்தல், தமிழ் வளர்ச்சி தரங்கம்பாடியில் மொழிபெயர்ப்பு, உரைநடை நூல்கள் அச்சிடுதல் வாயிலாக முதலான பிற முக்கியமான நூல்களையும் எழுதி உள்ளார். இந்நூல் இன்றைய தமிழகம் புதுச்சேரி பகுதிகளில் இயங்கிய கத்தோலிக்க, லூத்தரன், புராட்டஸ்டண்ட் ஆகிய பல்வேறு கிறித்தவ மதப் பரப்பாளர்களின் வழியும் பிரெஞ்சு, ஆங்கிலக் கிழக்கிந்திய நிறுவனங்கள் வழியும் தொடங்கப்பட்ட பல்வேறு பல மொழி வழிப் பள்ளிகள் பற்றியும் அங்கு தமிழர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட மேற்கத்திய கல்வி முறைகள் என 1567 தொடங்கி 1887 வரையிலான தமிழகத்தின் கல்வி நிலை குறித்த நுட்பமான பதிவை இப்புத்தகத்தின் வழி ஆய்வாளர் ஸ்டீபன் செய்து உள்ளார். ஆங்கில மூலத்திலிருந்து கி. இளங்கோவன் தமிழுக்கு இந்த நூலை மொழிபெயர்த்துத் தந்துள்ளார்.

இன்றைய சூழலில் கல்வி பற்றியும் மொழி பற்றியும் பேசுதல் அவை சார்ந்த உரையாடல்களை நிகழ்த்துதல் சமகாலப் போக்குகள் பற்றிய நமது அவதானிப்புகளைச் செய்தல் என்பதுகூட பல்வேறு கேள்விகளுக்கும் எதிர்ப்புகளுக்கும் இடமளிக்கும் களமாக மாறிவிட்டதை வருத்தத்துடன் பதிவுசெய்யவேண்டிய சூழலில் நாம் இருக்கிறோம். அறிவு சார்ந்த செயல்பாடுகள் அனைத்தும் முடக்கப்படுகின்ற சூழல் எந்த இனத்தின் வளர்ச்சிக்கும் உகந்தது அல்ல. இந்தியர்களின் கல்வி வளர்ச்சியில் பிரித்தானிய ஆட்சியாளர்களின் பங்கு பற்றிய மாற்றுக்கருத்தினை அழகிய மரம் நூல் மையப்படுத்துகிறது. இந்தியாவின் மரபான கல்வி முறை பிரத்தானியர்களால் அப்புறப்படுத்தப்பட்டது பற்றியும் இடைநிலை, விளிம்புநிலைச் சாதியினர் கல்வியின் மைய நீரோட்டத்தில் கலக்காமல் விலக்கப்பட்டதற்கான காரண கர்த்தாக்களாக பிரித்தானிய ஆட்சியைக் குறிப்பிட்டுச் சொல்கிறது. இது ஏற்கத் தகுந்ததா? அது குறித்து நமது தமிழியல் ஆய்வு புலத்தைச் சேர்ந்த ஆய்வாளர்கள் எத்தகைய கருத்துநிலையை முன்வைத்தார்கள் என்பதெல்லாம் இங்கு நினைத்துப் பார்த்தற்கு உரியது. காலனிய கால ஆவணங்களைத் தந்திரமான ஆவணப்படுத்தல் என்று குற்றம்சாட்டி மறுதலிக்கிற தரம் பால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களைக் கையகப்படுத்தி இந்தியாவின் மரபான கல்வியின் வேர்களைப் பிடுங்கிப் பரிசோதித்து அது மேலும் வளர முடியாத நிலைக்குக் கொண்டு சென்றார்கள் என்கின்றார். காலனிய காலக் கல்விமுறை பற்றிய வன்மை மென்மைகளை ஆய்வாளர் ஸ்டீபன் இந்த நூலில் எடுத்துக்காட்டவில்லை; தவிர வரலாற்றை உள்ளது உள்ளபடிப் பதிவு செய்கிறார். தமிழரின் கல்வி பற்றிய பல மொழி ஆவணங்களை ஒரு புள்ளியில் குவித்து உண்மை வரலாற்றை நமக்கு அறியத்தருகிறார். பிரித்தானியக் கிழக்கிந்திய நிறுவனம் மதப் பரப்பாளர்களின் பதிவுகள் இரண்டையும் ஒருங்கிணைத்துத் தமிழகத்தில் நிலவிய கல்வி வரலாறு இந்நூலில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

நூலின் முதல் பகுதி தமிழகப் பாரம்பரியக் கல்வி பற்றிய ஐரோப்பியப் பார்வையை எடுத்துக்காட்டுகிறது.

- காலனியர்களின் கல்விப்புல ஆளுகையில், தமிழ்நாடு புதுச்சேரிப் பகுதிகளில் கல்விசார்ந்து பின்பற்றப்பட்ட முறைமைகள்,
- பல்வேறு கல்விச் செயல்பாடுகள் வழியாக அவர்கள் சுதேசிகளுடன் ஊடாடிய முறைமை,
- கல்வி என்கிற கருத்துநிலையை மதம் எத்தகைய புரிதலுடன் கைக்கொண்டது,
- கிறித்தவ மதப் பரப்பாளர்களின் கல்வி முயற்சிகள்

ஆகியனவற்றைப் பற்றிய விரிவான தகவல்களை இந்நூலில் தருகின்றார் ஆய்வாளர் ஸ்டீபன். ஆங்கிலக் கல்விமுறையின் உள்ளடக்கத்தைத் தமிழக வைதீகச் சமயவாதிகள் மறுதலித்தமை, பாடநூல் தேர்வு முறை குறித்தும் சில இடங்கள் பேசுகின்றன. இடைக்காலத்தில் தமிழகத்தில் இயங்கிய பள்ளிகள் பற்றிய குறிப்புகளையும் எடுத்துக்காட்டுகிறார்.

தமிழகத்தைப் பொறுத்தவரைப் பள்ளிகள் குறிப்பாக வேத பாடங்களைக் கற்பிக்கும் கல்வி நிறுவனங்கள் கோவில்களுடன் இணைக்கப்பட்டு ஆட்சியாளர்களின் ஆதரவுடன் ஒரு புறம் இயங்கியது. வைதீக மடங்களில் வேதம் தவிர்த்து சரகா, பாகாடா ஆகிய மருத்துவப் பாடங்களும் கற்பிக்கப்பட்டதை ஆசிரியர் குறிப்பிடுகிறார். இங்கு கற்றவர்கள் யார்? அதன் மருத்துவப் பாடப்பகுதிகள் என்னவாக இருந்தன என்பது பற்றி மேலாய்வு செய்ய வேண்டிய தேவை நமக்கு உள்ளது. மற்றொருபுறம் பொதுமக்களின் ஊக்கத்துடன் செயல்பட்ட அவைதீகம் சார்ந்த கல்வி நிறுவனங்கள் இருந்தன; சமண, பௌத்தப் பள்ளிகள் வர்ணப் பாகுபாடற்ற கல்விப் பயிற்சிக்கு முன்னோடிகளாக இருந்துள்ளன. அதற்கு மக்களின் பங்களிப்பு நிலம், பொன், ஆடு, மாடுகள் ஆகியனவற்றை நன்கொடைகளாகத் தருதல் என்ற வகையில் அமைந்திருந்தது. கல்வி கற்றல் கற்பித்தலில் முன்னரே இருந்த பிராமணர்கள் பிராமணர்கள் அல்லாதார் என்ற பாகுபாடோடு சேர்ந்து மதம் மாறியவர்களுக்கான பள்ளிகள் என்ற பிரிவும் காலனிய காலத்தில் உருவானது என்பது குறிக்கத்தக்கது. மதப்பின்னணியுள்ள கல்வி நிறுவனங்களில் தங்கள் பிள்ளைகள் கல்வி கற்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து சுதேசியர்கள் தனித்த கல்வி நிறுவனங்களை உருவாக்கியமையும் நமது தமிழாய்வுப் புலம் அறிந்ததே.

குருகுலக் கல்வியும் திண்ணைப் பள்ளியும் நமது தொன்மையான கல்வி மரபின் அடையாளங்களாக இருக்கின்றன. இவை அன்றைய தமிழ் மக்கள் குழுக்களின் அனைத்துப் பிரிவினருக்கும் அனைத்துப் பொருளாதார வகுப்பினருக்கும் பொதுவானதாகவும் எட்டத்தக்க நிலையிலும் இல்லை. இத்தகைய சமூக இடைவெளிகளை இட்டு நிரப்பும் முயற்சியில் தொடக்க காலக் கல்வியியலாளர்களாக இருந்த பல்வேறு கிறித்தவ மதப்பரப்புச் சங்கங்களைச் சார்ந்தவர்கள் செயல்படவில்லை. மதப் பரவலாக்க நோக்கத்திற்காக அவர்கள் வந்து இறங்கிய கடற்கரையைச் சார்ந்த பகுதியிலுள்ள மக்களிடையே தங்கள் நோக்கத்தைச் செயல்படுத்துவதற்குக் கல்வி என்ற கருவியை அவர்கள் பயன்படுத்திக் கொண்டார்கள். காலனிய நிறுவனங்களும் மக்களை மூடநம்பிக்கையிலிருந்து விலக்கிப் பகுத்தறிவை வளர்க்கும் நோக்கில் ஆரம்பத்தில் செயல்படவில்லை. தங்கள் காலனிய அலுவலர்களின் நலனுக்காகவே முதலில் கல்வி நிறுவனங்களை அவர்கள் உருவாக்கினார். ஆனால் படிப்படியாக அவர்கள் கல்வித் திட்டத்தில் உள்ளூர் மக்களையும் இணைத்துக் கொண்டமை பற்றி நூல் பகுதிகள் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

மேலும் அவர்களது இத்தகைய செயல்பாடுகள் மூலம் பிற்காலங்களில் தமிழகத்தில் வெகுமக்கள் கல்வி சார்ந்து குறிப்பிட்டுச் சொல்லும்படியான நன்மைகளை அறுவடை செய்ய முடிந்ததையும் கவனப்படுத்தியுள்ளார். மதப்பரப்பாளர் சங்கங்கள் மூலம் உருவாக்கப்பட்ட பள்ளிகள், குருத்துவப் பள்ளிகள், ஆண்பால், பெண்பால், இருபாலர் பள்ளிகளிலும் இறைத்தத்துவம் சார்ந்த கிறித்தவக் கோட்பாடுகளும் மதநெறிகளும் ஒழுக்க நெறிமுறைகளும் அவர்களது நாட்பாடவேளைகளில் முக்கிய இடம் பெற்றிருந்ததைச் சுட்டிக்காட்டுகின்றார் (2024:61). என்றாலும் கூட எழுதவும் படிக்கவும் தெரிந்தவர்களாக மக்களை உருவாக்கியவர்கள் இவர்கள் என்பதில் மாற்றுக் கருத்துக்கள் இருக்கவே முடியாது. அதுபோலவே கல்விக்காக அவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் என்றென்றும் கவனத்தில் கொள்ளத்தக்கவையே. சான்றாக,

> "11. 09. 1846 அன்று நாகப்பட்டினத்தில் இருந்த புனித ஜோசப் கல்லூரி ஓலைக் கொட்டகையை பேராசை மற்றும் பகை உணர்ச்சி காரணமாக சில எதிரிகள் தீ வைத்தனர். சில மாதங்களில் பாதிரியார் லூயி செயிண்ட்-சியர் கல்லூரியை சீரமைத்தார். 1852ஆம் ஆண்டு பெரும் புயல்காற்று கட்டிடங்களை முற்றிலும் சேதமடையச் செய்தது. தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் மான்ட்கோமேரி கல்லூரியைக் கட்ட 500 ரூபாய் நிதியுதவி அளித்தார்" (2024:53).

1848ஆம் ஆண்டைச் சேர்ந்த மயிலாப்பூர் மறைமாவட்டப் பகுதியின் காப்பகச் சேமிப்பிலிருந்து பெறப்பட்ட முதன்மை ஆவணத்தை (Archives of the Arch-diocese of Madras Mylapore, Santhome, 1848) மூலமாகக் கொண்டு ஆய்வாளர் எடுத்துக் காட்டியிருக்கும் இந்தச் செய்தியை மேற்குறிப்பிட்ட கருத்துக்கு ஒரு சான்று.

மதச்சார்பற்ற கல்வி என்பது ஆரம்ப காலத்தில் சாத்தியமற்றதாக இருந்தாலும் பிற்காலத்தில் பிரித்தானிய காலனிய ஆட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்ட பொதுக்கல்வி பகுத்தறிவையும் அறிவுப்பூர்வமாக மதிப்பீட்டுச் செயலாற்றும் தன்மையையும் கற்றுத் தந்தது. 1835இல் முன்மொழியப்பட்டு 1842களில் வில்லியம் பெண்டிங்கால் சீர்திருத்தம் செய்யப்பட்ட மெக்காலேயின் பொதுக் கல்விக்கான எழுத்துருக்கள் மதச்சார்பற்ற பொதுக் கல்வியையே மையப்படுத்தியது. கல்வி வளர்ச்சிக்குத் தூண்டுகோலாக அவர்கள் கைக்கொண்ட அச்சு ஊடகமும் அதன் துணை கொண்டு உருவாக்கப்பட்ட அடிப்படைப் பாடநூல்களும் தாய்மொழிவழிக் கல்வியை உறுதிப்படுத்தும்

காரணிகளாக அமைந்தன. விளிம்புநிலைச் சாதியினருக்கான பிரித்தானிய அரசின் கல்வி சார்ந்த முன்னெடுப்புகளை நூலின் பல பகுதிகள் வெளிச்சப்படுத்துகின்றன. தமிழகத்தின் கல்வி வரலாற்றில் குறிக்கத்தக்க மாற்றத்தை ஏற்படுத்திக் குலக்கல்வியைத் தகர்த்தெறிந்து உண்டு உறைவிடப் பள்ளி முதலான பல்வேறு பள்ளிகளை உருவாக்கி வட்டார மொழிகளிலும் மேலைத்தேய மொழிகளிலும் எழுத்தறிவு பெற்றவர்களாகப் பிற சமூகத்தினரும் உருவாவதற்கு வழிவகை செய்தது. இருமொழி மொழிபெயர்ப்பாளர்கள், மத போதனை உதவியாளர்கள், எழுத்தர்கள், ஆசிரியர்கள் என இப்புலம் சார்ந்து வேறுபட்ட தொழில்களும் தோற்றம் பெற்றமையையும் குறித்துச் செல்கிறார் ஆசிரியர்.

ஒரு சிறந்த ஆய்வு நூல் அது தொடர்பாக அதன் திசைவழிகளை நோக்கி அதன் வாசகனைச் செயல்படுத்தும். அதனை இந்நூல் செய்கிறது.

- 1741இல் புதுச்சேரியில் அடிமைகளுக்குக் கல்வி கற்பிக்க ஆளுநர் பிறப்பித்த ஆணை,
- குளுனி- பெண் துறவிகளின் கல்விப் பணிகள் எத்தகையது?
- 1827 முதல் 1839 காலகட்டத்தில் செயல்பட்ட அரசுப் பணிக்கான பயிற்சி பள்ளியின் போக்கு,
- சமண, பௌத்தப் பள்ளிகளின் ஒடுங்குதிசைக்கான காரணங்களை விளங்கிக்கொள்ளுதல்,

என மேலாய்வை நோக்கி வாசகனை நகர்த்தும் களங்களும் பல உள்ளன.

கல்வி பற்றிய ஓர்மையுடன் பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ்ச் சமூகம் இருந்ததையும் பல குறிப்புகள் அறியத் தருகின்றன. சான்றாக, “சேலம் மாவட்டத்தில் குறிப்பாக எந்தவொரு இளம்பெண்ணிற்கும் எழுதப் படிக்கத் தெரியாது இருந்தபோது, ஒரு இளம் விதவை இரண்டு சிறுமிகளை புதுச்சேரிக்கு துறவியர் மடத்தில் கல்வி கற்க அழைத்துவந்தார் என்பதையும் சேலம் நகரத்திலிருந்து ஏழு மைல் தூரத்தில் உள்ள அக்கிரவாரம் என்ற கிராமத்தில் இருந்து உறவினர்கள் 18 பேர் சேர்ந்து கூண்டுவண்டியில் வந்தனர்...” (2024:46) என்ற பகுதியைக் கூறலாம்.

நூலின் நான்காம் பகுதியில் தரங்கம்பாடியில் லூத்தரன் மதப்பரப்பாளர்களின் தமிழ்வழிப் பள்ளிகள் பற்றியும் கல்வியின் மூலம் ஏற்பட்ட மாற்றங்களையும் பதிவு செய்கிறார். சீகன் பால்குக்கு நான்காம் பிரெடரிக்கின் விருப்பத்தின் பேரில் தரங்கம்பாடிக்கு மதத்தொண்டாற்ற வந்த இருவரில் ஒருவர் சீகன்பால்கு மற்றொருவர் புளூட்சா. சீகன்பால்கு 1707இல் ஒரு தமிழ்வழிப் பள்ளியைத் தொடங்கி செயல்படுத்தியது தொடங்கி அவரது தொடர் மதப்பரப்புப் பணிகள், அதில் ஏற்பட்ட தடைகள், சிக்கல்களைப் பதிவு செய்கிறார். 1709ஆம் ஆண்டின் தமிழகக் கல்விமுறை பற்றியும் நான்காம் பிரெடரிக்குக் கடிதம் மூலம் தெரிவிக்கிறார் சீகன் பால்கு. இச்செய்தி பற்றிக் குறிப்பிடும் போது ஆய்வாளர் ஸ்டீபன் ‘இந்துக் கடவுள்கள் முன் நடனமாடும் தேவதாசிகள் தவிர தமிழ்ப் பெண்கள் எழுதப் படிக்கவில்லை’ என்கிற குறிப்பை எடுத்துக்காட்டுகிறார். இது தொடர்பான மேலதிகத் தகவல்களுக்காக அந்த ஆவணத்தைப் பார்வையிட முயன்றார் இக்கட்டுரையாசிரியர் (அது உங்கள் பார்வைக்கு உள்ளது). Der Konigl. Danischen Missionarien aus Ost-Indien eingesandter ausfuhrlichen Berichten, Hallesche Berichte (1710:127) என்ற பெயர்கொண்ட ஹாலேயிலிருந்து வெளிவந்த புராட்டஸ்டண்ட் மதப்பரப்பாளர்களால் வெளியிடப்பட்ட ஹாலே ஆவணம் என்ற ஜெர்மனிய மொழி ஆவணம் 1204 பக்கங்களைக் கொண்டிருப்பது தெரியவந்தது. அதன் 127ஆம் பக்கத்திலிருந்து மேற்குறிப்பிட்ட செய்தியை அவர் எடுத்துக்காட்டியுள்ளார். இதுகுறித்து நினைத்துப்பார்க்கும்போது உண்மையில் பெருமலைப்பும் வியப்பும் ஏற்படுகிறது.

மேலும், தமிழகப் பள்ளிகளுக்கு அச்சிடப்பட்ட பாடநூல்கள் குறித்தும் சுவையான பல செய்திகளைத் தந்துள்ளார். இந்நூலின் மிக முக்கியமான தன்மை என்னவெனில் காலக்ஷேபம் போன்ற புனைவுகள் மீது கட்டப்பட்ட வரலாற்று மொழியை நூலின் எந்தப் பகுதியிலும் பார்க்க முடியாது. நூலின் ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு தொடரும் கடின உழைப்பின் மூலமாக டென்மார்க், பிரான்ஸ், ஜெர்மனி, இந்தியா, இத்தாலி, போர்ச்சுக்கல், இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகளிலிருந்து பெறப்பட்ட கையெழுத்துப் பிரதிகளையும் அச்சிடப்பட்ட ஆங்கில, பிரெஞ்சு, ஜெர்மானிய, போர்ச்சுகீசிய, தமிழ் மொழி ஆவணங்களைத் தரவாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளன. இத்தகைய பிற மொழி ஆவணங்களை அடிப்படையாகக் கொண்ட வரலாற்றைச் சொல்லும் படைப்புகள் தமிழில் மிக மிகக் குறைவே. இணையத்தின் பக்கங்களில் நமது ஆய்வுக்காகக் காத்திருக்கும் இத்தகைய ஆவணங்கள் இன்னும் எத்தனையோ உண்டு. அவை அனைத்தையும் கவனத்தில் கொண்டு எழுதப்பட்ட வரலாறுகளை மீள எழுத வேண்டிய கடமை தமிழ் இனத்திற்கு உண்டு.

●

கட்டுரையாளர்: உதவிப்பேராசிரியர், டிஜிஜி வைஷ்ணவா கல்லூரி, சென்னை

தமிழ்நாடு அரசு

மக்கள் சிந்தனைப் பேரவை

இணைந்து நடத்தும்

ஈரோடு புத்தகத் திருவிழா – 2025

நாள்: 01.08.2025 முதல் 12.08.2025 வரை (12 நாட்கள்)
நேரம் : தினசரி காலை 11.00 மணிமுதல் இரவு 9.30 மணிவரை
இடம் : சிக்கய்ய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மைதானம், வீரப்பன்சத்திரம் – ஈரோடு

தமிழகத்திலுள்ள அனைத்துத் தலைசிறந்த தமிழ் மற்றும் ஆங்கிலப் புத்தகப் பதிப்பாளர்கள், விற்பனையாளர்கள் பங்கேற்கின்றனர். வட மாநிலங்களிலிருந்தும் புகழ்மிக்க ஆங்கில நூல் பதிப்பாளர்கள் வருகை புரிகின்றனர்

10% சிறப்புக் கழிவு

சொற்பொழிவு நிகழ்ச்சிகள் யாவும் மாலை சரியாக 6.00 மணிக்குத் தொடங்கும்

தேதி	கிழமை	சிறப்பு விருந்தினர்	தலைப்பு
01.08.2025	வெள்ளி	தலைமை : **ச.கந்தசாமி** இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித் தலைவர் திருவிழாவைத் திறந்து வைத்துச் சிறப்புரை வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் மாண்புமிகு **சு.முத்துசாமி** பங்கேற்பு : நாடாளுமன்ற – சட்டமன்ற உறுப்பினர்கள், மேயர், துணை மேயர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள்	தொடக்க விழா
02.08.2025	சனி	மருத்துவர் **கு.சிவராமன்** **மு.இராகவேந்திரன்** விஜய் டிவி – 'தமிழ்ப்பேச்சு எங்கள் மூச்சு' நிகழ்வின் வெற்றியாளர்	'மண்ணுயிர் நுண்ணுயிர் உன்உயிர்' 'எனைத்தானும் நல்லவை கேட்க'
03.08.2025	ஞாயிறு	(சுழலும் சொல்லரங்கம்) நடுவர் : கலைமாமணி **திண்டுக்கல் ஐ.லியோனி**	'மக்கள் சிந்தனையில் நல்ல மாற்றத்தைப் பெரிதும் தருவது பேச்சா ? எழுத்தா ? பாட்டா ? திரையா ?'
04.08.2025	திங்கள்	**சுகி.சிவம்** **கே.வைத்தியநாதன்** ஆசிரியர் – 'தினமணி' நாளிதழ்	'ஊருக்கு நல்லது சொல்வேன்' 'வையத்து வாழ்வாங்கு வாழ்பவர்'
05.08.2025	செவ்வாய்	டாக்டர் **ஜி.விஸ்வநாதன்** வேந்தர், விஐடி பல்கலைக்கழகம் **வி.டில்லிபாபு** இராணுவ விஞ்ஞானி, இந்தியப் பாதுகாப்புத்துறை	'அறிவியல் மேதை ஜி.டி. நாயுடு விருது' வழங்கும் நிகழ்வு கருத்துரை
06.08.2025	புதன்	பேராசிரியர் **சொ.சொ.மீ. சுந்தரம்** **கவிதா ஜவகர்**	'நெய்த நூலும் நெய்யாத நூலும்' 'இலக்கியத்தில் உயிர் நேயம்'
07.08.2025	வியாழன்	புலவர் **செந்தலை ந.கவுதமன்** பாவலர் **அறிவுமதி**	'புதுக்கருத்தும் பொதுக்கருத்தும்' 'தமிழருக்கில்லை – தமிழ்'
08.08.2025	வெள்ளி	கவிஞர் **ஜோ மல்லூரி** **விஷ்ணுபுரம் சரவணன்** பால சாகித்ய புரஸ்கார் - 2025 விருதாளர்	'அறிவை விரிவு செய்..' 'குழந்தைகளோடு கதையாடு...'
09.08.2025	சனி	கோமல் தியேட்டர் வழங்கும் **சிறுகதைகள் மேடையில்...** (பிரபல எழுத்தாளர்களின் சிறுகதைகள் நாடகமாக அரங்கேறுகின்றன)	படைப்பாளிகளைப் போற்றுவோம்
10.08.2025	ஞாயிறு	**கி.அமர்நாத் ராமகிருஷ்ணா** இயக்குநர், இந்திய தொல்லியல் ஆய்வுத்துறை – புதுடில்லி **ரா.விஜயன்** மூத்த ஆசிரியர், புதிய தலைமுறை தொலைக்காட்சி	'சங்கத்தமிழின் தொன்மை' 'எண்ணம் போல் வாழ்க்கை'
11.08.2025	திங்கள்	கலைமாமணி **டி.கே.எஸ்.கலைவாணன்** **அரு.நாகப்பன்**	'நாடகம் வளர்த்த தேசியம்' 'தென்றலிலே புறப்பட்ட தீப்பிழம்பு'
12.08.2025	செவ்வாய்	முனைவர் **இறையன்பு** ஐஏஎஸ் (ஓய்வு) மேனாள் தலைமைச் செயலாளர், தமிழ்நாடு அரசு	நிறைவு விழா

அனைவரும் குடும்பத்துடன் பங்கேற்றுப் பயன்பெறுவீர் !

மக்கள் சிந்தனைப் பேரவை

Email : info@makkalsinthanaiperavai.com



கண்டுகொள்ளப்படாத தியாகங்கள்



க. பழனித்துரை

இந்தியாவுக்கு சுதந்திரம் சும்மா கிடைக்கவில்லை. பல்வேறு தியாகங்களைச் செய்து பெற்ற சுதந்திரம். நம் சுதந்திரத்தை எவரும் தட்டில் வைத்துத் தரவில்லை, போராடித்தான் பெற்றோம். போராடியவர்கள் நம் பெரும் தலைவர்களாக சித்தரிக்கப்பட்டவர்கள் மட்டுமல்ல, சாதாரண மனிதர்களும் எண்ணிலடங்கா துயரங்களை எதிர்கொண்டு பெற்ற சுதந்திரம். பெரும் தலைவர்களை அடையாளம் கண்டு வரலாறாக்கி அவர்களைக் கொண்டாடினோம். அடையாளம் தெரியாத எண்ணற்ற சாதாரண மனிதர்களின் வரலாறு இன்னும் எழுதப்படாமலேயே இருக்கிறது என்பது நம் வாழ்நாளில் சந்திக்கும் ஒரு சோகம். தியாகம் செய்தவர்கள் தங்களுக்கு ஒரு வரலாறு இருக்கிறது, நம்மை பாராட்டப்போகிறார்கள் என்று தியாகம் செய்யவில்லை. அது தங்களின் கடமை என்றேதான் செய்தார்கள். நமது சுதந்திர வரலாறு இன்னும் முற்றாக

எழுதி முடிக்கவில்லை. இன்னும் எண்ணிலடங்கா சாதாரண மனிதர்கள் தங்கள் பங்களிப்பை சுதந்திரம் அடைவதற்காக செய்திருப்பதை நாம் சுற்றித் திரியும்போது நமக்கு கூறப்படுகிறது. அதற்குள் அந்தத் தியாக வரலாற்றை நாம் மறப்பது என்பது ஓர் துன்பியல் செயல் என்றே கூற வேண்டும். பண்பட்ட நாகரீகங்கள் நமக்குத் தரும் செய்தி தியாகத்தைப் பாராட்டுவதும் போற்றுவதும் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்வதும்தான் அந்த நாகரீகங்கள் நிலைத்து நிற்பதற்கான காரணங்கள். இன்றைய அரசியல் தலைவர்களின் செயல்பாடுகளை பெரும் சாதனைகளின் வரலாறாகக் கொண்டாடும்போது, சுதந்திரத் தியாக வரலாறு சாதாரணமாகி மக்களுக்கு மறந்துபோனது. இன்றைய அரசியல் சுதந்திரத்திற்காக செய்த தியாகங்களுக்கு சமாதி கட்டிவிட்டது. தியாக காலத்தில் உருவாக்கப்பட்ட லட்சியங்கள், கனவுகள், விழுமியங்கள் அனைத்தும் மறக்கடிக்கப்பட்டுவிட்டன. நிகழ்காலம் வணிக காலம். லாபம் என்பதுதான் மனிதர்களை இயக்குகின்றது. இந்தக் காலத்திலும் தியாக கால நீட்சியாக அங்கொன்றும் இங்கொன்றுமாக மனிதர்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள்தான் தியாக காலத்தை நினைவூட்டுகின்றார்கள்.

சமீபத்தில் காந்தியப் போராளி கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன் அவர்களின் 100வது பிறந்த நாளை கொண்டாட பல காந்திய அமைப்புக்கள் தயாரானபோது, அவர் எனக்கு எதற்குக் கொண்டாட்டம் எனக் கேட்டு, அதைத் தவிர்த்து விட்டார். காந்தி மக்களின் கண்ணீரைத் துடைப்பதில்தான் தன்னைக் கரைத்துக்கொண்டார். அதேபோல் நாம் செயலில் கரைய வேண்டும் என்று கூறி அவர் களப்பணியாற்றிய கூத்தூருக்கு சென்றுவிட்டார். நிலமற்ற ஏழைகளும், குடியிருக்க வீடற்ற ஏழைகளும் இந்நாட்டில் சட்டபூர்வமாக வாழ்ந்தாலும் அவர்களுக்கு குடிமக்கள் என்ற முகவரி இல்லை. எனவே அன்று நான் செய்து வந்த பணியாகிய நிலமற்ற ஏழைகளுக்கு நிலம் கொடுக்க வேண்டும், அதற்கு ஏற்பாடு செய்யுங்கள் என்று கட்டளை இட்டார். ஜூன் 16ஆம் தேதி 29 பேருக்கு நிலத்திற்கான பத்திரப்பதிவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. காலை சென்றவர் மாலை வரை அவர் தங்கியிருந்த இடம் திரும்பவில்லை.

அவருக்கு வீர வணக்கம் செலுத்த செந்தொண்டர் படை தளபதிகளாக நாகை பாராளுமன்றத் தொகுதி உறுப்பினர் திரு. செல்வராசு, திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் திரு. மாரிமுத்து, வேதாரண்யம் கஸ்தூர்பா காந்தி கன்யா குருகுலம் நிர்வாக அறங்காவலர் வேதரெத்தினம் என பலர் வந்திருந்தனர். அவர்கள் அனைவருக்கும் நான்தான் செய்தியைத் தெரிவித்திருந்தேன். வெளியூர்களிலிருந்து படித்த இளைஞர்கள் கூட்டம் ஒன்று காத்திருந்தது. கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன் இரவு ஏழு மணிக்கு பத்திரப்பதிவு அலுவலகத்திலிருந்து அவர் தங்கி இருக்கும் இடம் வந்து சேர்ந்தார். அவர் வந்தவுடன் எந்த மாலை மரியாதையும் செய்யவில்லை. அனைவரையும் ஒரு நாடகம் நடக்க இருக்கிறது அங்கு வாருங்கள் என அழைத்துச் சென்று உட்கார வைத்தோம். முருக பூபதி உருவாக்கிய போரைப் பற்றிய ஒரு நாடகம் மிகவும் அற்புதமாக நிகழ்த்தப்பட்டது. அதற்கு முன் அங்கு இருந்த பயிற்சி அறை ஒன்றை கிருஷ்ணம்மாள் வாழ்நாளில் நடத்திய போராட்டங்களை புகைப்படமாக்கி அங்குக் காட்சிப்படுத்தியிருந்தனர். அதை எழுத்தாளர் கோணங்கி திறந்து வைத்தார்.

கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன் அந்த நாடகத்தை முழுவதுமாகப் பார்த்து ரசித்தார், அது முடிந்தவுடன் அங்கு வந்திருந்த நல்லோர் வட்ட மாணிக்க மாணவர்களுக்கு லாரா கோப்பா (இத்தாலியர்) எழுதிய புத்தகத்தின் தமிழ் வடிவம் பெற்ற “சுதந்திரத்தின் நிறம்” என்ற நூலினை அளித்தனர். மாணவர்களுக்கும் ஊர் மக்களுக்கும் பழமரக்கன்றுகள் வழங்கப்பட்டன. நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் கிருஷ்ணம்மாவிற்கு கதர்ஆடை போர்த்தி வீரவணக்கம் செலுத்தினர். நாடாளுமன்ற உறுப்பினருக்கும் சட்டமன்ற உறுப்பினருக்கும் தன்னைப் பற்றிய “சுதந்திரத்தின் நிறம்” என்ற புத்தகத்தை அன்புப் பரிசாக வழங்கினார். அவர் எப்பொழுதும் வள்ளலார் பாடிய “எல்லாம் செயல் கூடும்” என்ற பாடலைப் பாடி அந்த நிகழ்வை அவரே நிறைவு செய்தார்.

தன்னுடைய நூறாவது பிறந்த நாள் விழாவைக் கொண்டாடாமல் தான் செய்துவந்த நிலமற்றவர்களுக்கு நிலம் தரும் செயல்பாட்டை அன்று செய்து செயலில்தான் எனக்கு மரியாதை என அங்கு வந்து அந்த நிலத்தைப் பதிவு செய்து கொடுத்ததுதான் அந்த அம்மாவின் சிறப்பான செயல்பாடாகக் கருதுகிறார். ஆனால், அங்கு நடந்த நிகழ்வுகள் அனைத்தும் எங்கோ இருந்து

இவரைப்பற்றி அறிந்து ஒரு முறை இவரைச் சந்தித்த ஒரு தொழிலதிபர் அவரைப் பற்றிய புத்தகத்தை இளைஞர்களும் மாணவர்களும் படிக்க வேண்டும் என்று அதற்கான புத்தகங்களை அனுப்பி வைத்திருந்தார். அது மட்டுமல்ல, நாடுகளுக்கிடையில் நடக்கும் போரினால் இயற்கை எப்படியெல்லாம் அழிக்கப்படுகிறது என்பதை மக்களுக்கு உணர்த்த வேண்டும் என்று ஒரு நாடகத்தை நிகழ்த்திக் காட்ட வேண்டும் என்று முருகபூபதி அவர்களின் நாடகக் குழுவையும் ஏற்பாடு செய்திருந்தார். அத்துடன் அன்று அங்கு வருகின்றவர்களுக்கு பழமரக்கன்றுகளை கொடுத்துச் சிறப்பிக்க வேண்டும் எனக் கட்டளையிட்டு, அத்தனை செயல்பாடுகளைச் செய்த அவரின் செயல்பாடு பிரமிக்க வைத்தது. இந்த நிகழ்வுகளையெல்லாம் யார் தம்பி ஏற்பாடு செய்தது என்று கேட்ட வண்ணம் இருந்தார் கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன் அவர்கள். அத்தனையும் அவருக்கும், அவருடைய மகன் மருத்துவர் பூமிக்குமாருக்கும், மருத்துவர் சத்தியா அவர்களுக்கும் எங்கோயிருந்து வந்து இதை ஏன் நடத்துகின்றார்கள் என்று தெரியவில்லை. அதற்கும் மேலாக, எந்த அழைப்பிதழும் இல்லை, நாகை பாராளுமன்ற உறுப்பினரும், திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினரும் வந்து அவருக்கு வீர வணக்கம் செலுத்தியது அவரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. அடுத்து தினமணி நாளிதழில் இவரைப் பற்றி ஓர் சிறப்புக் கட்டுரை வெளியிட்டு சிறப்புச் செய்தது பலருக்கு வியப்பு. வருகின்றவர்களுக்கெல்லாம் தினமணி பிரதி ஒன்று கொடுத்தார்கள். இவைகளையெல்லாம் ஈரோட்டிலிருக்கும் ஒரு தொழில் நிறுவனத்தின் அதிபர் ஏன் செய்தார் என்றால் இன்றைய கொச்சைப்படுத்தப்பட்ட தியாகத்தை மெருகூட்ட வேண்டும் என்பதற்காக மட்டுமே. நம் மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும் இவர்களின் தியாக வரலாறு காண்பிக்கப்படவில்லை என்றால் இன்றைய அரசியல்வாதிகள் தியாகிகளாகி விடுவார்கள். தங்களை அவர்களே தியாகிகள் என பட்டம் சூட்டி மக்களை நம்ப வைத்துவிடுவார்கள்.

பொதுவாக நம் நாட்டில் நம் அறிஞர்கள், ஆய்வாளர்கள் மேற்கத்திய அறிஞர்கள் செய்கின்ற வேலைகளைப் பார்த்து அவர்களின் அடிச்சுவட்டில் பயணிக்க முயல்வார்களேயன்றி, நாம் நமக்காக நம் நாட்டிற்காக என்ன செய்ய வேண்டும் என்று புதுமைகள் ஆய்வுகளில் செய்வது கிடையாது என்பதை ஒரு எழுத்தாளர் கடுமையாக நம் நாட்டு பல்கலைக்கழக பேராசிரியர்களைப் பற்றி விமர்சனம் செய்திருந்தார். காரணம் நம் நாட்டில் சுதந்திரப் போராட்டத்தில் நடந்த பல்வேறு நிகழ்வுகளை வெளிநாட்டிலிருந்து வந்து இங்கு ஆய்வு செய்து நல்ல நூல்களை ஆங்கிலத்தில் வெளியிடுகின்றனர். நம் ஆராய்ச்சியாளர்கள் அப்படிப்பட்ட ஆய்வுகளை மேற்கொள்ளவில்லையே என்று “உப்பு வேலி” என்ற புத்தகத்தில் எழுதியிருந்தார்.

இந்தக் கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன் தம்பதியர்களின் தியாக வரலாற்றை ஒரு இத்தாலியரான லாரா கோப்பா தான் இந்தியா வந்து ஆய்வு செய்து எழுதி இத்தாலிய மொழியில் வெளியிட்டார். ஒரு அமெரிக்கப் பேராசிரியர் அதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து அமெரிக்காவில் வெளியிட்டார். அப்பொழுதும்கூட நம் ஆய்வாளர்களுக்கு உணர்வு வரவில்லை. அதைப்பார்த்த சோலை வெட்கப்பட்டு ஒரு நூலை எழுதி புரட்சியில் பூத்த காந்திய மலர்கள் என்ற தலைப்பில் பதிப்பித்தார். அதன்பின் ராமச்சந்திர குகா இவரைப் பற்றிய குறிப்புக்களை தன் புத்தகத்தில் கொண்டு வந்தார். லாரா கோப்பா எழுதிய புத்தகத்தை தமிழில் கொண்டு வந்து “சுதந்திரத்தின் நிறம்” என்ற தலைப்பில் தன்னறம் பதிப்பகம் வெளியிட்டது.

கிருஷ்ணம்மாளின் இணையர் ஜெகந்நாதன் மறைவிற்குப்பின் ஆண்டு தோறும் அவர் நினைவாக நடத்தும் சர்வோதய விழாவிற்கு வருகை தரும் வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே வருவதை நம்மால் பார்க்க முடிகிறது. அதேபோல் படித்த இளைஞர்களின் கூட்டமும் அதிகரித்து வருகிறது. இன்று இவர் எண்ணிலடங்கா இளைஞர்களை வசீகரிக்கும் தலைவராக விளங்குகிறார். இவரை நம் இளையவர்கள் மத்தியில் கொண்டு சேர்த்த பணியை குக்கூ காட்டுப்பள்ளி சிவராஜ் அவர்களையே சாரும். மறக்கப்பட்ட கோபிச்செட்டிப்பாளையம் லட்சுமண அய்யரை சுபி புத்தகமாக எழுதி வெளியிட்டு எப்படி நினைவுபடுத்துகிறாரோ அதேபோல் சிவராசு கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதனை “எங்களுக்கெல்லாம் வழிகாட்டும் தலைமை” என இளைஞர்களை அழைத்து வந்து இவரின் பணிகளைக் கவனிக்க வைத்து

புதுத் தலைமைத்துவத்தை இளைஞர்களிடம் உருவாக்குகிறார். எது அப்படி இந்த இளைஞர்களை ஈர்த்தது என்றால் இவரின் தலைமைப்பண்பு. இவரின் தலைமைப் பண்பில் இருக்கும் தனித் தன்மை. என்ன அப்படி தலைமைத்துவம் என்றால், தனக்கான நிறுவனத்தைக் கட்டாமல், மக்கள் பிரச்சினை இருக்கும் இடம்தேடிச் சென்று மக்களை ஒருங்கிணைத்து மக்களுடன் இணைந்து போராடி மக்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது என்பதுதான் இவர் காட்டிய புதுத் தலைமை. இந்த தனித்தன்மை வாய்ந்த தலைமைத்துவம் ஆய்வு செய்யப்பட வேண்டிய பொருள்.

இவரைப்பற்றி நாம் இன்று பேசுவதற்குக் காரணம் முகவரியில்லா மனிதர்களுக்கு முகவரி கொடுக்க அவர் நடத்திய போராட்டங்கள்தான். 100 வயதில் இருக்கும் கிருஷ்ணம்மாள் வைக்கும் ஒரு கேள்விக்கு நம்மால் பதில் தரமுடியவில்லை. இந்தியாவில் பிறந்த அனைவரும் இந்தியத் தாயின் மக்கள்தானே. அவர்கள் பெயரில் அரைக்காணி நிலம் கிடையாது, குடியிருக்க வீடு கிடையாது, இவர்களை நீங்கள் எப்படி இந்தியக் குடிமக்கள் என்று அழைப்பீர்கள். சுதந்திர நாட்டில் ஒரு அகதியைவிட மோசமான ஒரு சூழலில் தானே வாழ்கின்றனர். இதை ஏன் நான் குறிப்பிடுகிறேன் என்றால் பொது வெளியில் இதை விவாதிக்க வேண்டும் என்பதால்தான் என்கிறார். எனக்குத் தெரிந்த வழிமுறை குடியிருக்க அவர்களுக்கு ஒரு சிறிய வீடு, அவர் பெயரில், உழைத்து வாழ அவருக்கு 2 ஏக்கர் நிலம் வேண்டும். இது இரண்டும் இருந்தால் அவருக்கு முகவரி உண்டு. அவர் இந்திய நாட்டின் குடிமகன் அல்லது குடிமகள் இவர்களுக்கு முகவரி கொடுக்கத்தான் காந்தி சுதந்திரம் வாங்கினார். ஆனால் சுதந்திர நாட்டில் நம் அரசு இவர்களைக் கவனிக்கவில்லையே, எனக்குத் தெரிந்ததைச் செய்கிறேன் என்கிறார்.

இவரைப் பற்றி வெளிவந்துள்ள நூல்களைப் படிக்கும்போது இவரும் இவரின் இணையரும் நடத்திய போராட்டங்களின் தொகுப்பாக உள்ளது. பல நிகழ்வுகள் ஆய்வு செய்ய வேண்டியவைகள், இதுவரை ஆய்வு செய்யப்படவில்லை. இவர் செய்த பணிகளின் தாக்கம் என்ன, நிலம் கொடுத்ததில், வீடுகள் கட்டிக் கொடுத்ததில், பெண்களை ஒருங்கிணைத்ததில், இறால் பண்ணைக்கு எதிராக நடத்தி உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து தீர்ப்பு வாங்கியதில் என்பதை ஆய்வு செய்ய வேண்டும். இவர்கள் இருவரும் தங்கள் செயல்பாடுகளுக்காக நிறுவனங்களோ அமைப்புக்களோ பெரிய அளவில் கட்டமைக்காமலே செயல்பட்டு வந்தனர். அந்தச் செயல்பாடுகளில் வெற்றியும் பெற்றனர். இன்று பல அமைப்புக்கள் அமைப்புக்களைக் காக்கவே செயல்படுகின்றன. ஆனால், இவர்கள் மக்கள் பிரச்சினைகளை கையில் எடுத்து மக்களை ஒருங்கிணைத்து போராடி பல பிரச்சினைகளைத் தீர்த்துக் காண்பித்திருப்பது புதுமையாக இருக்கிறது. அதுதான் இளைஞர்களுக்கு நம்பிக்கை தருவதாக பலர் கூறுகின்றனர். இவரிடம் இருக்கும் தலைமைத்துவம், இவரிடம் இருக்கும் கண்ணோட்டம், இவரிடம் இருக்கும் அணுகுமுறை அனைத்தும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டியவை. பிரச்சினையின் உண்மைத் தன்மையை உண்மையாக நேர்மையாக அரசியலாக்காமல் எதிரணியினரிடம் கூறும்போது அவர்களின் உள்ளத்தைத் தொட முடியும். அவர்களையும் நியாயத்தின் பக்கம் கொண்டுவர முடியும் என்பதை நிரூபணமாக்கி இருக்கின்றார் கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன். இன்று இவரால் எப்படி சித்தாந்தங்களைக் கடந்து பல கட்சிக்காரர்களையும் ஈர்க்க முடிகிறது என்பது அடுத்த ஆய்வுப்பகுதி. நம் ஆய்வாளர்கள் இதுவரை வெளிவந்த புத்தகங்களையும், கட்டுரைகளையும் படித்துவிட்டு, அதிலிருந்து எழும் கேள்விகளுக்கு பதில் தேடினால் பல ஆய்வுகளை அவர்கள் முன்னெடுக்க முடியும். இவரைப் பற்றிய ஆய்வுகள் என்பது புதினங்களை உருவாக்குவது அல்ல. மேம்பாட்டுக்கு அணுகுமுறைகளை உருவாக்கத் தேவையான ஆய்வுகளை மேற்கொள்ள முடியும். 100 வயதிலும் புத்தகம் படிப்பது, வருகின்றவர்களிடம் உரையாடுவது, வகுப்பெடுப்பது, எழுந்து நின்று கூட்டங்களில் பேசுவது அனைத்தும் வித்தியாசம். இவரைப் பற்றி இன்றைய இளைஞர்கள் பலர் ஆய்வுகள் மேற்கொண்டு வருகின்றனர். பலர் இவரை ஆவணப்படுத்தி வருகின்றனர். இன்றைய தேவை நல்ல ஆய்வுகள் இவரைப் பற்றி. இன்றைய சூழலுக்கான தலைமைத்துவம் இவரிடம் என்ன இருக்கிறது என்று ஆய்வு நடத்த வேண்டும். அதுதான் இன்றைய தேவை.

●

கட்டுரையாளர்:

பேராசிரியர், காந்திகிராமிய பல்கலைக்கழக ராஜீவ் காந்தி பஞ்சாயத்து ராஜ் ஆராய்ச்சி இருக்கைத் தலைவர் (ஓய்வு)

தொல்இன வரலாற்று மாட்சிமைக்கான உரிமை கோரும் நூல்

ம. மதிவண்ணன், சக்கிலியர் வரலாறு,
கருப்புப் பிரதிகள், சென்னை, 2023, விலை ரூ. 350/-

நா. சந்திரசேகரன்

‘2009 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் போது இயற்றப்பட்ட ஒரு சட்டம், பட்டியலின வகுப்பினருக்கான 18%லிருந்து அருந்ததியர்களுக்கு 3% உள் இடஒதுக்கீடு வழங்கியது; இந்த உள் இடஒதுக்கீட்டால் அருந்ததியர் சமூகத்திற்கு பயனளிக்க முடிகிறது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் (ஆர்டிஐ) கீழ் தி இந்துவின் கேள்விக்கு தொழில்நுட்பக் கல்வி (டிடிஇ) மற்றும் மருத்துவக் கல்வி & ஆராய்ச்சி இயக்குனரகங்கள் (டிஎம்இ) அளித்த பதில்களின் அடிப்படையிலான செய்தி இது. எம். பி. பி. எஸ் படிப்பைப் பொறுத்தவரை, பட்டியலின வகுப்பில் 2018-19 மற்றும் 2023-24க்கும் இடையில் மொத்த இடங்களின் எண்ணிக்கை சுமார் 82% அதிகரித்துள்ளது. அதாவது 3,600 இடங்களிலிருந்து 6,553ஆக உயர்ந்துள்ளது. மருத்துவம் படிக்கும் பட்டியலின வகுப்பினரில் அருந்ததியர் எண்ணிக்கை 2018-19ல் 107ஆக இருந்தது 2023-24ல் 193ஆக உயர்ந்துள்ளது’ (T. Ramakrishnan, The Hindu January 17, 2025).

இந்த நாளிதழ் செய்தியில் உள்ள ஒரு குறிப்பிட்ட சமூகத்தினரின் முன்னேற்றம் என்பது தானாக வந்துவிடவில்லை. அருந்ததியர் சமூகத்தினரின் நீண்டநெடிய அரசியல் போராட்ட முன்னெடுப்புகளின் மூலம்தான் சாத்தியமாகியுள்ளது. அதனுள்ளடங்கியதொரு செயல்பாட்டு வடிவம்

இனமாட்சி உரிமை மீட்டெடுப்புக்கான நோக்கில் ஆய்வு நூல்கள் எழுதிக் கலந்துரையாடுவதாகும். வரலாறு நெடுகிலும் பார்த்தால் ஒருகாலத்தில் ஓங்கிய புகழுடன் தொல்குடிகளாய் இருந்தவை படையெடுப்பு, இடப்பெயர்வு, வணிகம், தொழில்-பொருளாதாரக் காரணங்களால் தகுதியிழந்து கையறுநிலை வகுப்பினராய் மாறுவது நடந்துகொண்டே வருகிறது. "சோழர்கள் ஆட்சிக்காலத்தில் ஏறக்குறைய பன்னிரண்டாம் நூற்றாண்டுவாக்கில் தமிழ்நாட்டில் நிலவிய வலங்கை-இடங்கைப் போராட்டம் ஒரு மாற்று வழியில் தங்களை மேல்நிலையாக்கம் செய்து கொள்ள முயன்றதைக் காட்டுகின்றது. இது பார்ப்பனரல்லாத, வெள்ளாளர்கள் அல்லாத சமூக பிரிவுகள் ஆகும். இதில் வலங்கைப் பிரிவினர் இடங்கைப் பிரிவினரைவிட மேலானவர்களாகக் கருதப்பட்டனர். எனவே, இடங்கைப் பிரிவினர் வலங்கைப் பிரிவுக்கு மாறும் நிகழ்வுகளும் நடந்தன. இதில் வலங்கைப் பிரிவில் பறையர் உட்பட்ட 96 குலங்களும், இடங்கைப் பிரிவில் பள்ளர் உட்பட 96 குலங்களும் இருந்ததாக வரலாற்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். வலங்கைப் பிரிவில் இருந்த சாதிகள் ஆளும் சாதிகளாகவும், இடங்கைப் பிரிவில் இருந்த சாதிகள் ஆளப்படும் சாதிகளாகவும் இருந்துள்ளன. வலங்கை இடங்கைப் போராட்டம் ஏறக்குறைய 19ஆம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் நடந்துள்ளதற்கான சான்றுகள் கிடைக்கின்றன" (செ. கார்கி, சாதிய மேல்நிலையாக்கமும் ஆண்ட பரம்பரையும், கீற்று,09 ஆகஸ்ட் 2017). சமகாலத்தில் சமூக ரீதியாக ஒடுக்கப்பட்டு, பாதிக்கப்பட்டவர்கள் கல்வியறிவுடன் பெற்ற அரசியல்வழி தமது தொல்லுரிமையை மீட்கப் போராடுகின்றனர்.

அந்த வகையில் தமிழகத்தில் சங்க இலக்கியப் புறநானூற்றுப் பாடல் (335) தெளிவுபடுத்தும் தொன்மையான நான்கு குடிகளில் ஒன்றான பறையர் சமுதாயத்தினர், முக்கூடற்பள்ளு வரை பாட்டுடைத் தலைவர்களான தேவேந்திரகுல வேளாள சமூகத்தினர், தீண்டாமைக்கு எதிராகவும் தோள்சீலைக்காகவும் போராட்டம் நடத்தி வணிகரீதியாக எழுச்சிபெற்று, தாங்களும் நாடாண்ட பரம்பரையினர் என்றிடும் நாடார் சமுதாயத்தினர், தாங்கள்தாம் பாண்டிய, சோழப் பரம்பரையினர் என்றிடும் முக்குலத்தோர் மற்றும் படையாட்சி-வன்னியர் போன்றோர் தத்தம் இனவரலாற்று மாட்சிமைக்கான உரிமைக் கோரல்களை முன்னெடுத்துள்ளமை போன்று அருந்ததியர் வரலாறு தொடர்பாகவும் நூல்கள் வெளிவந்த வண்ணம் உள்ளன.

எழுத்தாளர் ஜெயமோகன் தனக்கே உரிய மொழிநடையில் இத்தகைய மாட்சிமை உரிமைக் கோரல்களுக்கு எதிர்வினையாற்றியுள்ளார். "...வரலாற்றுப்பின்னணியில் நவீன இந்தியாவில் ஒரு பொதுப்போக்கு காணப்படுகிறது. சுதந்திரத்துக்குப் பின்னர் கிடைத்த பொருளியல் வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொண்டு முன்னேற்றம் அடையும் ஒவ்வொரு சாதியும் தன்னை சாதிப் படிநிலையிலும் மேலே கொண்டுசெல்ல முயல்கிறது. அதற்கு அது இரண்டு அடையாளங்களை உருவாக்கிக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஒன்று ஒரு புராண அடையாளம். இன்னொன்று ஆட்சியதிகாரம் சார்ந்த அடையாளம். புராண அடையாளம் என்பது இந்தியாவின் புராணமரபில் ஒரு இடத்தை, ஒரு தொடர்ச்சியை உருவாக்கிக் கொள்வதாகும். இந்திரன், விஸ்வகர்மா போன்ற தேவர்கள் அல்லது காஸ்யபர் போன்ற ரிஷிகளின் மரபில் வந்தவர்கள் என்ற அடையாளத்தை உருவாக்கிக் கொள்ளுதல். இதன்மூலம் இந்தியாவின் பிரம்மாண்டமான இறந்தகாலத்துடன் அவர்களால் தங்களை பிணைக்கமுடிகிறது. அந்த அடையாளம் அவர்களுக்குத் தன்னம்பிக்கையை அளிக்கிறது. அடுத்தபடியே ஆண்ட வம்சம் என்னும் அடையாளத்தை உருவாக்கிக்கொள்ளுதல். ஒருகாலத்தில் ஆட்சிசெய்த வம்சமாக இருந்தோம் என்பது பெருமிதத்தை அளிக்கக்கூடியதாக உள்ளது. உண்மையில் இந்தியாவில் உள்ள மிகச்சில சாதிகளைத் தவிர அனைத்துச்சாதியினரும் எங்கோ, எப்போதோ சிறிய அளவிலேனும் ஆட்சியாளர்களாக இருந்திருப்பார்கள். அவர்கள் அந்த அடையாளத்தைப் பெரிதாக ஆக்கிக்கொள்ளமுடியும். இதன் விளைவாகவே இன்று 'ஆண்ட பரம்பரை' என்ற சுயவரலாற்று உருவாக்கம் நிகழ்ந்துகொண்டிருக்கிறது. இது சாதிய அரசியலின் ஒரு பகுதியே ஒழிய இதற்கு வரலாற்று அடிப்படை என ஏதும் இல்லை. இன்று அதிகமும் பொருளியல் முன்னேற்றமும் ஆட்சியதிகாரமும் பெற்று வருபவர்கள் இடைநிலைச்சாதிகள். அவர்களுக்கு இந்த இரு அடையாளங்களும் பெரிதும் தேவைப்படுகின்றன" (மன்னர்களின் சாதி, ஜெயமோகன், February 10, 2017). இவரிடம் வந்தேறிகளான பல உயர்சாதியினர் இடைநிலைச் சாதியினரை, மேலதிகமாக ஒடுக்கப்பட்ட சாதியினரை, வருண அடிப்படையில் அடக்கி அழுத்தியுள்ளமை குறித்த கருத்து வெளிப்படாத

நிலையில், எல்லோரும் மேல்நிலையாக்கம் அடைய விரும்புவது குறித்து மட்டும் ஆதங்கப்படுவது தெரிகிறது.

“அருந்ததியரின் விடுதலைப் போராட்ட மற்றும் பாளையக்கார வரலாற்றை இராசையாவும், அரசியல் வரலாற்றை பாதிரியார் மாற்கு (2001) அவர்களும், வீர மற்றும் இயக்க வரலாற்றை எழில். இளங்கோவனும் (2008), ஆன்மீக வரலாற்றை சதுர்வேதியும் (2019) பதிவு செய்திருப்பதன் மூலம் ஒட்டுமொத்த அருந்ததியர் சமூக வரலாறு மீட்டெடுக்கப்பட்டுள்ளது என்கிறார் ச. சீனிவாசன்(அறியப்படாத அருந்ததியர் வரலாறு, கீற்று 31 மே 2024). மேற்சுட்டியவற்றின் தொடர்ச்சியாக 2021இல் வெளியான ச. சீனிவாசனின் ‘தமிழக அருந்ததியர் வரலாறும் வாழ்வும்’, 2023இல் வெளியான ம. மதிவண்ணனின் நூல் ‘சக்கிலியர் வரலாறு’ என்றும் நூல்கள் வெளிவந்த வண்ணம் உள்ளன.

‘சக்கிலியர் வரலாறு’ நூலாசிரியரை எழுத்தாளர் பெருமாள் முருகன் தன் வலைத்தளத்தில் பின்வருமாறு அறிமுகப்படுத்துகிறார்: “தலித் சாதியினரில் அருந்ததியர் மீது பல்திசைத் தாக்குதல் நிகழும் காலமாக இது இருக்கிறது. தமிழக மேற்கு மாவட்டங்களில் அடர்த்தியாகவும் பிறபகுதிகளில் பரவியும் வாழும் அருந்ததியரை ஏற்கெனவே பல நூற்றாண்டுகளாக ஆதிக்க சாதியினர் சுரண்டி வருகின்றனர். தமிழ்நாட்டின் பணப்புழக்கம் மிகுந்த, தொழில் சிறந்த கொங்குப் பகுதியின் முன்னேற்றத்திற்கு அவர்கள் உழைப்பு முக்கியமானது. உழைப்பின் அளவில் சிறிதுகூடப் பலன் பெறவில்லை. பழங்குடி இயல்புகளைப் பெரிதும் கொண்ட அருந்ததியர் தமிழ்நாட்டின் பிற சாதியினரால் அரசியல் ரீதியாகவும் ஒடுக்கப்படுகின்றனர். அவர்கள் வீட்டு மொழியாகத் தெலுங்கு இருப்பதால் தமிழ்த் தேசியர்கள் தங்கள் எதிரியாகப் பார்க்கின்றனர். ‘வந்தேறிகள்’ என்று இழிவுபடுத்துகின்றனர். வட இந்தியர்கள் தமிழ்நாட்டு வணிகத்தைப் பெருமளவு கைப்பற்றிக் கொண்டிருக்கும் நிலையில் சொத்துடைமையோ அதிகாரமோ அற்ற அருந்ததியர்களை எதிரிகளாகப் பாவிப்பது என்ன வகை அரசியல் என்று புரியவில்லை. இவற்றை எல்லாம் எதிர்த்துக் களமாட அருந்ததியரில் மிகச் சிலரே இருந்தனர். இவர்களில் முக்கியமானவர் கவிஞர் மதிவண்ணன். இடதுசாரி இயக்கப் பின்புலத்தில் வந்து கவிஞராக அறிமுகமானவர். 2000ஆம் ஆண்டு வெளியான அவரது முதல் கவிதைத் தொகுப்பு ‘நெரிந்து. ’ அதற்கு நான்தான் முன்னுரை எழுதினேன். செயல்திறமும் துடிப்பும் மிக்கவரான மதிவண்ணனை சூழல்தான் அரசியல் செயற்பாட்டாளர் ஆக்கியது. சமீபத்தில் தமிழ் இந்து இதழில் வெளியான நேர்காணலில் (04-01-25) ‘அவசியம் செய்து முடிக்க வேண்டிய ஒரு முக்கியமான வேலையை யாரும் செய்யாத போது நான் செய்கிறேன்’ என்று சொல்லியிருந்தார். அது முற்றிலும் உண்மை. மதிவண்ணனின் இலக்கியச் செயல்பாடும் தொடர்ந்து வருகிறது. இதுவரை நான்கு கவிதைத் தொகுப்புகளையும் (நெரிந்து, நமக்கிடையிலான தொலைவு, ஏதிலியைத் தொடர்ந்து வரும் நிலா, நவகண்டம்) ஆறு கட்டுரை நூல்களையும் வெளியிட்டுள்ளார். மராத்தி எழுத்தாளர் சரண்குமார் லிம்பாலே எழுதிய ‘தலித் பார்ப்பனன்’ என்னும் சிறுகதை நூலையும் ‘ஓலம்’ நாவலையும் மொழிபெயர்த்துள்ளார். இப்போது லிம்பாலேவின் ‘கும்பல்’ நாவலை மொழிபெயர்த்திருக்கிறார். அவரது அரசியல் பணிகளில் இரண்டு மிகவும் முக்கியமானவை. அருந்ததியர் உள் ஒதுக்கீட்டுக் கோரிக்கை மேலெழுந்து வந்தபோது அவர் எழுதிய ‘உள் ஒதுக்கீடு: சில பார்வைகள்’ நூலும் அதைத் தொடர்ந்து அவர் எடுத்த முயற்சிகளும் முதல் பணி. அருந்ததியர் உள் ஒதுக்கீடு கிடைத்ததில் மதியின் பங்கு கணிசமானது. 2010ஆம் ஆண்டு தொடங்கிப் பதின்மூன்று ஆண்டுகளாகக் கல்வெட்டு, செப்பேடு முதலிய ஆவணங்களை எல்லாம் தேடிப் படித்து ஆய்ந்து அவர் எழுதிய ‘சக்கிலியர் வரலாறு’ என்னும் நூல் இரண்டாம் பணி. ”

இந்நூலை நூலாசிரியர் ‘பகடை வீரத்தையும் பெருமையையும் போற்றி ஊரைப் பேச வைத்த மாதிகன் மதுரை வீரனுக்கு’ என்று அர்ப்பணித்துள்ளார். பின்னிணைப்புகள் உட்பட 14 தலைப்புகளைக் கொண்டு இந்நூல் அமைந்துள்ளது.

முதல் மூன்று தலைப்புகளின் பொருண்மை என்பது சக்கிலியர்கள் ஆந்திராவிலிருந்து விஜயநகரப் படைகளோடு வந்தவர்கள், தோல் தொழில் மற்றும் தூய்மைப் பணிகளை மேற்கொண்டவர்கள் என்று கருத்துரைத்தோரைக் கண்டித்து மறுப்பதாக அமைந்துள்ளது. சக்கிலியரை முதன்முதலில் கழிவகற்றும் தொழில் செய்வோராக ஆவணப்படுத்தியவர் அபேதுபே; காலனியக் காலத்தில் அவரைப் பின்பற்றி மாவட்ட

கெஜட்டியர்கள் எழுதிய ஆங்கிலேயர் அனைவரும் அவரையே பின்பற்றி ஆவணப்படுத்தியுள்ளனர். இவை அனைத்தையும் ரங்காச்சாரி துணையுடன் பரிசீலித்த தர்ஸ்டன் அவர்களைக் குற்றேவல் புரிவோராக ஆவணப்படுத்தியுள்ளார். எட்கர் தர்ஸ்டனின் தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் நூலில்(ப. 2) “தெலுங்கு பேசப்படும் பகுதிகளுக்குரிய மாதிகர்களுக்கு ஒப்பானவர்கள் தமிழ்நாட்டில் தோல் தொழில் பணிபுரியும் சக்கிலியர். இவர்கள் தெலுங்கு, கன்னடம் வழங்கும் மாவட்டங்களிலிருந்து வந்து குடியேறி இருத்தல் வேண்டும். தொன்மையான தமிழ்க் கல்வெட்டுகளிலோ இலக்கியங்களிலோ இவர்களைப் பற்றிய குறிப்பேதும் இல்லை” என்பதை அடியொற்றி நா. வானமாமலை முத்துப்பட்டன் கதை நூலுக்கான முன்னுரையில் மேற்படி கருத்தையொப்ப எழுதியுள்ளார். அருந்ததியர் வரலாறு எழுதிய பாதிரியார் மாற்கும் மூவேந்தர் யார்? என்ற நூல் எழுதிய இரா. தேவ ஆசீர்வாதமும் வெளியிலிருந்து வந்தவர்கள் என்பதாய்ப் பதிவிட்டுள்ளனர். கதைப்பாடல்களில் ஆய்வு செய்வோரும் இதே கருத்தை வழிமொழிந்துள்ளனர். இவர்களை மதிவண்ணன் சக்கிலியர் இருப்பு பற்றிச் சுட்டும் செங்கம்(1258), திருவண்ணாமலை(1202) கல்வெட்டுகளைச் சான்றுகாட்டி மறுக்கிறார். கிருஷ்ணதேவராயர் ஆண்ட காலம் 1509 – 1529 என்றும் அவர் வருகைக்கு முன்னரே பூர்வகுடிகளாய் வாழ்ந்துள்ளனர் என்கிறார். சிறுவாலை ஜமீனின் 1323ஆம் ஆண்டு செப்பேடு பல்வேறு சக்கிலியர் பிரிவுகளையும், புலவர் செ,ராசுவின் கொங்குநாட்டுச் சமுதாய ஆவணங்கள் சுட்டும் 1499ஆம் ஆண்டு பட்டயம் பல்வேறு பகடைப் பிரிவுகளையும் அவர்கள் உரிமையுடன் வாழ்ந்தது பற்றியும் தரவுகள் காட்டுகிறார். தர்ஸ்டன் ஆந்திர மாதிகர்களின் வாழ்வியலும் தமிழக சக்கிலியர் வாழ்வியலும் வேறுபட்டவை என்றுள்ளதையும் காட்டுகிறார். கட்டபொம்மு கதைப்பாடலில் உள்ள சக்கிலியர் படை, பகடையர் படை வீரர்கள் பற்றி நா. வானமாமலை இருட்டடிப்பு செய்வதைக் கடுமையாகக் கண்டிக்கிறார். இதேபோல் கல்வெட்டு, செப்பேடு உள்ளிட்டவை கொண்டு தென்னிந்திய வரலாறு எழுதிய கே. கே. பிள்ளை மற்றும் கொங்குநாடு நூல் எழுதிய வீ. மாணிக்கம் போன்றோரும் சக்கிலியர், பகடை, அருந்ததியர் பற்றி இருட்டடிப்பு செய்துள்ளதைச் சுட்டிக் கண்டிக்கிறார்.

நூலில் அடுத்து அமைந்துள்ள ஏழு தலைப்புகளின் பொருண்மை சக்கிலியரின் தொல் இன மாட்சிமை பற்றியதாய் உள்ளது. கல்வெட்டுகள் தென் – வட ஆர்க்காட்டுப் பகுதிகளில் சக்கிலி துர்க்கம், சக்கிலிக்கோட்டை பற்றியும் அவர்கள் அரசாண்டதையும் ராபர்ட் சிவல் எனபவர் தொகுத்த The Antiquarian Remains இலிருந்து தரவு காட்டியுள்ளார். “சக்கிலியர், பகடை எனப் பெயர் குறிப்பிடும் கல்வெட்டுகளில் காலத்தில் முந்தியவை மூன்று. அவற்றுள் முதலாவது கல்வெட்டு பிரம்மதேசத்தில் காணப்படும் கி. பி. 963ஆம் ஆண்டின் கல்வெட்டாகும். அதைத் தொடர்ந்து கி. பி. 973ஆம் ஆண்டைச் சேர்ந்த திருப்பதி வெங்கடேஸ்வரர் ஆலயக் கல்வெட்டு காணப்படுகிறது. மூன்றாவது திருவண்ணாமலையில் உள்ள கி. பி. 1030ஆம் ஆண்டைச் சேர்ந்த ராஜேந்திரச் சோழன் காலக் கல்வெட்டு. அக்கல்வெட்டு சக்கிலியன் குண்டில் என குறிப்பிடுகிறது. ஆயினும் பல்லவப் பகடையின் பெயரைக் குறிப்பிடும் கல்வெட்டு பல உண்மைகளை வெளிப்படுத்துகிறது. கி. பி. 973ஆம் ஆண்டிலும் சக்கிலியர்கள் அரசர்களாக இருந்திருக்கின்றனர்”(ப. 80) என்கிறார். இச்சாதியைச் சேர்ந்த அரசர்களைக் கீழ்க்கண்டவாறு வரிசைப்படுத்துகிறார்.

1. வீரகம்பண உடையார் பகடை - கி. பி. 1368ஆம் ஆண்டை ஒட்டிய காலப்பகுதி
2. பயிண்டி அரசர் (அய்யலுப் பகடையின் தகப்பன்) - கி. பி. 1406க்கு முந்திய காலப்பகுதி
3. அய்யலுப் பகடை - கி. பி. 1406ஆம் ஆண்டை ஒட்டிய காலப்பகுதி
4. கொப்பரசர் மாதி அரசர் - கி. பி. 1412ஆம் ஆண்டை ஒட்டிய காலப்பகுதி
5. சக்கரசர் பற்றி கி. பி. 1432, 1435, 1436 கால கல்வெட்டுகள் கிடைத்திருக்கின்றன.

இவ்வரசர்களின் கல்வெட்டுகள் திருப்புக்குழி, திருவாலங்காடு, திருமுல்லைவாயில், ராமகிரி, திருப்பதி, காலஹஸ்தி ஆகிய ஊர்களில் கிடைக்கின்றன. ஆகையால் இவர்களது ஆட்சிப் பகுதி காஞ்சிபுரம், திருவள்ளூர், சென்னை, சித்தூர் ஆகிய மாவட்டப் பகுதிகளில் பரவியிருந்தது என்று தெரிகிறது”(ப. 70) என்கிறார். மதுரை வீரன் 17ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவன்; மதுரைவீரன் அம்மானை மற்றும் கதைப்பாடல் ஆய்வுகளைச் சுட்டி நாயக்கர் காலத்தில் அரசகாவல் பணி செய்தவன் என்கிறார். 18-19ஆம் நூற்றாண்டுகளிலும் வீரபாண்டிய செக்கிலியர், சின்னத்தம்பி,

ஒண்டிவீரன் போன்ற நெல்லைப் பகுதியில் ஆண்டவர்களையும், கொங்குப் பகுதியில், நடுநாட்டில் சக்கிலி ஏரி, சக்கிலி அணை, சக்கிலி மலை இருந்துள்ளதையும் ஆவணங்கள் மூலம் எடுத்துக்காட்டுகிறார். தொடர்ந்து பல்லவ அரசன் சக்திவிடங்கனின் மாமன் பல்லவ பகடை என்பதைக் கொண்டு பல்லவர்களோடு தொடர்புபடுத்தியும், புல்லி, கலிக்குலம் என்று புறநானூறு, அகநானூறு பாடல்கள் சுட்டுவதைக் காட்டி அவர்களது வாகனம் ஆண் யானை என்றும் இம்மக்களைக் களப்பிரர்களோடும் பவுத்தர்களோடும் தொடர்புபடுத்திக் காட்டுகிறார். "புல்லியின் வாரிசுகளான கலிக் குலத்தைச் சேர்ந்த களப்பிரர்களுக்கும், சக்கிலியர்களுக்கும் என்ன தொடர்பு? யானையைக் குலமரபுச் சின்னமாய், அடையாளமாய் உடைய களபர்கள் என்பதன் தமிழாக்கமாகப் பகடை என்கிற பெயர் திகழுகிறது"(ப. 126) என்கிறார். சக்கிலி என்பதை ச+கலி=சக்கலி என்றும், சாவினை உடைமையாகக் கொண்ட கூற்றுவன் என்றும் பொருள் தருகிறார். "சக்கிலியர்கள் என்ற பெயரால் இன்று அறியப்படுபவர்களே வாணர்கள், வாணகோவரையர்கள், வாணாதிராயர்கள் என்று அறியப்பட்டார்கள். அவர்களின் பூர்வீக தாயகம் என்பது தமிழ்நாட்டின் வட எல்லையாய் உள்ள அருவா வடதலை நாடும், அருவா நாடும் என்பதை இலக்கியமும், வரலாறும் கூறுகின்றன. வாணர்களின் ஆட்சி தொடங்கிய அருவா வடதலை நாடு பகுதியிலிருந்து அவர்களது ஆட்சி கடைசியில் முடிவடைந்த பாண்டியநாடு வரையிலும் அவர்களது தடயங்களையும், சான்றுகளையும் கொண்டுள்ள பகுதிகளில் எல்லாம் இன்று வரை வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரே பிரிவினர் சக்கிலியர் தாம். அதோடு வாணர்களைப் போல தெலுங்கு மொழியையும், தமிழையும் கைக்கொண்ட சாதியாய் ஏறத்தாழ ஈராயிரம் ஆண்டுகளாக இம்மண்ணில் வாழ்ந்து வரும் ஒரே பிரிவினர் சக்கிலியர்தாம் என்பது திண்ணம்"(ப. 183) என்கிறார். உதயேந்திரம் மற்றும் குடிமல்லம் செப்பேடுகள் மூலம் சக்கிலியத்திரை(கப்பம்) கட்டிய செய்தி, அவர்கள் வீழ்த்தப்பட்டு 200 ஆண்டுகளில் கங்கர்களின் ஓம்படைக் கிளவிகளில் இழிவாக பதியப்பட்ட செய்திகளைத் தருகிறார். சுபாஷிணி மற்றும் பிறர் மேற்கொண்ட தமிழகச் சாதிகளின் மரபணு தொடர்பான ஆய்வின் மூலம், "சக்கிலியர், அகமுடையார், அம்பலக்காரர் ஆகிய சாதிகள் (தெற்காசியத்திற்கான) M வகை மரபணுவை மிகக் கூடுதலான அளவில் கொண்டுள்ள மிக மூத்த குடிகளாக இருக்க வேண்டும்" என்றும் அதன்வழி சக்கிலியர் தொடர்பாக இதுவரை கல்வெட்டுகள், இலக்கியச் சான்றுகள் கொண்டு "சக்கிலியர்கள் வந்தேறிகள் அல்லர். தமிழ்நாட்டின் மிக மூத்த குடிகளில் ஒரு குடி என்ற செய்தியை வேறொரு புள்ளியிலிருந்து நிறுவுவதாக அமைகிறது. இந்த அடிப்படையில் சக்கிலியர் என்று அழைக்கப்படும் வாணர்கள் தமிழரே என்பதை நாம் உறுதியாகச் சொல்லலாம்"(ப. 217) என்கிறார்.

நூலின் இறுதி மூன்று தலைப்புகளின் பொருண்மை சக்கிலியரின் வீழ்ச்சி மற்றும் இன்றைய நிலை குறித்து அமைந்துள்ளது. "வாணர்களின் வரலாற்றில் மிகப் பெரும் பின்னடைவு என்பது அச்சுதராயன் காலத்தில் ஏற்பட்டது என்று சொல்ல முடியும். அச்சுதராயன் காலத்தில் நாயக்கர்களின் ஆட்சி ஏற்படுத்தப்பட்டு மதுரை, செஞ்சி, வேலூர் ஆகிய ஊர்களைத் தலைமை இடமாகக் கொண்டு ஆளப்பட்டது. நாயக்கர்கள் ஆட்சி ஏற்படுத்தப்பட்ட பின்பு வாணர்கள் என்ற சக்கிலியர் மெதுமெதுவாகத் தங்கள் முக்கியத்துவத்தை இழந்து சமூகத்தின் கீழ் அடுக்கிற்குத் தள்ளப்பட்டுக் கீழ்நிலை அடைந்தார்கள்"(ப. 227) என்கிறார். "திம்மச் சக்கிலி என்பவன் நீலன் பார்ப்பான் என்பவனுக்கு 30 பொன் கடன் கொடுத்த செய்தி பதிவாகி இருக்கிறது. அப்படியெனில் சக்கிலியர் அக்காலப் பகுதியில் சிறப்பான நிலையில் இருந்ததை அந்தச் செய்தி நிறுவுகிறது" (ப. 283) என்றும் "கி. பி. 1580ஆம் ஆண்டுக்குப் பிறகு வீரப்ப நாயக்கர் சக்கிலியர் என்ற வாணரை முழுமையாக வென்று பதவியிலிருந்து விலக்கியதற்குப் பிறகு, சக்கிலியர்கள் பிழைப்பிற்காக தோல் தொழிலுக்குப் போக வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அதைத் தொடர்ந்து சக்கிலியரின் சமூக வீழ்ச்சி தொடங்கியது என்று சொல்லலாம். அங்ஙனம் வீழ்ச்சியடையத் தொடங்கிய சக்கிலியர்கள் அதைத் தொடர்ந்து வந்த காலனிய ஆட்சிக் காலத்தில் அத்தொழிலிலிருந்தும் ஓரம் கட்டப்பட்டு மலம் அள்ளிகளாக, துப்புரவுப் பணியாளர்களாக மாற்றப்பட்டு தமிழ்நாட்டிலும், இந்தியாவின் பிற மாநிலங்களிலும், இந்தியாவின் அண்டை நாடுகளிலும் சிதறடிக்கப்பட்டார்கள்" பக். 283-284) என்றும் கூறி முடிக்கிறார்.

மதிவண்ணன் சக்கிலியர்-பகடையர்-அருந்ததியர் மற்ற குடிகளைப் போலவே தமிழகத்தின் பூர்வகுடிகளாகவும் ஆள்வோராகவும் வாழ்ந்துள்ளனர்; வலிந்து இழிநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்ற பொருண்மை குறித்து கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக எழுதி வந்த கட்டுரைகளை ஒருங்கமைத்து இந்நூலாக்கியுள்ளார். அந்தவகையில் நூலில் கூறியது கூறல் தொடர்ந்து இடம்பெற்றுள்ளது. இதைத் தவிர்க்க இந்நூலை கல்வெட்டுக்கள், செப்பேடுகள், நடுகற்கள், சங்க இலக்கியம் மற்றும் கதைப்பாடல் தரவுகள் என்ற போக்கில் கட்டமைத்திருந்தால் நன்றாக அமைந்திருக்கும் என்று கூறத் தோன்றுகிறது. மதுரைவீரன் மனிதனிலிருந்து தெய்வத்தன்மை அடைந்தவனாக அவதானிக்கப்படுகிறான். வாணர்கள் வழித்தோன்றலில் காட்டும் போது முன்பு அவர்கள் பாணரசர்களாகவும் புராணத் தொன்மம் கூறும் பாணாசுரன் வம்சம் என்பதும், ஏற்கெனவே இவ்வரலாறு எழுதியோர் அருந்ததி தொன்மத்தோடு பிணைத்திருப்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டியுள்ளது. பிரிட்டானிகாவின்படி தொன்மம் என்பது ஒரு குறியீட்டுக் கதையாடல், பொதுவாகத் தோற்ற வரலாறு அறியமுடியாதது, சடங்கு வழிப்பட்டது, உண்மை நிகழ்வுகளோடு வலிந்து இணைப்பது, முற்றிலும் மதநம்பிக்கை அடிப்படையிலானது என்று வரையறுக்கிறது. அந்த ஓரிடம் தவிர இந்நூல் பெரும்பாலும் சான்றாதாரம் காட்டும் கல்வெட்டு, செப்பேடு, நடுகல் உள்ளிட்டவை வரலாற்று ஆய்வாளர்களால் அறிவியல்பூர்வமான புறச்சான்றுகளாக ஏற்கப்படுபவை. இலக்கியத்தரவுகளைக் கூட அவர்கள் அகச்சான்றுகளாகப் புறந்தள்ளுவதுண்டு. எனவே, இந்நூலின் பெரும்பாலான தரவுகள் தருக்க அடிப்படையில் முன்வைக்கப்பட்டுள்ளன. பின்னிணைப்பில் திரட்டிய தரவுகள் பல இணைக்கப்பட்டுள்ளன. தமிழகத்தின் பல்வேறு இடங்களிலிருந்தும் மேலதிகத் தரவுகள் திரட்டி இதே பொருண்மையில் நூல் வெளியாவது அவசியமாகிறது.

●

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம், புதுடில்லி.



கட்டுரை

தமிழ்ச் சிறுகதைகளில் தமிழவனின் இடம்

வ. வே. சு. ஐயர் 1917ஆம் ஆண்டு 'மங்கையர்க்கரசியின் காதல் முதலிய கதைகள்' என்ற தலைப்பில் ஐந்து சிறுகதைகள் அடங்கிய தொகுப்பை வெளியிடும்போது, தமிழ்ச் சூழலில் கதைக்கும் சிறுகதைக்கும் பெரிய அளவில் வேறுபாடு இருப்பதாக அறிந்திருக்கவில்லை. இந்த ஐந்து சிறுகதைகளில் 'குளத்தங்கரை அரசமரம்' என்ற ஒரு கதை மட்டுமே சிறுகதைக்குரிய தன்மைகளுடன் எழுதப்பட்டிருப்பதாக விமர்சகர்கள் அங்கீகரித்தனர். மீதமுள்ள கதைகள் வெறும் கதைகளாகவே தேங்கிவிட்டன. வ. வே. சு. ஐயர் சிறுகதைகள் எழுதுவதற்குத் தாகூரின் சிறுகதைகள்தாம் காரணமாக இருந்திருக்கின்றன. மொழிபெயர்ப்புகளின் வழியாக இந்திய மொழிகளின் படைப்புகள் அனைவருக்கும் படிக்கக் கிடைத்தபோது 'குளத்தங்கரை அரசமரம்' கதைகூட தாகூரின் 'காடேர் கதா' கதையின் நேரடித் தாக்கம் என்று அறிந்தனர்.

வ. வே. சு. ஐயர் முதல் சிறுகதைத் தொகுப்பை வெளியிடும்போது உலக இலக்கியத்தில் செழுமையான சிறுகதை மரபு உருவாகிவிட்டது. ஆனாலும், சிறுகதை என்னும் இந்தப் புதிய இலக்கிய வகைமையை வாசகர்கள் புரிந்துகொள்வதில் பிரச்சினை இருப்பதாகக் கருதிய ஐயர், 'சூசிகை' என்ற முன்கதைச் சுருக்கத்தைக் கதையின் தொடக்கத்தில் சொல்கிறார். 'சூசிகைகளைப் படிக்காமல் கதைகளையே துவக்கிப் படித்தால் சுவை அதிகமாகத் தெரியும். ஆனால் ரீதி புதிதாகையால் சிலருக்கு விளங்காமற் போனாலும் போகலாம் என்று சூசிகையைச் சேர்த்திருக்கிறேன்' என்று ஐயர் விளக்கம் தருகிறார். சூசிகையைப் படிக்காமல் கதையைப் படித்தால் விளங்காமல் போவதற்கான எந்த இடமும் இவரது கதைகளில் இல்லை. ஐயர் கதைகளுக்குச் சூசிகையே தேவையில்லை. ஆனாலும் அவர் கொடுத்தார். தற்போது வாசகர்களுக்குச் 'சூசிகை'

சுப்பிரமணி இரமேஷ்

தேவைப்படும் தன்மையில் சில படைப்பாளர்கள் எழுதுகின்றனர். பின்நவீனத்துவத் தன்மையிலான அச்சிறுகதைகளைப் புரிந்துகொள்ள வாசகர்களும் கொஞ்சம் மெனக்கெட வேண்டும். அவர்களில் ஒருவர்தான் தமிழவன்.

வங்கமொழிச் சிறுகதைகளை வாசிக்க வாய்ப்புக் கிடைத்த வ. வே. சு. ஐயர், அதேவடிவத்தில் தமிழிலும் எழுத முயற்சி செய்தார். அவர் அந்த முயற்சியில் வெற்றி பெற்றாரா, இல்லையா என்பது முக்கியமில்லை. வ. வே. சு. ஐயர் செய்த புதிய முயற்சி இன்றுவரை பாராட்டுக்குரியதாக இருந்து வருகிறது. அதுபோன்றதொரு இடத்தை நாம் தமிழவனுக்கும் அளிக்க வேண்டும். உலக இலக்கியப் பரிச்சயமுள்ள தமிழவன், தமிழ்ச் சிறுகதையின் தடத்தை மாற்றி அமைத்தவர்களுள் ஒருவராக இருக்கிறார். இதற்கு அவரது ஐந்து சிறுகதைத் தொகுப்புகளும்தான் சான்று. இந்தக் கட்டுரை தமிழவனின் ‘இறந்துபோனவன் பேசிக்கொண்டே இருந்தான் (2025)’ என்ற சிறுகதைத் தொகுப்பைக்கொண்டு தமிழ்ச் சிறுகதையில் அவரது இடத்தை நிர்ணயிக்க முயல்கிறது.

தமிழவனின் ஒவ்வொரு சிறுகதையுமே விவரிக்க இயலாத உள்ளடக்குகளைக் கொண்டவை. இவரது புனைவுக்குள் உருவகம், குறியீடு, படிமம், தத்துவம், வரலாறு, தொன்மம், கோட்பாடு உள்ளிட்ட நவீன எழுத்துக்குரிய கச்சாப்பொருட்கள் அதிக அளவில் படிந்து கிடக்கும். ஒவ்வொரு வாசிப்பிலும் புதிய புதிய அர்த்தங்களை அளித்துக்கொண்டே இருக்கும். எனவே, வாசகர்கள்தாம் தமிழவன் கதைகளுக்குரிய அர்த்தங்களைக் கண்டுபிடிக்கிறார்கள். இந்த இடத்தில் தமிழவன் வெறும் பார்வையாளராக மட்டுமே இருக்கிறார். படைப்பாளியின் அனுமானத்தையும் கடந்து வாசகர்கள் அவர் கதைகளுக்கான எல்லைகளை விரித்துக்கொண்டே செல்கின்றனர். தமிழவனின் கதைகள் ஒற்றை மையத்தைக் கடந்து வெவ்வேறு மையங்களை உருவாக்கிக்கொண்டே இருக்கின்றன. அதேநேரத்தில் மையமழிந்த புனைவுகளையும் இவர் எழுதியிருக்கிறார். மேலும், தமிழவன் தன்னிலை கூற்றுமுறைக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார். இவை தமிழவன் கதைகளின் பொதுத் தன்மைகளாகக் கருதலாம்.

‘தூரம்’ என்ற சிறுகதையில் கல்லூரிப் படிப்புக்கு உதவிய விஸ்வநாதன் என்ற நண்பனைத் தன் அந்திமக் காலத்தில் தேடிக்கொண்டிருக்கிறான் ஒருவன். தன் வாழ்க்கையையே அர்த்தமுள்ளதாக மாற்றிய அவனது நினைவுகளைத் தான் படிக்கும் காலத்தில் பயன்படுத்திய குறிப்பேடுகளின் வழியாக மீட்டெடுக்க நினைக்கிறான். அவன், தன் நினைவுகளின் வழியாக விஸ்வநாதனின் ஸ்தூல உடலைப் பார்த்துவிட தொடர்ந்து முயன்றுகொண்டே இருக்கிறான். ஆனால், அது எப்படிச் சாத்தியம் என்பதை வாசிப்பவர்கள்தாம் கண்டுணர வேண்டும். தமிழவன் தன் நினைவுகளில் படிந்துகிடக்கும் வெவ்வேறு மனிதர்களைத்தான் தம் கதைகளில் உலவ விடுகிறார். ஆனால் அவர்கள் புனைவாசிரியரின் பிம்பங்களாகவும் வெளிப்பட்டுவிடுகிறார்கள். அப்படித்தான் இந்தக் கதையின் விஸ்வநாதனும் இருக்கிறான். அவனுக்கு நீட்ஷேவைத் தெரிந்திருக்கிறது.

தமிழவன் தம் புனைவுகளில் கதாபாத்திரங்களுக்கு இடையிலான விரிவான உரையாடலைத் திட்டமிட்டுத் தவிர்த்துக்கொண்டே இருக்கிறார். கதைசொல்லியின் மன விகாசங்கள் மட்டுமே புனைவுகளில் அதிகமாக வெளிப்படுகின்றன. கதைசொல்லியாக இருப்பவர் பிற கதாபாத்திரங்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்திக்கொண்டே இருக்கிறார். தமிழவன் தம் புனைவுகளை அறிவுச் செயல்பாட்டின் ஒரு பகுதியாகப் பார்க்கிறார். ‘பிளாட்பாரம்’ என்ற சிறுகதையில் குலசேகரன் என்றொரு கதாபாத்திரம் வருகிறது. இவனது பின்னணி குறித்துப் புனைவில் பெரிய அளவில் தரவுகள் இல்லை. இவன் கிராமத்துச் சூழலில் இருந்து நகரத்துக்குப் படிக்க வந்தவன். பெருநகரக் கலாச்சாரத்துடன் தன்னைப் பொருத்திக்கொள்ள முடியாமல் தவிக்கிறான். தொடர்ந்து இவனுக்குக் கிடைக்கும் புறக்கணிப்புகள் சக மனிதர்கள்மீதான வெறுப்பை உருவாக்கிக்கொண்டே இருக்கின்றன. பெரிய உரையாடல்கள் எதுவுமே இக்கதைக்குள் நிகழவில்லை. வாசிப்பவர்கள் அக்கதாபாத்திரத்தின் தொடர் நடவடிக்கைகளினூடாகச் சில அனுமானங்களை உருவாக்கிக்கொள்ள வேண்டும். ‘குலசேகரன் பிளாட்பாரத்தில் நிற்காமல் போகும் அந்த ரயிலின்முன், இன்னும் பத்து நிமிடத்தில் தள்ளிக் கொடூரமாய்க் கொலை செய்யப் போவதையோ யாரும் எதிர்பார்க்கவில்லை’ என்று இக்கதை முடிந்துவிடுகிறது. இந்த இடத்திலிருந்துதான் வாசிப்பவர்கள் இக்கதையைத் தொடங்க வேண்டும். புனைவின் கடைசி வரிகள் கடந்த காலத்தில் நிகழ்ந்த பல இரயில்வே

பிளாட்பார கொலைகளை நினைவூட்டுகின்றன. குலசேகரன் அந்தப் பெண்ணை ஏன் கொன்றான் என்பதெல்லாம் அனுமானத்திற்கு அப்பாற்பட்டவை.

‘இறந்துபோனவன் பேசிக்கொண்டே இருந்தான்’ என்ற சிறுகதையும் பல்வேறு உள்ளடுக்குகளைக் கொண்டிருக்கிறது. ஓவிய ஆசிரியரும் எழுத்தாளருமான ஒருவன் கொரோனாவால் இறந்துபோகிறான். அவனைப் பற்றிய நண்பர்களின் நினைவுகளாக இக்கதை எழுதப்பட்டிருக்கிறது. வாசிப்பவர்களுக்கு இக்கதை பல அனுமானங்களைத் திறந்துவிடுகிறது. எழுத்தாளன் தன் மனைவியை விவாகரத்துச் செய்ததற்கும் தம்பி வீட்டின்மீது அன்பாக இருந்ததற்கும் அவன் நண்பர்களால் காரணம் தேடப்படுகிறது. தமிழவன் அப்படியே இந்தக் கதையை விட்டுவிடுகிறார். ஏனெனில் தமிழவன் தம் கதைகளை முடிவை நோக்கிக் கொண்டுசெல்வதில்லை. ஒரு விவாதக் களத்தை உருவாக்கிவிட்டு அந்த இடத்திலேயே முடித்து விடுகிறார். இவரது பல புனைவுகள் நவீன கவிதைகளைப் போன்றவை. வாசிப்பில் பிடிபடாத தருணங்களே அதிகம். ஆனால், அக்கதைகள் உருவாக்கும் சுவாரசியம் முக்கியமானதாக இருக்கும். முதல் வாசிப்பில் தட்டையானதாகத் தெரியும் இவரது பல சிறுகதைகள், அடுத்தடுத்த வாசிப்பில் அந்த எண்ணத்தை மாற்றிவிடுகின்றன.

தமிழவன் தம் கதைகளில் ஓர் அடித்தளத்தை கட்டமைத்துவிட்டு ஒதுங்கிக் கொள்கிறார். ‘காற்று’ என்ற கதையிலும் அப்படித்தான் நிகழ்கிறது. அந்தக் கதையில் இரண்டு அக்காக்கள் வருகிறார்கள். மூத்த அக்கா பயப்படுபவர்; இளைய அக்கா பயப்படாதவர். இந்த பயம் என்பது அச்ச உணர்வு கிடையாது. பெண்களுக்கு எதிரான சமூகக் கட்டமைப்புகளை இளைய அக்கா பொருட்படுத்துவதில்லை. அவள் தான் செய்வதே சரியானது என்று நம்புபவள். பெரிய அக்கா இவளுக்கு நேரெதிரானவள். இவை கதைக்குள் மறைந்திருக்கும் குறிப்புப் பொருட்கள். ‘பயம்’ என்ற ஒற்றைச் சொல்லைக்கொண்டே இக்கதையின் அடிக்கட்டுமானத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். பயத்தைக் கடத்தல் என்பது மீறலாக உள்வாங்கிக்கொள்ளப்படுகிறது. பயத்துடன் இருப்பவள் சமூக ஒழுங்குக்குக் கட்டுப்பட்டவளாகிறாள். அதேநேரத்தில் சமூக மதிப்பீடுகளை அவ்வளவு எளிதில் கடந்துவிடவும்

இறந்துபோனவன் பேசிக்கொண்டே இருந்தான், தமிழவன், எதிர் வெளியீடு, விலை: ரூ. 200

முடியாது என்பதையும் தமிழவனின் புனைவுகள் நினைவூட்டுகின்றன. அம்மா, மரணம் இரண்டுமே பெரும் அர்த்தமுடைய மதிப்பீடுகள். நனவு மனம் இம்மதிப்பீடுகள்மீது விரிசல்களை உருவாக்க முயன்றாலும் நனவிலி மனதில் சேகரமாகியுள்ள தொன்ம மதிப்பை ஒன்றுமே செய்ய முடியவில்லை என்பதையும் இவரது புனைவுகளினூடாக அறிய முடிகிறது. அறிவுக்கும் உணர்ச்சிக்கும் இடையில் நடைபெறும் போராட்டம் தர்க்கங்களுக்குள் அடங்காதவை என்பதை ‘பஸ்’ சிறுகதையிலிருந்து உள்வாங்கிக் கொள்ளலாம்.

தமிழ்ச் சிறுகதையின் வடிவம், உள்ளடக்கத்தின்மீது பெரும் குறுக்கீட்டை நிகழ்த்தியவை தமிழவன் சிறுகதைகள். உதாரணமாக, ‘கதையின் தொடக்கத்தில் ஓர் அறையில் துப்பாக்கி இருப்பதாக வருணித்தால், முடிவுக்குள் அது வெடித்தே தீரவேண்டும்’ என்று ஆன்டன் செகாவ் கூறியதாக ஒரு கருத்துண்டு. சிறுகதை செறிவான ஓர் இலக்கிய வடிவம். அதில் தேவையில்லாத உரையாடல்களோ வருணனைகளோ இடம்பெறக்கூடாது. அது அச்சிறுகதையின் கூர்மையை மழுங்கடித்துவிடும்; அக்கதைக்குத் தேவையில்லாத சுமையை ஏற்றிவிடும் என்று விமர்சகர்கள் கூறியிருக்கின்றனர். இதுபோன்ற மரபான வரையறைகளைத் தமிழவன் சிறுகதைகள் பொருட்படுத்துவதில்லை. ‘அடுத்த வீட்டுக்காரன்

மனைவியுடன் ஓடிப்போனவனைப் பற்றி எட்டுக்காலம் செய்தி போடும் பத்திரிகையைப் பார்க்கலாமா என ஆசை வந்தது' என்று ஒரு கதையில் (பஸ்) எழுதியிருக்கிறார். இந்தக் கதையின் கதாபாத்திரமான ஏ. எஸ். கே. ராஜன், தன் தாயின் மரணச் செய்தியை அறிந்து ஊருக்குச் செல்ல பேருந்து நிறுத்தத்தில் நின்றுகொண்டிருக்கிறான். நீண்ட நேரமாகப் பேருந்து வரவில்லை. அந்த நேரத்தில் அவனுக்கு அங்குள்ள டீக்கடையில் நாளிதழ் படிக்கலாம் என்ற எண்ணம் உருவாகிறது. 'பத்திரிகையைப் பார்க்கலாமா' என்று எழுதியிருந்தாலே போதுமானது. என் அனுமானத்தில் இந்தக் கதையில் சுட்டப்படும் செய்தித்தாள் 'தினத்தந்தி. ' டீக்கடைகளில் அந்தச் செய்தித்தாளே அதிகமும் வாங்கப்படுகிறது. தவிர கொலை, கொள்ளை, கற்பழிப்பு செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் செய்தித் தாளாகவும் அதுவே இருக்கிறது. அறிவுத் தளத்தில் அந்தச் செய்தித்தாள்மீது ஒரு ஒவ்வாமை இருக்கிறது. அந்த ஒவ்வாமையைத் தன் கதாபாத்திரத்தின் மூலமாகத் தமிழவன் இந்த இடத்தில் வெளிப்படுத்துகிறார். இதே கதையில் 'வலது சட்டைப் பாக்கெட்டில் கைவிட்டுப் பணத்தைக் கொடுத்துவிட்டுக் கடைக்கு வெளியில் வந்தான்' என்று ஒரு வரி வருகிறது. அவன் எந்தப் பாக்கெட் சட்டையிலிருந்து பணத்தை எடுத்தான் என்பது இக்கதைக்கு அவசியமில்லாதது. ஆனால் தமிழவன் இதுபோன்ற தகவல்களைத் தம் கதைகளில் தொடர்ந்து தந்துகொண்டே இருக்கிறார். இதனைத் தன்னுடைய பாணியாகவும் நிலைநிறுத்திக்கொண்டிருக்கிறார்.

தமிழவன் தீவிரமான அரசியல் பார்வை கொண்டவர். அவரது பல கதைகளில் அவரது ஈழ அரசியல் பார்வை துலக்கமாக வெளிப்பட்டிருப்பதை அறியலாம். 'வானத்தைப் பிளக்க முத்துக்குமார் எழுப்பிய ஆதிக்குரல்' என்றொரு சிறுகதை இத்தொகுப்பில் உள்ளது. தமிழவனின் தீர்க்கமான அரசியலை வெளிப்படுத்தும் பிரதி இச்சிறுகதை. ஈழத் தமிழர்களின் இனப்படுகொலைக்கு அன்றைய நடுவணரசு துணைபோனதற்கு எதிர்ப்புத் தெரிவித்து 2009, ஜனவரி 29 அன்று தீக்குளித்து உயிரை விட்டவர் தூத்துக்குடியைச் சார்ந்த பத்திரிகையாளர் கு. முத்துக்குமார். எளிய குடும்பப் பின்னணியைச் சார்ந்த முத்துக்குமாரின் இறப்பு, உலகத் தமிழர்களிடம் பெரும் அதிர்வை உருவாக்கியது. தமிழவன் இந்த நிகழ்வின்மீது இப்புனைவினூடாகக் குறுக்கீட்டைச் செய்திருக்கிறார். ஓர் இனம் அழிக்கப்பட்டதன் கடைசி தருணங்கள் இக்கதையில் விரிவாகப் பேசப்பட்டுள்ளன. 2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் தேதி தமிழ் ஈழத்திற்காகப் போராடிய வேலுப்பிள்ளை பிரபாகரன் இலங்கை இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டார். போர் அதனுடன் ஏறக்குறைய முடிவுக்கு வந்துவிட்டது. பிரபாகரனின் வீழ்ச்சிக்கான சமிக்ஞையாகவே முத்துக்குமாரின் இறப்பைத் தமிழவன் பார்த்திருக்கிறார். ஈழப்போரைத் தமிழ்மக்கள் எதிர்கொண்ட விதத்தில் கடும் அதிருப்தியை இக்கதை பதிவு செய்திருக்கிறது.

இந்தப் புனைவுக்கு நேரெதிரானது 'நர்ஸ் வரவில்லை' என்ற சிறுகதை. பிரேம்கௌட் என்ற பழங்குடித் தலைவனின் மோசமான செயல்பாடுகளை இச்சிறுகதை கடுமையாக விமர்சிக்கிறது. இவன் தன் இனத்தைப் பயன்படுத்திக்கொண்டு முன்னேறிக்கொண்டே இருக்கிறான். பிரேம்கௌடின் உயர்வு அவனுக்குள் நடத்தை மாற்றத்தை உருவாக்குகிறது. தன் இனத்தின் வளர்ச்சியை மறந்து, தன்னை முன்னிறுத்திக் கொள்வதிலேயே கவனம் செலுத்துகிறான். அவனது நிகழ்கால வாழ்க்கைக்கும் ஒரு காலத்தில் அவன் எழுதிய பழங்குடிப் பாடலுக்கும் இடையே மிகப்பெரிய முரண் உருவாகிறது. பிரேம்கௌட் தங்களை ஈடேற்றத் தோன்றியவன் என்று அவனது சமூகம் நம்புகிறது. ஆனால், அவனது செயல்பாடுகள் அச்சமூக நம்பிக்கைக்கு எதிரானதாக இருக்கிறது. கர்நாடகத்தைச் சார்ந்த அரசியல் தலைவரொருவர் இக்கதையில் குறியீடாகப் பயன்படுத்தப்பட்டுள்ளார் என்பது தெரிகிறது. அந்தத் தலைவரைப் பற்றிய வரலாறு தெரியும்வரை பன்முக வாசிப்புக்கு உரியதாக இக்கதை இருக்கும். தவிர, இக்கதையின் பிரேம்கௌட் போன்று பலர் தமிழகத்திலும் இருக்கிறார்கள். இச்சிறுகதையை வாசிக்கும்போது அவர்களது முகங்களும் நிழலாடுகின்றன. எனவே, பிரேம்கௌட் யார் என்பதைத் துப்பறிந்து இக்கதையின் பன்முக வாசிப்பைச் சிதைக்கத் தேவையில்லை என்றும் தோன்றுகிறது.

தமிழவன் தம் புனைவுகளில் புறப்பிரச்சினைகளுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை அகப் பிரச்சினைகளுக்கும் கொடுத்துள்ளார். ஆண் பெண்ணுக்கு இடையில் உருவாகும் அகச் சிக்கல்களின் தருணங்களில் ஒன்றை 'குளமும் கல்லும்' என்ற சிறுகதையில் எழுதியுள்ளார். தனக்கு வாழ்க்கைத் துணையாக வரப்போகிறவள் எல்லாவற்றிலும் தனக்கு இணையானவளாக இருக்கவேண்டும் என்று ஓர் ஆண் விரும்புவது ஒரு பாவனை. கூட்டு நனவிலி

மனதில் அவள் தனக்குக் கீழானவளாகவும் கட்டுப்பட்டவளாகவும் இருக்கவேண்டும் என்றே எண்ணுகின்றனர். இக்கதையில் வரும் ஆண், தன் காதலியைக் குளத்தில் கல்லெறிதலில் வெற்றிபெறச் செய்ய வேண்டும் என்று நினைக்கிறான். அவள் தோற்றுக்கொண்டே இருக்கிறாள். இதுவே இவர்களது பிரிவுக்குக் காரணமாகிறது. அவளை நிராகரிக்க அவன் மனம் இந்தக் காரணத்தைத் தேர்ந்துகொள்கிறது. உண்மை காரணம், பிரதிக்குள் பிரதியாக மறைந்து கிடக்கிறது. சிறிய கதையாக இருந்தாலும் வாசிப்பில் அது உருவாக்கும் வெளி அற்புதமானது.

தமிழவன் இத்தொகுப்பின் முன்னுரையில், 'இன்றைய காலக்கதைகள் தமிழ்ச் சமூகத்தில் பெரியார் மூலம் வந்துள்ள பகுத்தறிவின் புறவயப் பண்புகளை எப்படித் தருகின்றன என்பதை இத்தொகுப்பில் காணலாம்' என்று எழுதியிருக்கிறார். இந்தச் சிந்தனை பல கதைகளில் உள்ளொடுங்கிக் காணப்படுகின்றன. 'கண்கள்' என்ற சிறுகதையில் இத்தன்மை கொஞ்சம் வெளிப்படையாகத் தெரிகிறது. மயிலம்மா என்ற உயர்சாதிப் பெண், தாழ்த்தப்பட்ட சாதியைச் சார்ந்த சக பணியாளரை எதிர்ப்பை மீறித் திருமணம் செய்துகொள்கிறாள். அந்தப் பெண்ணிடம் இருக்கும் திராவிட இயக்கச் சிந்தனைதான் அவள் இப்படியொரு முடிவை எடுக்கக் காரணமாக அமைகிறது என்று தமிழவன் நம்புகிறார். அதே நேரத்தில் அந்தச் சிந்தனை இன்னமும் அனைவரிடமும் பரவலாக்கப்படவில்லை என்பதற்கு மயிலம்மாவின் அப்பா கதாபாத்திரம் உதாரணமாக இருக்கிறது. அவரால் தன் சாதி பெருமிதங்களில் இருந்து விடுபட முடியவில்லை. இதனைத் திராவிட இயக்கத்தின் போதாமையாகவும் பார்க்கலாம். இதெல்லாம் என் தனிப்பட்ட வாசிப்புக்கு உரியவை. இதனை மட்டும்தான் இக்கதை பேசுகிறது என்ற வரையறைக்கு உட்படாதவை தமிழவனின் சிறுகதைகள் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழவன் பெரும்பாலும் தம் கதாபாத்திரங்களை உணர்ச்சிக்கு அப்பாற்பட்டவர்களாகவே படைத்திருக்கிறார். அல்லது அப்படிப்பட்டவர்களே இவரது புனைவுகளில் இடம்பெறுகின்றனர். வாழ்க்கையின் ஒரு பகுதியாகிவிட்ட துயரங்கள் உருவாக்கும் பாவனைகளுக்கு இவரது கதாபாத்திரங்கள் முக்கியத்துவம் கொடுப்பதில்லை. இப்படியொரு இடத்தைத் தம் கதைகளில் தொடர்ந்து தக்கவைக்க தமிழவன் முயன்றுகொண்டே இருக்கிறார். அந்தத் துயரங்களைப் பகடியாக்கிக் கடந்துசெல்வதையும் இவரது புனைவுகளில் காணமுடிகிறது. தமிழவன் தன் நண்பர்கள் பெயரை நேரடியாகக் கதைகளில் பயன்படுத்திக் கொள்கிறார். இதனால் இவரது கதைகளுக்கு ஒரு நிகழ்காலத் தன்மை கிடைக்கிறது. தவிர, உண்மைக்கு மிக அணுக்கமாகவும் இருக்கிறது. இவரது பல கதைகள் எளிதில் தின்று செரிக்க முடியாதவை. அதனால் அறிவுஜீவித் தளத்திலேயே இவரது புனைவுகள் வாசிக்கப்படுகின்றன. தமிழவன் எல்லோருக்குமான எழுத்தாளர் இல்லை என்பது என் அனுமானம். அவரது கதைகள் பூடகத்தன்மை கொண்டவை. வாசிப்பவர்களின் உழைப்பையும் கொஞ்சம் கோருபவை. புனைவுக்கும் அல்புனைவுக்குமான இடைவெளியை அழித்துக் கொண்டிருப்பதிலும் தமிழவன் தொடர்ந்து கவனம் செலுத்துகிறார். தமிழவனிடம் செயல்படுவது ஒரு தொன்ம மொழி. இந்த மொழியில் நிறைய சங்கேதங்கள் உள்ளன. தமிழவனின் புனைவுகளைப் புரிந்துகொள்ள அவரது மொழி இயக்கத்தையும் உள்வாங்கிக்கொள்ள வேண்டும். அதற்கு அவரது உரைநடை நூல்கள் உதவக்கூடும். ஒரு சிறுகதையைப் புரிந்துகொள்ள இத்தனை மெனக்கெட வேண்டுமா என்று நினைப்பவர்களுக்குத் தமிழவன் சிறுகதைகள் எவ்விதப் பாதிப்பையும் உருவாக்காது. புதுமைப்பித்தன் சிறுகதைகளை வாசிக்கவே தற்காலத்தில் சிரமப்படுபவர்கள் உண்டு. அப்படிப்பட்டவர்களுக்குத் தமிழவன் அந்நியமாகத்தான் தெரிவார்.

சிறுகதையின் தன்மை குறித்த ஜெயமோகனின் (எழுதும் கலை) பின்வரும் கருத்து மிக முக்கியமானது. "சிறுகதை வாசகனிடம் எதையாவது சொல்வதற்காக உருவான வடிவம் அல்ல. வாசகனைக் கதையில் பங்கெடுக்க வைப்பதற்காக உருவான வடிவம். வாசகனை எந்த அளவுக்குக் கற்பனை செய்ய வைக்கிறதோ அந்த அளவுக்குச் சிறுகதை வெற்றி பெறுகிறது. சொல்லப்படும் விஷயம் சிறுகதையில் இருக்கக் கூடாது. வாசகனே ஊகித்துச் சென்றடையும் விஷயமே சிறுகதையின் மையமாகும்" என்கிறார். இந்தக் கருத்து அப்படியே தமிழவனின் புனைவுகளுக்குப் பொருந்தக்கூடியது. தமிழவனின் கதைகளைப் படித்து உருவான கருத்தாகவும்கூட இதனைப் புரிந்துகொள்ளலாம். நூறாண்டுகளுக்கும் மேலான தமிழ்ச் சிறுகதையின் வரலாற்றில் சிலர் மட்டுமே அதன் உருவத்தை மாற்ற முயற்சி செய்திருக்கிறார்கள். அதில் தமிழவனின் புனைவுகளுக்கும் நிச்சயம் இடமிருக்கிறது.

●

கட்டுரையாளர்: உதவிப் பேராசிரியர், தருமமூர்த்தி
இராவ்பகதூர் கலவல கண்ணன்செட்டி இந்துக்கல்லூரி,
சென்னை – 600 072

2025 ஆம் ஆண்டு

ஈரோடு புத்தகத் திருவிழாவில்

மக்கள் சிந்தனைப் பேரவை சார்பில்

சிறந்த இளம் அறிவியலாளர் ஒருவருக்கு

ஜி.டி.நாயுடு விருது

ரூபாய் ஒரு லட்சம் பரிசுத்தொகை

- விருதாளர் 40 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும். புதிய அறிவியல் கண்டுபிடிப்புகளுக்கான ஆய்வு முயற்சிகளில் வெற்றிபெற்றிருக்க வேண்டும். இது மாநிலந்தழுவிய விருது என்பதால் தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் ஆய்வுக் குறிப்புகளை அனுப்பி வைக்கலாம். இந்தியாவின் வேறு மாநிலங்களில் ஆய்வை மேற்கொள்பவராகவோ, பணிசெய்பவராகவோ உள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த அறிவியலாளர்களும் விண்ணப்பிக்கலாம்
- அறிவியல் துறையில் ஆழத்தடம் பதித்த வல்லுனர்களாக விளங்கும் ஐந்து தகுதி மிக்க அறிவியல் அறிஞர்களின் தலைமையில் ஒரு தேர்வுக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவினரால் தேர்வு செய்யப்படும் ஒருவருக்கே இவ்விருது வழங்கப்படவுள்ளது
- **இவ்விருது பாராட்டுக் கேடயத்துடன் ரூபாய் ஒரு லட்சம் பரிசுத் தொகையையும் உள்ளடக்கியதாகும். விருதுத் தொகையை எம்.ஏ.முகமது முஸ்தபா அவர்களை நிறுவனராகக் கொண்ட ‘ சிங்கப்பூர் முஸ்தபா தமிழ் அறக்கட்டளை ’ ஒவ்வொரு ஆண்டும் வழங்கி வருகிறது**
- பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளிலுள்ள ஆய்வுக்கூடங்களிலோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட வேறு ஆய்வுக்கூடங்களிலோ ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். பெயர்பெற்ற சர்வதேச அறிவியல் இதழ்களில் வெளியான தனது 10 கட்டுரைகளின் தலைப்புகளையும் வெளியான இதழ்கள் மற்றும் தேதிகள் குறித்த விவரங்களையும் அனுப்பி வைக்க வேண்டும்
- எந்தக் கண்டுபிடிப்புக்கு ஆய்வாளர் விருதுக்குரியவராக விளங்குகிறார் என்பதைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் தெரிவிக்க வேண்டும்
- ஆய்வுக்குறிப்புகளையும் ஆய்வு தொடர்புள்ள அனைத்து ஆவணங்களையும் எதிர்வரும் 25.07.2025 ஆம் தேதிக்குள் info@makkalsinthanaiperavai.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டுகிறோம். பலரின் வேண்டுகோளுக்கிணங்க ஏற்கனவே அறிவித்திருந்த கடைசி தேதியிலிருந்து தற்போது கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

விருது வழங்கும் நிகழ்வு ஆகஸ்டு 5 ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு ஈரோடு புத்தகத் திருவிழா சிந்தனை அரங்கில் நடைபெறவுள்ளது. VIT பல்கலைக்கழகத்தின் வேந்தர் டாக்டர் G விஸ்வநாதன் அவர்கள் விருது வழங்கி விழாச் சிறப்புரை ஆற்றவுள்ளார்.

மக்கள் சிந்தனைப் பேரவை

தமிழ்நாடு மாநிலக் குழு

A-47, சம்பத் நகர், ஈரோடு - 638 011. www.makkalsinthanaiperavai.org | தொலைபேசி எண் : 0424 2269186

கட்டுரை

புறநானூற்றில் குடிமக்கள் ஈகைத்திறமும் விருந்தோம்பலும்

கவிஞர் மெய்ஞானி பிரபாகரபாபு

முனைவர் ம. பிரபாகரன்

தமிழின் ஆளுமை மிகவும் பெரியது. உலகளவில் பண்பாட்டு மேம்பாட்டில் தமிழ்மொழி உண்டாக்கிய தாக்கம் அளப்பரியது. இன்று உலகெலாம் தமிழ்மொழி பரவலுக்கான பன்னாட்டு மாநாடுகள் நடத்தி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ் இலக்கியங்கள் தலைசிறந்த புலவர்களால் உருவாக்கப்பட்டவை. தமிழினப் பண்பாட்டு வரலாற்றின் ஊற்றுக்கண்ணாக விளங்குபவை சங்கப் பாடல்கள். அகம், புறம் என்று பகுக்கப்பட்ட ஐந்திணை வாழ்வியலில் காதல் சார்ந்தவை அகப்பாடல்கள். காதல் தவிர்த்த போர், கொடை, ஈகை, புகழ் போன்ற பலவற்றையும் உள்ளடக்கியவை புறப்பாடல்கள்.

மூவேந்தர்கள் மற்றும் கடையெழு வள்ளல்களின் போர்க்குணத்தையும் மறத்தையும் உள்ளடக்கிய பாடல்களில் கொடைத் திறத்தையும், ஈகைத் திறத்தையும் வெளிப்படுத்தும் பாடல்கள் பல எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான புறநானூற்றில் காணக் கிடைக்கின்றன. புறநானூற்றில் சேரமன்னர்கள், சோழ

மன்னர்கள், பாண்டிய மன்னர்கள் மற்றும் குறுநில மன்னர்களின் புகழேத்தும் பாடல்களில் காணப்படும் வரலாற்றுக் குறிப்புகள் எண்ணற்றவை. தமிழர் பண்பாட்டின் தொன்மைச் சிறப்பை ஆய்வதற்குப் பயனுள்ளவை. தம்மை நாடி வந்து பாடிய புலவர்களுக்கும் இரவலர்களுக்கும் ஆடல், பாடல், கூத்து நிகழ்த்திய பாணர்கள், விறலியர் முதலான கலைஞர்களுக்கும் யானைகள், குதிரைகள், தேர்கள், பொற்காசுகள் எனப்பல விலைமதிப்பற்ற பொருட்களை மன்னர்களும் மறவர்களும் கொடையாகத் தந்ததை அறிவார்ந்த புலவர்கள் புறநானூற்றுப் பாடல்களில் பதிவு செய்துள்ளனர். அக்கால அரசியல் சூழல்கள், இறையாண்மை, செங்கோல் ஆட்சிச் சிறப்பு, வீரம், போர்த்திறம், நீர்மேலாண்மை, கொடைத்திறம், மொழிப்புலமை போன்றவற்றோடு ஊர்புறங்களில் வாழும் குடிமக்களின் வாழ்க்கை முறைமைகளையும் ஈகைக் குணத்தையும் தெளிவாக வெளிப்படுத்தும் குறிப்புகளை அள்ளித்தரும் வரலாற்று ஆவணமாகத் திகழ்வது புறநானூறு. குடிமக்களின் தலைவர்களும் தம்மை நாடி வந்த இரவலர்களுக்குக் கொடை தந்திருக்கின்றனர். நற்குடிப் பெண்கள் விருப்போடு விருந்தோம்பல்கள் புரிந்ததையும் பாடல்களில் பதிவு செய்திருப்பது குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு புலவரும் தாம் கண்ட காட்சியைக் கண்முன் காட்டுகின்றனர்.

புறநானூற்றுப் பாடல்களைக் கூர்ந்து பயின்று நுட்பமாக ஆய்வு செய்ததில் மன்னர்கள் மட்டுமன்றி, ஊர்களில் வாழும் படை மறவர்களும் குடித்தலைவர்களும் கொடை உள்ளத்தோடு விளங்கியதையும் மனையறம் காக்கும் மகளிர் விருந்தோம்பலில் சிறந்து விளங்கியதையும் அறிய முடிகிறது. குடித்தலைவனின் நற்பண்புகளும் மென்மையான குணங்களும் புலனாகின்றன. புறநானூற்றுப் பாடல்களை ஆய்ந்து பண்டைய தமிழரின் ஒப்பற்ற பண்பாட்டுக் கூறுகளான ஈகைத்திறம், விருந்தோம்பல், பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் குணத்தையும் தெளிவுற நிறுவும் ஆய்வுக் கட்டுரை இது.

குடிமக்களின் ஈகைப்பண்பும் விருந்தோம்பலும்

குடிமக்களிடையே பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் குணம் பண்டைக் காலத்தில் பரவலாக இருந்தது புறநானூற்றுப் பாடல்கள் மூலம் தெளிவாகத் தெரிகிறது. தமது வாழ்வில் வறுமை படர்ந்திருப்பினும் தமக்குக் கிடைக்கும் உண்பொருளைப் பலருக்கும் பகிர்ந்து பசியாறச் செய்து உண்ணும் உளப்பாங்கு வியக்கச் செய்யும். பிறரது பசி வருத்தத்தை நன்குணர்ந்து வாழும் கண்ணோட்டம் போற்ற வல்லது. இதற்குச் சான்றாகப் புறநானூற்றுப் பாடல்கள் காட்டும் உணர்வுகளைக் காட்டலாம். ஈகைக் குணத்தில் குடித்தலைவர்கள் எவ்வளவு மேம்பட்டிருந்தனர் என்று எடுத்துக்காட்டும் புறநானூற்றுப் பாடல்கள் பல உள. ஈகை என்பது வறியவர்க்கு பொருள் ஈவது என்று வள்ளுவர் “ஈகை” அதிகாரத்தில் கூறுகிறார். வறியவர் அல்லாதார்க்குக் கொடுப்பது ஈகை அல்ல. பசிக்கு உணவு தருவதை ஈகையில் வைக்கிறது வள்ளுவம். அற்றார் அழிபசி தீர்த்தல் என்கிறது. ஈகைக்குணம் இரக்கத்தால் வருவது. ஈகை, இரவு, இரவச்சம் எனும் அதிகாரங்களில் உள்ள குறள்களில் இரக்கத்தின் தன்மையைக் காண முடியும்.

பகுத்துண்ணும் பண்பு

புறநானூற்றில் புலவர் ஐயூர் முடவனார் பாடல் (புறம்-314) சிறந்த மனையாளுக்கு இனிய கணவனாக விளங்கும் தலைவனை அரிய மறவனாகப் பாடுகிறது. போர்முனையில் வெல்லும் நெடிய புகழையுடைய தலைவன். நடுகற்கள் மிகுந்த இடுகாட்டில் கடினமான நிலப்பரப்புள்ள சிற்றூர்க் குடியும் போற்றுபவனாக விளங்குபவன். வேந்தன் வருந்தினால் மனம் அடங்காது முந்திவரும் படைக்குச் செல்பவன். புலவர் உறையூர் முதுகண்ணன் சாத்தனார் இயற்றிய புறநானூற்றுப் பாடல், சிறுகுடி மக்களின் வாழ்க்கையையும், பகுத்துண்ணும் பண்பினையும் குடித்தலைவன் மறத்தையும் அவனது ஈகைத் திறத்தையும் எடுத்துக் காட்டுகிறது.

முளவுமாத் தொலைச்சிய முழுச்சொலாடவர்
உடும்பிழு தறுத்த வொடுங்காழ்ப் படலைச்
சீறின் முன்றிற் கூறுசெய் திடுமார்
மறுகுடன் கமழு மதுகை மன்றத்
தலந்தலை யிரத்தி யலங்குபடு நீழற்
கயந்தலைச் சிறாஅர் கணைவிளை யாடும்
அருமிளை யிருக்கை யதுவே வென்வேல்
வேந்துதலை வரினுந் தாங்கும்
தாங்கா வீகை நெடுந்தகை யூரே. (புறம் 325)

இப்பாடலில் குறிப்பிடப்பட்ட ஊர் எத்தகையது என்பதை உற்று நோக்க வேண்டும். பன்றிகள் புரண்டு புழுதியாக்கிய நிலப்பரப்பில் பெருமழை பொழிந்து நின்றிருக்க, குழிகளில் நிரம்பிய சிற்றளவு நீரைக் கன்றுடன் வரும் பசுக்கள் உண்டதால் சேறு கலங்கிய நீரை வரிசையாக முகந்துண்ணும் நிறைவில்லா வாழ்க்கை என்பதில் ஊர்மக்களின் ஏழ்மை நிலை வெளிப்படுகிறது. "கூறுபோட்டுப் பகுத்துக் கொடுப்பதற்காக வைத்த கொழுத்த நிணத்தின் மணம் தெருவெல்லாம் மணக்கும் பொதுவெளி" என்பதில் குடிமக்களின் பகுத்துண்ணும் நற்பண்பும் ஈகைக் குணமும் புலப்படுகிறது.

தலைவனின் நற்குணம்

மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனாரின் பாடல் சிற்றூரின் நிலையையும் குடித்தலைவனின் வள்ளல் குணத்தையும் ஈகைப் பண்பையும் உணர்த்துவதைக் காணலாம்.

…………………. . சில்குடிச் சீறூர்ப்

புடைநடு கல்லி னாட்பலி யூட்டி

நன்னீ ராட்டி நெய்ந்நறைக் கொளீஇய

மங்குன் மாப்புகை மறுகுடன் கமழும்

அருமுனை யிருக்கைத் தாயினும் வரிமிடற்

றரவுறை புற்றத் தற்றே நாளும்

புரவலர் புன்க ணோக்கா திரவலர்க்

கருகா தீயும் வண்மை

உரைசா னெடுந்தகை யோம்பு மூரே. (புறம் 329)

விடியலில் நடுகல்லுக்கு பலியைப் படைத்து நன்னீராட்டி நெய் மணம் கொண்ட, முகில் போன்ற பெரும் புகையெழுந்து தெருவெங்கும் கமழும் சிறிய குடியிருப்புகள் உடைய ஊர். இரவலர்களுக்குக் குறைவில்லாமல் ஈகை செய்யும் வள்ளல் குணம் பொருந்தியவன் காக்கும் ஊரின் பெருமையைக் கூறும் வகையில் அமைந்த இப்பாடலில் அவ்வூரின் தலைவனின் வள்ளல் குணம் போற்றப்படுகிறது. தலைவனால் ஊரின் பெருமையும் உயர்ந்து நிற்கிறது.

புலவர் ஆலந்தூர் கிழார் பாடலில், வேந்தனுக்கு நல்ல துணைவனாக விளங்கும் குடித்தலைவனைப் பாடுகிறார்.

பாணரொ டிருந்த நாணுடை நெடுந்தகை

வலம்படு தானை வேந்தற்

குலந்துழி யுலக்கு நெஞ்சறி துணையே. (புறம் 324)

வன்புலமான ஊரில் பாணரோடு கூடி இன்புறும் தலைவன். வேந்தனுக்குக் கேடு வந்தால், தானும் வருந்தும்படி வேந்தனின் நெஞ்சம் அறிந்த உயிர்த் துணைவன் குடித்தலைவன். முந்தையர் போன்றே தனது வேந்தன் வெற்றியில் கவனம் வைத்துப் போரில் நாட்டம் வைத்திருக்கும் தலைவன் என்று புலவர் காட்சிப்படுத்துகிறார்.

மனைக்கிழத்தியின் விருந்தோம்பல் பண்பும் கொடையுள்ளமும்

புறநானூற்றில் ஆலங்குடி வங்கனார் பாடிய பாடலில் போருக்குச் சென்ற குடித்தலைவனின் மறத்தையும் கொடைக் குணத்தையும் காண முடிகிறது.

………………………………………. . அதனால்,

முயல்சுட்ட வாயினும் தருகுவேம் புகுதந்து

ஈங்குஇருந் தீமோ முதுவாய்ப் பாண!

…………………………………………………….

சீறூர் மன்னன் நெருநை ஞாங்கர்

வேந்துவிடு தொழிலொடு சென்றனன் வந்துநின்

பாடினி மாலை யணிய,

வாடாத் தாமரை சூட்டுவன் நினக்கே. (புறம் 319)

இப்பாடலில் புலவர், முதற்கண் அவ்வூரின் நிலைமையைப் புரிய வைத்துக் குடித்தலைவனின் கொடையுள்ளத்தையும் வெளிப்படுத்துகிறார். இதில் பாணனின் மனநிலையை அறிந்த மனைக்கிழத்தி கூறுவது நெகிழ்த்தவல்லது.

சாடியில் இருப்பதோ சிறிதளவு மாசில்லாத நீர். முற்றத்தில் உலர்ந்த சிறுதினையைப் புறாவும் இதலும் முற்றிலும் உண்ண வரட்டும் என்று தூவுவதற்குச் சுடர் மறைந்து இரவுப் பொழுதானது. அதனால், சுட்ட முயல் கறியேனும் தருவோம்; இங்கு வந்து இருப்பீராக என்று தங்கள் நிலைமையைக் கூறிப் பாணனை அழைக்கிறார்கள். சிற்றூர்த் தலைவன் வேந்தன் ஏவிய தொழில் என்று சென்றுள்ளான். அவன் வந்து நின் பாடினி பொன்மாலை அணியவும், உனக்கு வாடாத பொற்றாமரையைச் சூடுவான் என்று கூறுவதில் மனைக்கிழத்தி ஒருத்தியின் இரக்க உணர்வும் கொடையுள்ளமும் விருந்தோம்பல் பண்பும் புலப்படுகிறது.

ஊரினர் விருந்தோம்பலும் கொடையும்

புலவர் தங்கால் பொற்கொல்லன் வெண்ணாகனார் பாடிய பாடலில் போருக்குச் சென்ற தலைவன் சார்ந்த குடிமக்களின் விருந்தோம்பலையும் கொடைக் குணத்தையும் காண முடிகிறது.

…………………………………. மனைவியும்,
வேட்டச் சிறாஅர் சேண் புலம் படராது
படப்பைக் கொண்ட குறுந் தாள் உடும்பின்
விழுக்கு நிணம் பெய்த தயிர்க் கண் விதவை
யாணர் நல்லவை பாணரொடு ஒராங்கு
வரு விருந்து அயரும் விருப்பினள்; கிழவனும்,
அருஞ் சமம் ததையத் தாக்கி பெருஞ் சமத்து
அண்ணல் யானை அணிந்த
பொன் செய் ஓடைப் பெரும் பரிசிலனே. (புறம் 326)

தமது வேட்டுவச் சிறுவர்கள் கொல்லைப் புறத்தில் இருந்து கொண்டு வந்த உடும்பின் கொழுத்தத் தசையில் பெய்த தயிருடனான சோற்றைப் புதிதாக வந்த பாணர் கூட்டத்தோடு உண்பிக்கும் மனையாள். தலைவனும் ஒரு பெரும் போரில் வென்று வந்த யானைகளின் பொன் முகபடாம் தன்னைக் கொடையாகத் தரும் பெரும் பரிசிலன் என்பது புலவர் கூற்று. இப்பாடலில் குடும்பத்தலைவியின் விருந்தோம்பல் பண்பும் மறக்குடித் தலைவனின் கொடையுள்ளமும் புலப்படுகிறது.

மனையாளின் விருந்தோம்பலும் தலைவனின் கொடைப் பண்பும்

புறநானூற்றில் இப்பாடலைப் பாடிய புலவர் பெயர் தெரியவில்லை. புலவர்களை விளித்துப் பாடும் பாடலாக அமைந்தது.

ஆங்கண் படரின்,
'உண்க' என உணரா உயவிற்று ஆயினும்,
தங்கினிர் சென்மோ, புலவிர்! நன்றும்;
சென்றதற் கொண்டு, மனையோள் விரும்பி,
வரகும் தினையும் உள்ளவை எல்லாம்
இரவல் மாக்கள் உணக்கொளத் தீர்ந்தென,
குறித்து மாறு எதிர்ப்பை பெறாஅமையின்,
குரல்உணங்கு விதைத்தினை உரல்வாய்ப் பெய்து
(புறம் 333)

இரவலர்கள் சென்றால் அந்த இல்லத்தலைவி வீட்டில் இருக்கும் வரகு, தினை போன்ற பொருட்கள் அனைத்தையும் உண்ணத் தருவதோடு, குறியெதிர்ப்பு முறையில் பெறமுடியாத நிலையில் விதைத் தினையைக் குற்றியெடுத்து உண்ண வைத்தே அனுப்புவாள் என்று பாடுவது அக்கால விருந்தோம்பல் கோட்பாட்டினை உணர வைக்கிறது. வேந்தரே தம்மிடம் வந்தாலும் உண்ணக் கொடுப்பதையே இரவலர்களுக்கும் அந்த மனையாள் அளிப்பாள் என்பதும் புலவலர்களுக்குப் பரிசாகத் தருவன யாவும் போரில் வெற்றி பெற்றமைக்காக மன்னனிடம் பெற்ற பரிசுப் பொருட்களே என்று கூறுவதும் நெகிழ வைப்பவை.

புறநானூற்றில் புலவர் மதுரைத் தமிழ்க்கூத்தனார் பாடிய பாடலில் குடிமகன் ஒருவனின் மறத்தையும் விருந்தோம்பல் பண்பையும் கொடைக் குணத்தையும் காண முடிகிறது.

…………………………… மனையோள்
பாண ரார்த்தவும் பரிசில ரோம்பவும்
ஊணொலி யரவமொடு கைதூ வாளே
உயர்மருப் பியானைப் புகழ்முகத் தணிந்த
பொலம் புனையோடை. . . ப்
பரிசில் பரிசிலர்க் கீய
உரவுவேற் காளையுங் கைதூ வானே. (புறம் 334)

மனையாள் பாணர்களை உண்பிக்கவும் பரிசிலராகிய புலவர்களைப் பேணவும் உணவிடும் கை ஓயாதவள்; உயர்ந்த தந்தங்கள் கொண்ட யானைகளின் பொன் முகப்படாம் போன்ற பரிசுப் பொருட்களைப் பரிசிலர்க்கு வழங்குவதில் அவள் கணவனும் கை ஓயாதவனே. இருவருமே ஈகைப் பண்பில் சிறந்தவர்கள். கருத்தொருமித்து வாழும் கணவன் - மனைவி. வெற்றி பெற்றுள்ள வேந்தன். அடுத்து, புலவர் அள்ளூர் நன்முல்லையார் பாடிய பாடலில் ஊர்க்குடித்தலைவனின் மறத்தையும் விருந்தோம்பல் பண்பையும் காண முடிகிறது.

…………………………………. அரிவை
நடுகல் கைதொழுது பரவும் ஒடியாது
விருந்து எதிர் பெறுகதில் யானே என்ஐயும்
…………………………………………….
ஒ . . . . வேந்தனொடு,
நாடுதரு விழுப்பகை எய்துக எனவே. (புறம் 306)

தவறாமல் நடுகல்லைக் கைதொழுது வணங்கி வரும் இளையவள் "இடையறாது விருந்தினரை எதிர்வரப் பெறுவேனாக நான்!

அதற்காக என் கணவனும் வேந்தனோடு நாடுதரும் பெரும்பகையை எய்துவானாக" என்று வேண்டுகிறாள். தனக்கு விருந்தினர் வரவேண்டும் என்றும் தனது கணவனுக்குப் போர் வெற்றிகள் வேண்டுமென்றும் விரும்புகிறாள். கணவன் போரில் வென்று வந்தால் கொணரும் பரிசுப்பொருட்களை இரவலர்க்குக் கொடுத்து மகிழ்வதில் அவள் கொண்ட நாட்டம் நெகிழ்த்தவல்லது.

சீறூர்த் தலைவனின் கொடை நலம்

புலவர் உறையூர் முதுகூத்தனார் பாடிய பாடலில் ஊர்க்குடித்தலைவன் ஒருவனின் இல்லாண்மையைச் சிறப்பித்துக் கூறும் புலவர் அவன் ஈகையில் மன்னனுக்கே இணையானவன் என்பதைக் காண முடிகிறது.

காவன் மன்னர் கடைமுகத் துகுக்கும்
போகுபலி வெண்சோறு போலத்
தூவவும் வல்லனவன் றூவுங் காலே. (புறம் 331)

நாடு காக்கும் மன்னன் மனை முன்றிலில் வாரி வழங்கும் வெண்சோறு போல அள்ளித் தரவும் வல்லவன் அவன்! வறியவன் என்றாலும் பிறரது குறிப்பறிந்து நன்மைகள் செய்பவன் தலைவன். மனையாளைப் போலவே மனம் கனிந்து விருதோம்புபவன். மன்னனைப்போல அள்ளித்தரவும் உள்ளம் வல்லவன் அவன் என்று பாராட்டிப் பாடுகிறார் புலவர்.

தானைத் தலைவனின் விருந்தோம்பல் பண்பு

புறநானூற்றில் புலவர் வீரை வெளியனார் பாடிய பாடல் ஒன்றில் தானைத் தலைவன் ஒருவனது ஊராரின் பகுத்துண்ணும் விருந்தோம்பல் பண்பை எடுத்துக்கூறி, பாணனை அவனிடம் செல்லுமாறு அறிவுறுத்துகிறார்.

மானதட் பெய்த வுணங்குதினை வல்சி
கானக் கோழியொ டிதல்கவர்ந் துண்டென
ஆர நெருப்பி னார னாறத்
தடிவார்ந் திட்ட முழுவள் ளூரம்
இரும்பே ரொக்கலொ டொருங்கினி தருந்தித்
தங்கினை சென்மோ பாண! தங்காது
வேந்துதரு விழுக்கூழ் பரிசிலர்க் கென்றும்
அருகா தீயும் வண்மை
உரைசா னெடுந்தகை யோம்பு மூரே. (புறம் 320)

பரப்பியுலர வைத்த தினையரிசியை காட்டுக்கோழியும் இதல் பறவையும் உண்டனவாக, ஆரல் மீன் மணம் ஒருபுறம் கமழ, துண்டு போடப்பட்ட முழு இறைச்சியைக் குழுமியிருந்த பெரிய சுற்றத்தாரோடு இனிதே அருந்தும் ஊர். தனக்குப் பகைவேந்தர் திறையாகத் தந்த பெருஞ் செல்வத்தைப் பரிசிலர்க்குக் குறையாமல் கொடுக்கும் வள்ளல் குணம் கொண்டவன் என்று புகழப்படுகிறான்.

முடிவுரை

சோழ, சேர, பாண்டிய முடிவேந்தர்கள், கடையெழு வள்ளல்கள், குறுநில மன்னர்கள் எனப் பலரும் புறநானூற்றுப் பாடல்களில் கொடைப்பண்பு, விருந்தோம்பல் ஆகியவற்றிற்காகப் பாடப்பட்டுள்ளனர். வேந்தர்கள், வள்ளல்கள் மட்டுமன்றி இக்கோட்பாட்டில் சீறூர்த் தலைவர்களும், குடித்தலைவர்களும் குடிமக்களாக வாழும் ஆண்களும் பெண்களும் நிகராக இருந்துள்ளனர். ஈகையும் விருந்தோம்பலும் இரவலர்களுக்குப் பரிசில்கள் தருதலும் மகிழ்வோடு பகிர்ந்து உண்பதும் குறியெதிர்ப்பு பெற்றாவது பசியாற்றுவதும் பண்டைக் கால வாழ்வியல் கூறுகளில் இன்றியமையாதவையாக இருந்துள்ள நிலை இக்கட்டுரை வாயிலாக ஐயமற நிறுவப்பட்டுள்ளது.

துணை நூற்பட்டியல்

1. புறநானூறு - மூலமும் உரையும் - உரைவேந்தர் ஔவை துரைசாமிப்பிள்ளை
2. புறநானூறு - செய்யுளும் செய்திகளும்- பேரா. முனைவர் ரா. சீனிவாசன்,
3. டாக்டர் உ. வே. சாமிநாதையர் உரை
4. புறநானூறு உணர்த்தும் வாழ்வியல் விழுமியங்கள், கட்டுரையாளர் கே. சிவப்பிரகாசம், பாரதியார் பல்கலைக்கழகம்.
5. புறநானூறு உரை - புலியூர்க் கேசிகன்
6. புறநானூற்றில் அறம் - கட்டுரை, களஞ்சியம் இதழ், சர்வதேச தமிழ் ஆய்விதழ்
7. புறநானூறு - செய்யுளும் செய்திகளும் - பேராசிரியர் இரா. சீனிவாசன், அணியகம் வெளியீடு.

●

கவிஞர் மெய்ஞானி பிரபாகரபாபு,
முனைவர் பட்ட ஆய்வாளர், வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி நிறுவனம், சென்னை.

முனைவர் ம. பிரபாகரன்,
உதவிப் பேராசிரியர், வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி நிறுவனம், சென்னை.

நியூ செஞ்சுரியின் புதிய வெளியீடு

இறையன்பு

ஓராண்டு உரைகள்

4 தொகுதிகள்

1800 பக்கங்கள் **ரூ 1750/–**

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 600 050.

☎ 044 - 26251968, 26258410, | www.ncbhpublisher.in | email: info@ncbh.in

நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் அனைத்து கிளைகளிலும் மற்றும் புத்தகக் கண்காட்சி அரங்குகளிலும் கிடைக்கும்.



நிழல் பக்கங்களின் நிஜம்

ரா. சிலம்பரசன்

ஒரு நூல் ஏன் எழுதப்பட வேண்டும்? என்பதைக்காட்டிலும் அது ஏன் வாசிக்கப்பட வேண்டும்? என்பதில்தான் அந்நூல் பெரிதும் கவனம் பெறுகிறது. கல்விப்புலச் செயற்பாட்டாளர்கள் மத்தியில் ‘மெக்காலே: பழமைவாதக் கல்வியின் பகைவன்’ என்னும் இந்நூல் பெரிதும் கவனம் பெற்றுள்ளது. சேலம், பெரியார் பல்கலைக்கழக இதழியல் மற்றும் மக்கள் தொடர்பியல் துறையில் பேராசிரியராகவும், முத்தமிழறிஞர் கலைஞர் ஆய்வு மைய இயக்குநராகவும் பணிசெய்துவரும் முனைவர் இரா. சுப்பிரமணி அவர்களால் எழுதப்பட்டுள்ள இந்நூல் சாளரம் பதிப்பகத்தால் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூல் வெளியானதற்குப் பின்னர் பலராலும் பேசுபொருளாக மாறியுள்ளது. அச்சு ஊடகங்களில் எழுத்து வடிவங்களாகவும், குரல்வழிச் செய்திகளாகவும், முகநூல் பதிவுகளாகவும் இந்நூலுக்கான மதிப்பீடுகள் வெளிவந்துகொண்டே இருக்கின்றன. மெக்காலேவை நுவல்பொருளாகக் கொண்டு நூற்று அறுபது பக்கங்களைக் கொண்டமைந்த இந்நூல் இந்தியாவில் ஆங்கிலக் கல்வி, தாமஸ் பாபிங்டன் மெக்காலே, இந்தியாவில் மெக்காலே, மெக்காலே கல்விக் குறிப்பு, மெக்காலேவுக்கு ஆதரவும் எதிர்ப்பும், மெக்காலே கல்வியின் உள்ளீடுகள், மெக்காலேவின் இந்தியத் தண்டனைச் சட்டம் ஆகிய ஏழு உள்ளடக்கங்களைக் கொண்டு அமைந்துள்ளது. பின்னிணைப்பில் மெக்காலேவின் கல்விக் குறிப்பு குறித்து விளக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து இந்நூலின் ஆக்கத்திற்கு உதவிய சான்று நூல்கள், கட்டுரைகள், அறிக்கைகள் ஆகியன நூலின் நிறைவாகத் தரப்பட்டுள்ளன. இவை இவ்வரலாற்று நூலாக்கத்திற்குத் தகுந்த

சான்றாதாரங்களை வழங்குகின்றன. இச்சான்றுகளின் துணைகொண்டே இந்நூலாசிரியர் தன் கருத்துகளை இதுகாறும் வழங்கப்பட்டுவந்த கருத்துகளுக்கு எதிராக வாதம் செய்கின்றார். மேலும், அவர் தான் அணிந்துகொண்ட முடிந்த முடிவுகளை நூலுக்குள் புகுத்தாமல் தரவுகளின் அடிப்படையில் அவற்றை வாதப் பிரதிவாதங்களுக்கு உட்படுத்தி முடிவுகளை வெளிப்படுத்துகிறார்.

இந்நூல் 'எப்போது நாம் தலைநிமிர்வோம்' என்னும் வைகறை அவர்களது பதிப்புரையோடும், 'வரலாற்றை விருப்புவெறுப்பின்றி வாசிப்போம்' என்ற நூலாசிரியரின் முன்னுரையோடும் தொடங்குகிறது. "மெக்காலே உருவாக்கித்தந்த கல்விமுறையானது அன்றைக்கு இந்தியாவிலிருந்த "திண்ணைப் பள்ளிக்கூட" கல்விமுறையைத் தூக்கியெறிந்தது. சமூக விழிப்புணர்வுக்கும் மறுமலர்ச்சிக்கும் அந்தக் கல்விமுறை வித்திட்டது. ஆனால் மெக்காலே வாழ்ந்தபோதும், வாழ்ந்து மறைந்து இருநூற்றாண்டுகள் ஆன பின்னரும்கூட விவாதத்திற்குரியவராகவே இருக்கிறார். ஏன் இவ்வாறு விவாதப் பொருளாக இருக்கிறார் என்ற நெடுங்கால வினாவுக்கு இந்நூல் வழிகாட்டலாம் (ப. 5) என வெளிப்படையாகவே மெக்காலேவின் மீதான விமர்சனப் பார்வையோடு தம் கருத்தைத் தொடங்கும் பதிப்பாசிரியர் தொடர்ந்து நிறைவாக, "மெக்காலே அறிமுகப்படுத்திய ஆங்கில வழிக்கல்வி இந்தியாவுக்கு நல்லதைச் செய்ததா? கெட்டதைக் கொண்டு வந்து சேர்த்ததா? என்று விவாதிக்கவும் தெளிவு ஏற்படுத்திக் கொள்ளவும் இந்நூல் ஓரளவு உதவும் என்று நம்பலாம்" (ப. 7) என்கிறார். இங்கு அவர் 'ஓரளவு' என்று குறிப்பிடுவது மெக்காலேவிற்கு எதிராக நிற்கும் வாதங்களை எதிர்கொண்டு அவற்றிற்கு எதிர்வினையாற்றும் இந்நூலின் தரவுகளைத்தான் என்பது திண்ணம். நூலாசிரியர் தான் திரட்டிய சான்றுகளின்வழி மெக்காலேவின் கல்வி குறித்த சிக்கலான நிலைப்பாட்டிற்கு ஒரு துருப்பை வழங்கியுள்ளார் என்றே கூறவேண்டும்.

தொடர்ந்துவரும் நூலாசிரியரின் முன்னுரை மெக்காலே குறித்த புனைவுகளுக்கும், சான்றுகளற்ற வாதங்களுக்கும் முற்றுப்புள்ளி வைக்கின்றது. அரசியல், பொருளாதார வலிமைமிக்கவர்களால் பல வரலாற்றுச் சுருட்டுகள் உருவாக்கப்படக்கூடிய சூழலில் இந்நூல் சான்றுகளால் நிரப்பப்பட்டுள்ளது. வேண்டிய இடங்களிலெல்லாம் சான்றுகளின் ஆங்கில மூலத்தை அப்படியே அச்சிட்டும், அதற்கான தமிழ் மொழிபெயர்ப்புகளை இணைத்தும் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. ஆய்வு அறமும் நடுவுநிலைமையும் இந்நூலின் முன்னுரையிலேயே பளிச்சிடுகின்றன. 'வரலாற்றை விருப்புவெறுப்பின்றி வாசிப்போம்' என்பதிலேயே நூலாசிரியரின் சார்பின்மைத் தென்படுகிறது. மெக்காலேவைத் தன் முன்னுரையில் மிக நேரடியாக, குறிப்பாக முதல் பத்தியாகக் கொண்டுவரும் நூலாசிரியர் பின்வருமாறு அவரை அறிமுகப்படுத்துகிறார். "இந்தியாவின் கல்விமுறையில் மிக மோசமான மாற்றங்களைக் கொண்டுவந்தவர். இந்தியாவில் தழைத்திருந்த கல்வி என்னும் அழகிய மரத்தைச் சிதைத்தவர்; இந்திய நாட்டின் பாரம்பரிய அறிவு, புராண மொழிகள், புராதன கலைகள், வேதநெறிகளை எல்லாம் ஒழித்தவர்; குமாஸ்தாக்களை உருவாக்குகின்ற கல்விமுறையை இந்தியாவிற்கு அறிமுகப்படுத்தி இந்தியாவின் அறிவுப் பாரம்பரியத்தை அழித்தவர் என இன்றைக்கும் உணர்ச்சிப்பூர்வமான குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டு வருபவர் தாமஸ் பாபிங்டன் மெக்காலே எனப்படும் மெக்காலே" (ப. 8) இவ்வாறு மெக்காலேவை அடையாளப்படுத்தும் போக்கு பலரால் முன்வைக்கப்படுகிறது என்பதுதான் நாம் உற்றுநோக்க வேண்டியதாகிறது. இவ்வாறு, மெக்காலேவின் இரண்டு பக்கங்களையும் ஆராயும் நூலாசிரியர் அதற்கான சில சான்றுகளைத் தன் முன்னுரையிலேயே வழங்குகிறார்.

"நாம் ஆண்டுகொண்டிருக்கும் பலகோடி மக்களுக்கும் நமக்கும் இடையில் மொழிபெயர்ப்பாளராக இருக்கலாகும் ஒரு வகுப்பாரை உருவாக்குவதே இப்போது நம்மால் செய்யக்கூடிய சிறந்த செயல் ஆகும். அவர்கள் இரத்தத்தாலும், நிறத்தாலும் இந்தியர்களாக இருக்கும் ஒரு வகுப்பார்; ஆனால் சுவைகளால் ஆங்கிலேயர்களாக இருக்கவேண்டும்" (ப. 9) என்பதாக அமையும் மெக்காலேவின் ஒரு மேற்கோளை எடுத்துக்காட்டி இந்தியர்களை மொழிபெயர்ப்பாளர்களாக உருவாக்கிச் சிந்தனை ரீதியான அடிமைகளாக அவர்களை உருவாக்கும் நோக்கம் கொண்டதென முதன்மை வாதத்தினைப் பலர் முன்வைப்பர். ஆனால், இந்நூலாசிரியர் இந்த மேற்கோள் முழுமையானது அல்ல என்று மெக்காலேவின் மேற்கோளில் மீதமுள்ள பகுதியையும் சுட்டிக்காட்டி மெக்காலேவின் மறுபக்கத்தை விளக்க முற்படுகின்றார். அம்மேற்கோள் பின்வருமாறு அமையப்பெற்றுள்ளது.

"இந்த நாட்டுத் தாய்மொழிகளைச் செழுமைப்படுத்தி அவர்களுக்குக் கையளிப்போம். மேல்நாட்டுப் பெயரீட்டு முறைகளிலிருந்து அறிவியல் சொற்களைக் கடன்பெற்று நாம் இம்மக்களுக்கு வழங்கும்போது அது,

அவர்களின் மொழிகளின் ஊடாக வளமான அறிவைக் கொண்டுசேர்க்கும் ஊர்தியாக மாறும். படிப்படியாக மாபெரும் மக்கள்திரளுக்கு அறிவைக் கொண்டுசெலுத்தும் பொருத்தமான வாகனமாக அதை அவர்கள் பயன்படுத்தட்டும்" (ப. 9) இவ்வாறு முழுமையான மேற்கோள்களை ஒருங்கிணைத்து அவற்றை உற்றுநோக்குமிடத்து உண்மை புலப்படுகிறது.

மெக்காலேவின் கல்விக் கொள்கையின்மீது முன்வைக்கப்படும் மற்றொரு குற்றச்சாட்டு இந்தியாவின் பாரம்பரிய அறிவை அது பாழாக்கிவிட்டது என்பதுதான். உண்மையில் மெக்காலேவின் கல்விக் கொள்கைக்கு முன்னதாக இந்தியாவில் நிலவிய கல்விச் சூழலை நாம் புரிந்துகொள்வோமாயின் அத்தகைய நிலைப்பாட்டை நம்மால் அடையமுடியாது. குறிப்பாக மெக்காலேவின் கல்விக் குறிப்புகளின் வழியாகவே அவற்றை நாம் கண்டுணரலாம்.

"இங்கிலாந்திலுள்ள ஒரு இலாடக்காரன்கூட ஒப்புக்கொள்ள வெட்கும்படியான மருத்துவமுறைகளும், இங்கிலாந்திலுள்ள பாடசாலைகளில் படிக்கும் சின்னஞ்சிறிய சிறுமியருக்கும் நகைப்பை உண்டாக்கும் விபரீதமான வானசாஸ்திரங்களும், முப்பதடி உயரமுள்ள அரசர்கள் அறுபதாயிரம் வருஷம் ஆண்ட வரலாறுகளைக் கொண்ட சரித்திரமும், பாற்கடலும், நெய்க்கடலும் கொண்ட பூகோளசாஸ்திரமும் இங்குக் காணப்படுகின்றன. கற்பித்தல் என்பது அரசாங்கத்தின் கடமையாகாதென்றும், ஒரு கழுதையைத் தொட்டுவிட்டால் எத்தனை தரம் குளிக்கவேண்டும். என்ன மந்திரம் சொல்லிப் புனிதப்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும், ஒரு ஆட்டைக் கொன்ற பாவத்திற்குப் பரிகாரமாக எந்த வேதத்தை எத்தனை பாராயணம் செய்ய வேண்டுமென்றும் இந்திய மக்கள் தெரிந்து கொள்வதற்காக, நாம் சர்க்கார் வரிப்பணத்தில் கலாசாலைகள் நடத்துவது மாணவர்களின் இளமையை வீணாக்கும் நடவடிக்கை ஆகும். இப்படிப் பலவாறான முரண்பாடுகளுடன் இந்தியாவில் நிலவிவந்த சமஸ்கிருதக் கல்விமுறை என்பது திட்டமிட்டு இந்தியாவை இருளில் வைக்க, சிறப்பாகத் திட்டமிடப்பட்ட முறையாகும்" (ப. 11) என்றவாறு அமையப்பெற்ற மெக்காலேவின் கல்விக் குறிப்பு இந்தியாவில் நிலவிவந்த கல்வி முறையினைச் சாடுவதாக அமைந்துள்ளமையைக் காணமுடிகிறது. மேற்கண்ட மெக்காலேவின் நேரடி கூற்றுகளின் வழியே அவர் யாரால், எதற்கு, ஏன் விமர்சிக்கப்படுகிறார் என்பதை மிக எளிதாகப் புரிந்துகொள்ள முடிகிறது. இவ்வாறு



மெக்காலே: பழமைவாதக் கல்வியின் பகைவன்,
இரா. சுப்பிரமணி | சாளரம் பதிப்பகம், சென்னை, விலை ரூ. 180

நூலாசிரியர் வாதிக்கும்முறை மெக்காலேவின் இரண்டு பக்கங்களையும் புரிந்துகொள்வதற்கு உதவுகிறது. வாசகர்களே வாதப்பிரதிவாதங்களை கருத்தில்கொண்டு முடிவுகளைப் பெறுகிறவண்ணம் நூலாசிரியரின் எடுத்துரைப்பு முறையும், மொழிநடையும் அமையப்பெற்றுள்ளமை இந்நூலின் சிறப்பாகக் கருதத்தக்கதாகும்.

'இந்தியாவில் ஆங்கிலக் கல்வி' என்பது இந்நூலின் முதல் உள்ளடக்கப் பொருண்மையாகும். மெக்காலேவின் வருகைக்கு முன்னர் இந்தியாவில் நிலவிய வாரன் ஹேஸ்டிங் பிரபுவின் கல்விக் கொள்கை குறித்த மதிப்பீடுகள் மற்றும் விமர்சனப் பார்வையை அறிந்துகொள்வதற்கு இவ்வுள்ளடக்கம் பயனுள்ளதாக அமைகிறது. முன்னதாக 1750ஆம் ஆண்டுவாக்கில் கிறித்துவ மத அமைப்பினர் இந்தியர்களிடையே தம் மதக் கருத்துகளைப் பரப்ப கல்விக்கூடங்களை நிறுவினர். அறக்கொடை நிறுவனங்கள் மூலமாக உதவிகளைப் பெற்று பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் இயங்கி வந்தன. பின்னர் இந்தியர்களுக்குக் கல்வி வழங்குவதன் தேவையை ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனி உணரத்தொடங்கியது. வாரன் ஹேஸ்டிங் பிரபுவால் 1780ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட கல்விக் கொள்கைதான் ஆங்கிலேய ஆட்சியர்களால் 1835வரை பின்பற்றப்பட்டது. கிழக்கிந்தியக்

கம்பெனியில் பணிபுரிந்த சர் சார்லஸ் கிராண்ட் ஆங்கில வழியிலான கல்வியை இந்தியர்களுக்கு வழங்கவேண்டும் என்று வலியுறுத்தத் தொடங்கினார். இத்தகைய நிலைப்பாட்டை 1790 முதல் 1813 வரை அவர் இங்கிலாந்து சென்ற பிறகும் ஒரு பிரச்சாரமாகவே செய்துகொண்டிருந்தார். அவர் வாரன் ஹேஸ்டிங் பிரபுவின் கல்விக் கொள்கையைப் 'பயனற்றதும் துயரம் மிகுந்ததுமாகும்' என்று மிகக் கடுமையாக விமர்சனம் செய்தார். இங்கு மிகவும் கவனிக்கத்தக்கதாக அமைவது யாதெனின், மெக்காலேவின் வருகைக்குப் பின்னரே ஆங்கிலவழிக் கல்விமுறை பெரிதளவில் நடைமுறைப்படுத்த ஊக்குவிக்கப்பட்டதென்னும் அவர் மீதான குற்றச்சாட்டைத்தான். ஆனால், அவர் வருகைக்கு முன்பே ஆங்கிலவழிக் கல்விமுறை மற்றும் ஆங்கிலப் பாடத்திட்டங்கள் தேவை குறித்த முன்னெடுப்புகள் நிகழ்ந்திருப்பதை இவ்வுள்ளடக்கப் பொருண்மை உரிய ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டுகின்றன.

'தாமஸ் பாபிங்டன் மெக்காலே' என்னும் தலைப்பிலான உள்ளடக்கம் மெக்காலேவின் வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கமாக எடுத்துரைக்கின்றது. அவரது வாழ்க்கைச் சூழல், குடும்பப் பின்னணி, பொருளாதார நிலை, கல்வி மற்றும் வளர்ந்த விதம், தனித் திறன்கள், ஈடுபாடு, படைப்புத் தளம் ஆகியவற்றை இவ்வுள்ளடக்கம் வெளிப்படுத்துகிறது. மெக்காலே மிகுந்த இலக்கிய ஆர்வம் மிக்கவர். மிகச் சிறப்பாக கவிதைகளை எழுதக்கூடியவர். பின்நாளில் மெக்காலேவை அவரது தந்தையின் மரணமும், தங்கை மார்கரெட்டின் மரணமும் வெகுவாகப் பாதித்தன. அவர் எழுதிய ஒரு கவிதையொன்று பிரிவுத்துயரையும், தனிமை வாழ்வையும் காட்சிப்படுத்துவதாக அமைவதை நூலாசிரியர் எடுத்துக்காட்டியுள்ளார்.

"ஒரு கல்லின்மீது இரு பறவைகள்
அமர்ந்திருந்தன அவற்றில் ஒன்று பறந்து சென்றது;
மற்றொன்று அங்கிருந்தது
ஆனால் அதுவும் பறந்து செல்ல,
அங்கு கல் மட்டுமிருந்தது
இப்போது அந்தக் கல்லும் அநாதையாகி விட்டது"

(ப. 65)

குறியீட்டுப் படிமங்களால் மட்டுமின்றிப் பெருந்துயரத்தினாலும் இக்கவிதை நிரம்பியுள்ளதைக் காணமுடிகிறது.

வில்லியம் பெண்டிங் பிரபு இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்தபோது இந்திய அவையின் உயர்மட்டக்குழு உறுப்பினராக இந்தியா வந்தடைந்த மெக்காலே பொதுக் கற்பித்தல் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார். அவர் வந்தடைந்த எட்டு மாதக்காலத்தில் தனது கல்விக் குறிப்பின் மூலமாக அரசியல் அரங்கில் விவாதப் பொருளாக உருவெடுத்தார். சுமார் பதின்மூன்று பக்கங்களைக் கொண்ட அவரது கல்விக் குறிப்பின் முக்கிய அம்சங்களை விளக்குவதாக 'மெக்காலே கல்விக்குறிப்பு' என்னும் உள்ளடக்கம் அமைந்துள்ளது. மேலும், மெக்காலேவின் கல்விக் குறிப்பின் முழுமையான மொழியாக்கத்தை இந்நூலாசிரியர் பின்னிணைப்புப் பகுதியில் தந்துள்ளார். வாசகர்களின் புரிதலுக்கு ஏற்ப கல்விக் குறிப்புகளுக்குத் துணைத்தலைப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. தனிச்சட்டம் தேவை, மொழியைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு வழங்கப்படவில்லை, நிதி உதவி இல்லை, இந்திய மொழிகளுக்கு உதவியில்லை, நிதியைப் பயனுள்ள வழியில் செலவிட வேண்டும், எந்த மொழியில் கற்பிப்பது?, தாய்மொழிக் கல்வி இல்லை, கடமையைத் தட்டிக் கழிக்கிறோமா?, ஐரோப்பிய முன் உதாரணங்கள், கற்பவர்கள் கற்பிக்கப்படும் மொழியைத் தீர்மானிக்க முடியாது, விரும்பியதைக் கற்க நாங்கள் பணம் அளிக்க வேண்டுமா?, இந்தியர்களின் உண்மையான விருப்பம், மதங்களிடையே நடுநிலைமை கடைபிடிக்கப்படும், இந்தியர்கள் ஆங்கிலத்தில் சிறப்பான நிலையை அடைவார்கள் ஆகிய தலைப்புகளை அடிப்படையாகக் கொண்ட விளக்கங்கள் உள்ளடக்கப் பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளன.

மெக்காலேவின் கல்விக் குறிப்புகளுக்கு எதிரான அல்லது ஆதரவான கருத்து நிலைப்பாடுகளை இந்நூல் விளக்குகிறது. இதற்குமுன் இந்தியாவில் நிலவிவந்த கல்வி முறைகளில் மாற்றங்களைக் கொண்டுவந்து, ஆங்கில வழியிலான கல்விமுறையை அறிமுகப்படுத்தி இந்திய மொழிகளைப் புறக்கணித்ததாகவும், மதக் கருத்துகளின் பரவலாக்கத்திற்குக் கல்வியைப் பயன்படுத்துவதாகவும் அவரது கல்விக்குறிப்புகள்மீது எதிர்ப்புகள் கிளம்பின. ஆனால், உண்மைநிலை அவ்வாறில்லாமல் கல்வியில் ஊடுருவியிருந்த அறியாமையை நீக்கவும், சமயங்களின் ஆதிக்கம் கல்வியில் பெருகி இருந்தமையைக் களையவும் ஆங்கிலவழிக் கல்வியை மெக்காலே ஆதரித்தார். மேலும், இம்மொழியின் மூலமாக அறியாமை மற்றும் மூடநம்பிக்கைகளை விடுத்து இந்தியர்கள் அறிவியல் ரீதியிலான அறிவைப் பெறவேண்டும் என்பதில் அவர் முனைப்பாக இருந்தார். இவரது கருத்துகளுக்குப் பலர் ஆதரவுகளையும் வழங்கியமையை இந்நூல் எடுத்துக்காட்டுகிறது.

மெக்காலேவின் கல்விக் குறிப்புகள் இச்சமூகத்தில் எத்தகைய மாற்றத்தை உருவாக்குவதற்குக் காரணமாக அமைந்தன என்பதை 'மெக்காலே கல்வியின் உள்ளீடுகள்' என்னும் உள்ளடக்கப் பகுதியில் பின்வருமாறு அமையும் விளக்கத்தின் வாயிலாகப் புரிந்துகொள்ள முடிகிறது. "பிராமணர்களின் குருகுலக்கல்விக்கும் சமஸ்கிருதத்திற்கும் முடிவுரை எழுதியவர் மெக்காலே என்பதனால்தான் இன்றளவும் அவர் மிக கடுமையாக விமர்சிக்கப்படுகிறார். மெக்காலேவின் வலிமையான கல்விக்குறிப்பு இல்லாமல் இருந்திருந்தால் இந்தியக் கல்வியின் நிலைமையும், இந்தியாவிலுள்ள மொழிகளின் தன்னுரிமையும் என்னவாகி இருக்கும் என்பதனைச் சற்றே யோசித்தால் மெக்காலேவின் கல்விக்குறிப்பு உருவாக்கிய மாற்றங்கள் எத்தகையது என்பதனை நம்மால் புரிந்துகொள்ள முடியும்" (ப. 120).

மெக்காலேவின் மற்றொரு முன்னெடுப்பு இந்திய தண்டனைச் சட்டம் ஆகும். அது குறித்து 'மெக்காலேவின் இந்தியத் தண்டனைச் சட்டம்' என்னும் உள்ளடக்கப் பகுதியில் இந்நூலாசிரியர் விரிவாகப் பேசுகிறார். வழக்கறிஞரான மெக்காலே இந்தியத் தண்டனைச் சட்ட ஆணையத்தின் உறுப்பினராக 1835ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார். அவர் தன் பணியை முடித்து அதன் தொகுப்பேட்டை 1837 ஆண்டே சமர்ப்பித்துவிட்டார். ஆயினும், அவற்றில் பல மாறுதல்களை உருவாக்கி அச்சட்டம் 1862ஆம் ஆண்டுதான் நடைமுறைப்படுத்தப்பட்டது. மேலும், அச்சட்டம் குறித்த வன்மை மென்மைகளை ஆராய்வதாகவும் இவ்வுள்ளடக்கப் பகுதி அமைந்துள்ளது.

"மெக்காலே தனது சட்டத்தொகுப்பேட்டில் இங்கிலாந்தின் கசையடித் தண்டனையைத் தவிர்த்துவிட்டார். கசையடி அல்லது சாட்டையடி தண்டனை என்பது மிகக்கொடுமையான தண்டனை என மெக்காலே கருதினார். அதோடு இந்தத் தண்டனை எந்த வகையிலும் குற்றவாளியின் குணங்களைச் சீர்திருத்தப் பயன்படாது எனவும் கருதினார். மெக்காலே இவ்வாறு தனது சட்டத்தொகுப்பேட்டைத் தனித்துவம் கொண்டதாக நிறுவ முயன்றாலும், மொத்தமுள்ள இருபத்து நான்கு அத்தியாயங்களில் பதினாறு அத்தியாயங்கள் இங்கிலாந்தின் சட்டத்தொகுப்பேட்டின் வடிவம் போலவே இருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஆனால், மெக்காலே தனது மொழியிலக்கிய அறிவு காரணமாக இந்தியச் சட்டத்தில் ஒரு குறிப்பிட்ட சட்டத்தை அல்லது தண்டனையை எவ்வாறு நிறைவேற்றுவது என்ற விளக்கத்தை இணைத்திருந்தார். இத்தகைய விளக்கம் இங்கிலாந்து சட்ட விதிகளில் காணப்படாத அம்சமெனக் கூறப்படுகிறது" (ப. 132). இவ்வாறு மெக்காலேவின் கல்விக் குறிப்புகளின் வாயிலாக அவர் முன்னெடுத்த பணிகளை விளக்கும் இந்நூல், 'இந்தியத் தண்டனைச் சட்டம்' என்னும் உள்ளடக்கத்தின் மூலம் மெக்காலேவின் வேறொரு முகத்தைக் காட்டுகிறது. கல்விக் குறிப்புகள் மற்றும் இந்தியத் தண்டனைச் சட்டம் ஆகிய இரண்டிற்குமான தொடர்பு அல்லது இவை இரண்டையும் புரிந்துகொள்வதன் மூலமாக மெக்காலேவைப் புரிந்துகொள்ளுதல் என்னும் நிலைப்பாட்டில் இவற்றைத் தொகுத்து இந்நூலாசிரியர் தந்துள்ளார்.

மெக்காலே என்னும் ஆங்கில அதிகாரியைக் கொண்டாட வேண்டும் என்ற நோக்கத்தில் இந்நூல் உருவாக்கப்படவில்லை என்பது இந்நூலாசிரியர் தரும் தன்னிலை விளக்கம் ஆகும். மாறாக இந்திய தேசத்தின் கல்வி வரலாறு என்பது விருப்பு வெறுப்பற்ற நிலையில் வாசிக்கப்பட வேண்டும் என்பதுவே அவரது நிலைப்பாடு. சுதந்திர இந்தியாவிற்குப் பிறகும் மெக்காலே உருவாக்கிய கல்வியியல் குறிப்புகள் பேசுபொருளாகவும், அதற்கு ஆதரவு மற்றும் எதிர்ப்புகள் இன்றளவும் அமையப்பெறும் அரசியல் சூழலையும் புரிந்துகொள்வதற்கு மெக்காலேவை அவரது நேரடி எழுத்துகளின் மூலமாக வாசிக்க வேண்டும் என்னும் கருதுகோளின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட இந்நூல் நிச்சயம் இந்தியக் கல்வி மற்றும் சமூகச் சூழலை ஆராய முனையும் அனைவராலும் வாசிக்கப்பட வேண்டிய அரிய ஆவணமாகும். சமகாலத்தில் கல்விக் கொள்கைகள் குறித்தும், அவற்றின் உள்ளடக்கங்கள் குறித்தும் மிக விரிவான விவாதங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் சூழலில் பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்கான கல்வி வாசலைத் திறந்த மெக்காலே பற்றிய விரிவான இந்த ஆவணம் கல்வி, சமூகம் மற்றும் அரசியல் சூழலில் மிகவும் கவனம் பெறுவதோடு, இந்தியச் சமூகம் கருத்தில்கொண்டு வாசிக்கப்பட வேண்டியதாகவும் அமைந்துள்ளது. மேலும், இந்தியக் கல்வி முறையினை மெக்காலேதான் தடுத்தார் என்னும் கற்பிதங்களைத் தகர்த்து அறியாமை, மூடநம்பிக்கைகள், புராணக் கதைகள் மற்றும் சமயச் சார்பு ஆகியவற்றைக் கடந்த எளிய மக்களுக்கான கல்வி முறையினை மெக்காலேதான் உருவாக்கினார் என்பதை மெய்ப்பிப்பதாக இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

●

கட்டுரையாளர்: மதிப்புறு விரிவுரையாளர்
முத்தமிழறிஞர் கலைஞர் ஆய்வு மையம்
பெரியார் பல்கலைக்கழகம், சேலம் – 636 011.

நியூ செஞ்சுரியின் புதிய வெளியீடு

தோழர் தமிழ்ஒளி ஆக்கங்கள்

ஆறு தொகுதிகள்

தோழர் தமிழ்ஒளி (1925 – 1965) நூற்றாண்டுச் சிறப்பு வெளியீடு

தொகுதி-1 : தோழர் தமிழ்ஒளி கவிதைகள்	விலை: ரூ.390/-
தொகுதி-2 : தோழர் தமிழ்ஒளி காவியங்கள் (பகுதி ஒன்று):	விலை: ரூ.315/-
தொகுதி-3 : தோழர் தமிழ்ஒளி காவியங்கள் (பகுதி இரண்டு)	விலை: ரூ.390/-
தொகுதி-4 : தோழர் தமிழ்ஒளி சிறார் பாடல்கள் - கதைகள்	விலை: ரூ.315/-
தொகுதி-5 : தோழர் தமிழ்ஒளி சிறுகதைகள் - ஓரங்க நாடகங்கள்	விலை: ரூ.360/-
தொகுதி-6 : தோழர் தமிழ்ஒளி ஆய்வுகள் - கட்டுரைகள் - தன் வரலாறு	விலை: ரூ.430/-

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎ 044 - 26251968, 26258410, | www.ncbhpublisher.in | email: info@ncbh.in

நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் அனைத்து கிளைகளிலும்

மற்றும் புத்தகக் கண்காட்சி அரங்குகளிலும் கிடைக்கும்.

பேராசிரியர் ஆ. ஏகாம்பரம் சென்னை பல்கலைக்கழக கல்விப் புலத்தில், மாணவர்கள், ஆய்வாளர்கள் உருவாக்கம்

பேராசிரியரே நீங்கள் விடை பெறவில்லை, விதைகளை விதைத்து விட்டுத்தான் செல்கிறீர்கள். அவை அனைத்தும் விதைகள் அல்ல, வீரியத்தோடு எழுந்து நிற்கும் ஆலமரங்கள். எதிர்கால சமூகத்தின் தூண்களான மாணவர்களை நீங்கள் உருவாக்கி விட்டுத்தான் செல்கிறீர்கள். தமிழகம் மட்டுமின்றி பூமிப்பந்தில் அவர்கள் தமிழின் அறிவுப் புலத்தோடு உங்களது குறிக்கோள்களை அவர்கள் நெஞ்சில் சுமந்து நிலைபெறச் செய்வார்கள். நீங்கள் உருவாக்கிய இந்த ஆய்வுக்குழு மார்க்சிய கொள்கைகளை அறிவுச் சூழலில் கொண்டு சேர்ப்பார்கள் என்ற நம்பிக்கையோடு இந்தப் பணி நிறைவு விழா மலர் கட்டுரை துவங்குகிறது.

சாதாரண கிராமச் சூழலில் பிறந்து, கிராம சூழ்நிலைகள் வாழ்ந்து அந்தப் பின்புலத்தில் கல்வி கற்பது என்பது மிகப்பெரிய சவாலான காரியம். அது போல சாதாரண ஏழைக் குடும்பத்தில் பிறந்து, உயர்கல்வியின் உச்சத்தைத் தொடுவது என்பது நிகழ்காலத்தில் நினைத்துக் கூட பார்க்க முடியாது, எட்டாக்கனியாகவே உள்ளது. பேராசிரியர் முனைவர் ஆ. ஏகாம்பரம் அவர்கள், விழுப்புரம் மாவட்டம் திருக்கனூர் அருகே உள்ள சித்தளம்பட்டு கிராமத்தில் திரு. ஆறுமுகம்,

முனைவர் கோ. ஜெயக்குமார்

திருமதி. அங்கம்மாள் இணையருக்கு மகனாகப் பிறந்தார். இவருக்கு கல்யாணி என்ற ஒரு சகோதரியும் உண்டு. எந்த பின்புலமும் இல்லாத சாதாரண குடும்பத்தின் பின்னணியில், இளங்கலை (அறிவியல் அரசியல்) கல்வியை பிரசிடென்சி கல்லூரியிலும், முதுகலை (தமிழ்) மற்றும் ஆய்வில் நிறைஞர்,முனைவர் பட்டங்களை பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்திலும் மேற்கொண்டார். ஆசிரியர் பயிற்சி கல்லூரி மற்றும் பி. லிட், எம். ஏ. மொழியியல், பிஜிடிஎப் மொழியியல், முதுகலை ஆங்கிலம் என அண்ணா பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டுள்ளார். பேராசிரியரின் இணையர் கோடீஸ்வரி இவர்களுக்கு இளம்பருதி, அறிவுக்கரசு, அமுதவாணன் என மூன்று பிள்ளைகள் உள்ளனர். நன்கு படித்து பட்டம் பெற்று உள்ளனர்.

நான் மேலே குறிப்பிட்ட குடும்ப பின்னணிக்கும், பேராசிரியர் முனைவர் ஆ. ஏகாம்பரம் அவர்கள் படித்த கல்விக்குமான உயரம் என்பது தொடமுடியாத ஒரு உச்சம். நினைத்துப் பார்க்க முடியாத தாகம் அவருக்குள் இருந்துள்ளது. கூடவே பொருமையும் ஓய்வறியா உழைப்பும், அவரது வெற்றியின் ரகசியமாக அமைந்திருக்கிறது. அப்துல் கலாம் கூறுவது போல கனவு காணுங்கள், அந்தக் கனவு உங்களை உறங்க விடக்கூடாது, அது உங்களை வழிநடத்தும் என்று கூறுவார், அதுபோல பல கனவுகளோடு பேராசிரியரின் அறிவுத் தேடல் பயணம் நீள்கிறது. சென்னை பல்கலைக்கழகத்தில் இலக்கியத்துறையில் அவர் உதவிப் பேராசிரியராக பணிக்கு சேர்ந்து, பேராசிரியராக உயர்ந்து, தமிழ் இலக்கியத் துறையின் தலைவராக உச்சத்தைத் தொட்டு, இந்தப் பல்கலைக்கழக வளாகத்தில் இருந்து தான் வகித்த பொறுப்புகளில் இருந்து 31. 05. 2025 அன்று விடைபெறுகிறார். ஜூன் மாதம் விடைபெற வேண்டிய பேராசிரியர் மே மாதமே ஒரு மாதம் முன்கூட்டியே சென்னை பல்கலைக்கழகம் வழி அனுப்புகிறது. ஆனால் நம் இதயங்களில் அவர் நம் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நொடியும் மறக்க முடியாத நிகழ்வுகளோடு நம்மிடையே அசை போட்டுக் கொண்டிருக்கும் பெரும் புகழுக்கு சொந்தக்காரர் பேராசிரியர் ஆ. ஏகாம்பரம்.

பொறுமையும் அமைதியும் இருந்தால், இமயத்தைக் கூட தொட்டுவிடலாம் என்பதைப் போல, தனது கல்விப் புலத்தில், ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நொடியும், பல்வேறு நெருக்கடிகளுக்கும், சுமைகளுக்கும், சொல்ல முடியாத போராட்டங்களுக்கும், ஏன் நெருக்கடிகளுக்கும் அஞ்சாமல், அதை எல்லாம் தனது மௌனப்புரட்சியால் சுக்கு நூறாக உடைத்து, தகர்த்து எறிந்தவர். அதை சுமையாக நினைத்து துவண்டு விடாமல், தனது லட்சியத்தின் மற்றொரு வடிகாலாக நினைத்து அவற்றில் இருந்து தனது வெற்றியை நிலைநாட்டியவர். சென்னை பல்கலைக்கழகத்தைப் பொறுத்த அளவிற்கு, தமிழ் இலக்கியத்துறையில் பயில்வது என்பது என்னைப்போன்ற கிராமப்புறங்களின் பின்னணியில் இருந்து வரக்கூடிய மாணவர்களின் மிகப்பெரிய கனவு. காரணம் அந்தத் துறையில் பல்வேறு மாணவர்களை வளர்த்தெடுக்கும் முறை, கல்வி பயிற்றுவிக்கும் முறையில் தனித்துவம், இதற்கெல்லாம் கால்கோள் இட்டவர், சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் இலக்கியத்துறை தலைவராக இருந்த பேராசிரியர் வீ. அரசு ஒரு முக்கிய காரணம். அவரை பின்பற்றியே பல்வேறு நிகழ்வுகள், பல்வேறு கற்பித்தல் மற்றும் கற்றல் முறை சென்னை பல்கலைக்கழக பரிதிமாற் கலைஞர் வளாகம் செயல்படுகிறது. அவர் பணி ஓய்வு பெற்றதும் பேராசிரியர் கோ. பழனி அந்தப் பணியை பொறுப்பை ஏற்றுக்கொண்டு தொடர்கிறார், அதன்பிறகு அந்த இடத்திலே பேராசிரியர் ஆ. ஏகாம்பரம் அவர்கள் தமிழ் இலக்கியத் துறைத்தலைவர் பதவி ஏற்கிறார். மாணவர்களோடு அவர் வகுப்பறையில் பேசுவதாக இருக்கட்டும் அல்லது தனது துறைத் தலைவர் அறையில் பேசுவதாக இருக்கட்டும், தொலைபேசியில் பேசுவதாக இருக்கட்டும், கங்கு போன்ற தொல்லியல் களங்களுக்கு அழைத்துச் சென்று களத்திலே மாணவர்களோடு அவர் பழகுவதாக இருக்கட்டும், உரையாடுவதாக இருக்கட்டும் அனைத்துமே ஒரே அன்பும், பொறுமையும், நிதானமும் இருக்கும். இவற்றை எப்போதுமே அவர் கடைப்பிடிப்பார்.

பேராசிரியர் ஆ. ஏகாம்பரம் இதுவரை எழுதியுள்ள நூல்கள் மொத்தம் 17, 36 பேர் முனைவர் பட்டம், 45 பேர் ஆய்வியல் நிறைஞர் பட்டம் முடித்துள்ளனர். குறிப்பாக அவர் எழுதியுள்ள மக்கள் வாழ்வியல், தமிழரின் விருந்தோம்பல், சாதி- வறுமை -அரசு, மொழி- வரலாறு- அரசியல், சக்தி கோவிந்தனின் சிறார் மொழி, மொழியும் சமூக அமைப்பும், தமிழ் இஸ்லாமிய மரபுகள், மொழி, இன இலக்கிய ஆய்வுகள், சங்க இலக்கிய தொகுப்பு முறையியல், மக்கட்பா (குறுந்திட்ட ஆய்வு), மறைமொழி

சமூகசாரம் உள்ளிட்ட நூல்களை, பல்வேறு ஆய்வு கட்டுரைகளையும், முதுகலை மாணவர்கள், ஆய்வியல் இளைஞர்கள், முனைவர் பட்ட ஆய்வாளர்கள் என தமிழ் சமூகத்திற்கு வழங்கியது மிகப்பெரிய கொடையாகும்.

குறிப்பாக மாணவர்கள் தங்களுடைய முதுகலை மற்றும் ஆய்வியல் இளைஞர் (தற்போது இல்லை) முனைவர் பட்ட ஆய்வாளர்களாக இருந்தாலும், அவர்கள் மேற்கொள்ளும் தலைப்பிலே முனைப்பாக, பல்வேறு ஆய்வுக்களங்களோடு களத்திற்கு சென்று, நூலகங்களுக்கு சென்று பல்வேறு புரிதல்களோடு ஆய்வு நேர்த்தியாக அமைய வேண்டும், மாணவர்கள் வந்த துறையில் தெரிந்த அறிவைப் பெற வேண்டும் என்பதில், அவருக்கு நிகர் அவராகத்தான் இருக்க முடியும். குறிப்பாக ஆய்வு முடித்து புறத்தேர்வுக்காக அனுப்பக்கூடிய ஆய்வுகள், டில்லி, பாண்டிச்சேரி போன்ற எந்த பல்கலைக் கழகங்களுக்கு சென்றாலும், தனது மாணவர்களுடைய பெயர் அந்தப் பல்கலைக்கழகங்களில் பேசப்பட வேண்டும் என்பதை அவர் எப்போதும் எதிர்பார்ப்பார்.

சென்னை பல்கலைக்கழகத்தில் மொழித்துறையில் நான் ஆய்வியல் நிறைஞர் பட்டம் நிகழ்த்திவிட்டு, முனைவர் பட்ட ஆய்வு நிகழ்த்துவதற்காக, ஏறக்குறைய ஒரு ஆண்டு காலம் பேராசிரியர் ஆ. ஏகாம்பரம் அவர்களிடம் பயில வேண்டும் என்ற நோக்கத்திற்காகக் காத்திருந்தேன். எனது காத்திருப்பை அவர் முழுமையாக உள்வாங்கிக் கொண்டார். உறுதியாக உங்களுக்கு வழங்குகிறேன் என்கிற அந்த உறுதியை அவர் எனக்கு தெரிவித்தார். அப்படித்தான் எனக்கும் அவருக்குமான அந்த உறவு தொடங்கியது. உறவின் தொடக்கம் ஆசிரியர், மாணவர் என்ற நிலையில் இருந்தாலும், நான் முனைவர் பட்டம் சேர்வதற்கு முன்பாகவே, பேராசிரியரும், நானும் ஒரு நண்பர்களாக மாறிவிட்டோம். பேராசிரியர் என்கிற நிலையைக் கடந்து எப்போதுமே என்னிடம் ஒரு சகோதரனைப் போல, ஒரு நண்பனைப் போல, ஒரு குடும்ப உறவைப் போலத்தான் பழகுவார், பேசுவார். எங்களது பயணம், இந்த அன்பின் பிணைப்பிலேயே இந்த நிறைவு விழா நாள்வரை தொடர்கிறது. இதைக் கடந்து உயிர் உள்ளவரை அது தொடரும். நான் எதற்காக இதை சொல்கிறேன் என்றால், இந்த வளாகம் கட்டமைத்திருக்கக்கூடிய கல்வி, அது சார்ந்த கட்டமைப்பு என்பது ஆசிரியர் மாணவர் என்கிற உறவைக் கடந்து, எந்த நிலைக்கு

அந்த உறவு நிலைபெறுகிறது என்பதற்காக இதை நான் இங்கே பதிவிடுகிறேன்.

எனது முனைவர் பட்ட ஆய்வு டெல்லி பல்கலைக்கழக பேராசிரியர் உமாதேவி அவர்கள் அறிவிப்பு பலகையில் வைத்து, இது போன்று ஆய்வு இருக்க வேண்டும் என்று கூறியது, அதேபோன்று புறத்தேர்வாளர் பேராசிரியர் உமாதேவி அவர்கள் வழங்கிய பல்வேறு கருத்தியல்களை, பாராட்டுக்களை எனக்கு இந்த ஆய்வின் நோக்கம் முழுமை பெற்றுவிட்டது ஜெயக்குமார் என்று தெரிவித்தார் பேராசிரியர். அதேபோன்று பாண்டிச்சேரி பேராசிரியர் அறிவுநம்பி புறத்தேர்வாளராக அவர் வழங்கிய, பாராட்டுக்களில் சில வார்த்தைகளை அவர் எனக்குத் தெரிவித்தார். இதெல்லாம் எனக்கு அவர் தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஒரு மாணவன் தனது ஆய்வுப் பயணத்தில் எப்படியெல்லாம் அவன் பங்காற்றுகிறான், அவனை எப்படி ஊக்கப்படுத்த வேண்டும் என்பதற்காக, ஒரு சிறிய மகிழ்வை கொடுக்க வேண்டும் என்கிற நிலையில், ஒரு ஆசிரியராக அதை எனக்கு நினைவுபடுத்துவார். எனது ஆய்வேடு பேராசிரியர் நா. வானமாமலையின் ஆய்வுப் பணிகள் என்ற தலைப்பில் மேற்கொண்டேன். அந்த ஆய்வேடு எப்படி உருவாக்கம் பெற வேண்டும், அந்தத் தலைப்பிற்குள் எப்படி ஒரு ஆய்வாளனாக இயங்க வேண்டும், நாவாவின் மார்க்சிய

கண்ணோட்டங்களை எப்படி அணுக வேண்டும், நாட்டார் இலக்கியத் துறையில் அவர் பார்வை, அணுகு முறைகளை பின்பற்றியுள்ளார் என்பது குறித்து பல நேரங்களில் நாங்கள் விவாதிப்போம், அதோடு இல்லாமல் அந்த ஆய்வு முழுமையான ஒரு ஆய்வாக இருக்க வேண்டும், பேராசிரியர் நா. வா நடத்திய ஆராய்ச்சி இதழ், அவர் பங்களிப்பு செய்த புதிய வானம் தாமரை சாந்தி உள்ளிட்ட இதழ்கள் வெளிவந்த ஆய்வுக் கட்டுரைகள், இலக்கியம், மார்க்சியம், நாட்டார் இலக்கியம் உள்ளிட்ட சமூகவியல் சார்ந்த கண்ணோட்டங்களை எடுத்துரைக்க வேண்டும் என்பதில் இருவருமே கண்ணும் கருத்துமாக இருந்தோம். குறிப்பாக நா. வாவின் ஆய்வுக் குழுவில் பங்காற்றிய நாவாவோடு பழகிய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மூத்த தலைவர் ஆர். நல்லகண்ணு, காரல் மார்க்ஸ் நூலகத்தினுடைய நிறுவனர் கண்ணன், பேராசிரியர்கள் சிவசுப்பிரமணியன், பொன்னீலன், பேராசிரியர்கள் முத்துமோகன், நா. ராமச்சந்திரன், காமராசு மற்றும் மங்கை அக்கா, அவரது பிள்ளைகள் நேர்காணல் என ஆய்வு விரிவடைந்தது. மிகப்பெரிய ஆய்வாக உருவாக்கம் பெற்ற போது, சென்னை பல்கலைக்கழகத்தில் 'டெல்லி' பாண்டிச்சேரி போன்ற பல்கலைக்கழகங்களுக்கு அனுப்புவது சிரமம் என்று பல்கலைக்கழக அஞ்சல் துறையில் கூறியபோது, என்னுடன் பேராசிரியர் ஆ. ஏகாம்பரம் நேரில் வந்து, இதை இதற்கு மேல் குறைக்க முடியாது, ஒரு முக்கியமான ஆய்வேடு, நீங்கள் புரிந்துகொண்டு உடனடியாக அனுப்புங்கள், நாங்கள் அஞ்சலக கட்டணத்தை செலுத்தி விடுகிறோம் என்று கூறினார். அதனை ஏற்றுக்கொண்டு நாங்களே அனுப்புகிறோம் என்று சென்னை பல்கலைக்கழகம் தெரிவித்தது.

அடுத்ததாக எனது முனைவர் பட்ட வாய்மொழித் தேர்வின் போது, சென்னை மாநில கல்லூரியில் இருந்து பேராசிரியர் மகாலிங்கம் அவர்கள் புறத்தேர்வாளராக வருகை தந்திருந்தார். ஆய்வாளராக எனது கருத்து நிலைகளை நான் ஒருமணிநேரம் எடுத்து வைத்த போது, அவர் பாராட்டிய வார்த்தைகளையும் மறக்க முடியாது. அந்த அவையிலே திடீரென இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவராக இருந்த தோழர் ஆர். நல்லகண்ணு அவர்கள் நேரடியாக வந்து வாழ்த்திப் பேசி சிறப்புரை ஆற்றியதை மறக்க முடியாது. இந்த நிகழ்வுகளையும் எனக்கு அடிக்கடி பேராசிரியர் நினைவுபடுத்துவார். பல்கலைக்கழக வரலாற்றில் நல்லகண்ணு போன்றவர்கள் வாய்மொழித் தேர்வுக்கு நேரில் வந்து, வாழ்த்துவது என்பது மறக்க முடியாத தருணம் என்பதை அவர் எனக்கு சுட்டிக்காட்டுவார். மாணவர்கள் படிப்பை முடித்துச் சென்றாலும், ஆய்வாளர்கள் ஆய்வை நிறைவு செய்து சென்றாலும் அவர்களோடு தொடர்பிலிருந்து மனம் திறந்து பேசக்கூடிய, வழிகாட்டக்கூடிய பேராசிரியராக அவர் திகழ்வது மட்டற்ற மகிழ்ச்சி அளிக்கிறது.

நான் ஆய்வாளராக இருந்த தருணத்தில் பேராசிரியர் நான் வானமாமலை பதிப்பித்த கட்டபொம்மன் கதைப்பாடல், கட்டபொம்மன் கூத்து, வீரபாண்டியக் கட்டபொம்மன் கதைப்பாடல், ஐவர் ராசாக்கள் கதை, காத்தவராயன் துணைப்பாடம், முத்துப்பட்டன் கதை, கான்சாகிப் சண்டை, வீணாதி வீணன் கதை என எட்டு கதைப்பாடல் நூல்களைக் கொண்ட கதைப்பாடல் திரட்டு என்ற தொகுப்பு நூலாகக் கொண்டு வந்தேன், தமிழ் வளர்ச்சித் துறையின் உதவியோடு நாவாவின் ஆக்கங்கள் - ஆய்வு என்று நூலும், நாவா ஆய்வுகளில் நாட்டார் கலை இலக்கியம், தமிழர் கலை வரலாறும் கதைப்பாடல் ஆய்வும் உள்ளிட்ட தொகுப்பு நூல்களையும், என். சி. பி. எச். நிறுவனத்தின் மூலமாக நா. வானமாமலையின் ஆராய்ச்சிப் பணிகள் மற்றும் நா. வானமாமலை ஒரு பருந்துப் பார்வை ஆகிய நூல்களையும், கண்ணாடி பொம்மை என்கிற கவிதை நூல்களையும் வெளியிட்டுள்ளேன். இந்த நூல்களுக்கு பேராசிரியர் ஆ. ஏகாம்பரம் வழங்கிய வாழ்த்துரையில் எனது அன்பிற்குரிய ஆய்வு மாணவர்களில் தலைசிறந்த தலைமாணாக்கராக திகழ்பவர்தான் முனைவர் கோ. ஜெயக்குமார் என்று குறிப்பிட்டிருப்பார். மேலும் இது போன்ற பல நூல்களை நீங்கள் சமூகத்திற்கு வழங்க வேண்டும் என்று கூறுவார். ஆசிரியர் மாணவர் என்ற நிலையைக் கடந்த அன்பு என பதிவிட்டு இருப்பார். இப்படி பெரிய ஆரவாரம், ஆர்ப்பாட்டம் எல்லாம் எதுவும் இல்லாமல், மிகப் பெரிய இலட்சியத்தோடு பயணிக்கக் கூடிய, பேராசிரியரின் இந்தப் பயணம், பல மைல்கற்களை கடந்து வந்தவர். அதனை அவர் நேர்த்தியாக தொடர்ந்து கடப்பார் என்கிற நம்பிக்கை எனக்கு உள்ளது. பணி ஓய்வு என்று சொல்லக்கூடாது என நினைக்கிறேன். ஒரு இலக்கிய ஆளுமைக்கு பணி ஓய்வு என்பது எப்போதும் இல்லை. பணி நிறைவு என்று தான் சொல்ல வேண்டும், அப்படி பணி நிறைவோடு சென்னை பல்கலைக்கழகத்தில் இருந்து செல்லும் பேராசிரியர், வாழ்நாள் முழுவதும், எல்லா நிலைகளிலும் நிறைவாக வாழ இந்தத் தருணத்தில் வாழ்த்துவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

●

கட்டுரையாளர்: உள்ளீட்டு பிரிவு ஆசிரியர் மற்றும்
தலைமைச் செய்தியாளர், நியூஸ்
ஜெ தொலைக்காட்சி, சென்னை.

கட்டுரை

தொல்காப்பிய நெறியும் பொருள்கோடலில் உரையாளர்களின் கருத்தியல் சார்பும்

மோ. செந்தில்குமார்
சி. லுபுனா லிலானி

தொல்காப்பியத்தில் குவிமையம் கொண்டுள்ள தமிழர் அறிவுநெறியைச் சிதைத்து, அது வேறு அறிவு மரபுக்குக் கடன்பட்டுள்ளது என்ற கற்பிதத்தைத் தொல்காப்பியத்தின் எடுத்துரைப்பு நெறிக்குப் பொருந்தாமல் துருத்திக்கொண்டிருக்கும்படியான இடைச்செருகல்களைச் செய்து வரலாற்றில் அவரவர் காலத்திய கருத்தியல்களின் ஆதிக்கப் பனுவலாக ஆக்கிக்கொண்டனர். மேலும், அகத்தியத்துக்குக் கடன்பட்ட வழிநூல்தான் இது என்று பொதுப்புத்தியைக் கட்டமைத்து வந்தனர். இவை ஒருபக்கம் நிற்கின்றன. இத்தொல்காப்பியத்துக்கு இளம்பூரணர் தொடங்கி பாவலரேறு ச. பாலசுந்தரம் வரை பலரும் உரை எழுதியுள்ளனர். அவர்களின் பங்களிப்பு மெச்சத்தக்கவை என்பதும் தொல்காப்பியம் மிக நீண்ட வரலாற்றுக் காலத்தைக் கடந்து நம் கைகளுக்குக் கிடைப்பதற்கு வாகனமாக இருந்திருக்கிறார்கள் என்பதும் உண்மை. அதேசமயத்தில் இவ்வுரைகள் உரையாசிரியர்களின் காலத்திய சமூக நெறிக்கும் உரையாளர்களின் கருத்தியல் சார்புக்கும் உட்பட்டுத் தொல்காப்பிய மரபைச் சிதைக்கவும் மாற்றவும் வலிந்து பொருள்கொள்ளவும் செய்துள்ளமையைப் புறந்தள்ளிவிட முடியாது.

பொருளதிகார நூற்பாக்களுக்கு உரிய சான்றுப்பாடல்கள் பிற்காலத்திய இலக்கியங்களில்கூடக் கிடைக்காவிட்டால் வந்தவழிக் கண்டுகொள்க என்று எழுதிவிடும் துணிவு கொண்ட உரையாளர்கள், எழுத்து, சொல்லதிகாரங்களில் தொல்காப்பியர் காலத்திய அல்லது சங்க இலக்கியங்களில் இருந்தோ அதற்கு அடுத்த காலங்களில் தோன்றித் தமிழ்மரபில் எழுதப்பட்ட இலக்கியங்களில் இருந்தோ சொற்களைச் சான்று காட்ட இயலாத நிலையில் தங்கள் காலத்திய பொருத்தமான சொற்களைத் தொடர்களைத் தெரிவு செய்யாது, அவ்வக்காலச் சமய மரபுகளை உட்புகுத்தி நூல் இயற்றப்பட்ட காலத்திய உலக வழக்குக்கோ செய்யுள் வழக்குக்கோ பொருந்தாத பிற்கால வழக்குகளைச் சான்றுகளாக வலிந்து ஒட்டவைத்துள்ளமையைக் காணலாம். இத்தகைய செயல்களால் சொற்களுக்குள் புதைபொருளாக இருந்து இயங்கும் சமயக் கருத்தியல்களின் ஆதிக்கத்திற்குள் அத்தகைய கருத்தியல் ஆதிக்கமற்ற அறிவு மரபு ஓங்கி நின்ற காலத்தில் எழுதப்பட்ட பனுவல்களைத் தள்ளிவிடுகின்ற செயல் நடந்துவிடுகிறது. தொல்காப்பியம் அத்தகைய தள்ளிவிடலுக்கு ஆட்பட்டுள்ளது.

தம் காலத்திய ஆதிக்கக் கருத்தியல்களை வலிந்தோ தம்மையறியாமலோ ஒட்டவைக்கும் இத்தகைய செயல்பாடுகள் உரைமரபின் ஒரு நெறியாக வளர்ந்து வந்திருப்பதைக் காணமுடிகிறது. சொல்லதிகாரம் கிளவியாக்கத்தில் புறனடையாக உள்ள ஒரு நூற்பாவை இத்தகைய செயல்பாடுகளுக்குச் சான்றாகக் கொண்டு இக்கட்டுரை ஆராய்கிறது.

காலம் உலகம் உயிரே உடம்பே
பால்வரை தெய்வம் வினையே பூதம்
ஞாயிறு திங்கள் சொல்என வரூஉம்
ஆயீ ரைந்தொடு பிறவும் அன்ன
ஆவயின் வரூஉம் கிளவி யெல்லாம்
பால்பிரிந் திசையா உயர்திணை மேன.

(சொல். கிளவி. நூற். 57)

முந்தைய நூற்பாவில், குடிமை முதலாகச் சொல்லப்பட்ட பதினெண் சொற்களும் அவைபோன்ற பிறவும் உயர்திணை மருங்கின் நிலையினவாயினும் அஃறிணை மருங்கிற் கிளந்தாங் கியலும் (நூற். 56) என்று கூறிய முறைமையை அடியொற்றி, உயர்திணையில் பால்பிரிந்து இசைக்கமாட்டா என்று காட்டிய பத்துச் சொற்களும் அவைபோன்ற பிறவும் அஃறிணை வினை முடிவையே கொள்ளும் என்று எந்தவிதமான கருத்துவெளிப்பாட்டுத் தெளிவின்மைக்கும் இடமளிக்காமல் தொல்காப்பியர் சுட்டிச்சென்றுள்ளார்.

தொல்காப்பிய நெறியும் பண்டைத் தமிழ் மரபும்

இது குறித்து உரையாடுவதற்கு முன்பு, தொல்காப்பியர் திணை, பால் குறித்து எத்தகைய கருத்தியலைக் கொண்டிருந்தார் என்பதை விளங்கிக்கொள்வது ஆய்வுக்குப் பொருத்தமாக இருக்கும். மக்கட் சுட்டே உயர்திணை என்றும் அவரல பிறவே அஃறிணை என்றும் இவ்விரு திணைகளிலும் இசைக்குமன சொல்லே (சொல். கிளவி. நூற். 1) என்றும் திணைக்கு உரிய அடித்தளத்தைத் தெளிவுபடுத்துகிறார். பொருளதிகாரத்தில் முதற்பொருள் இரண்டே என்று உறுதிப்படுத்துவது போன்றதொரு செய்கை இது. இவை இரண்டுக்கும் தொடர்பு உண்டு. இடைக்காலத்தில் வந்த பவணந்தியார், 'மக்கள் தேவர் நரகர் உயர்திணை' என்று தமிழரின் காட்சி மரபுக்குப் பொருந்தாத எதைக்கொண்டும் நிறுவ இயலாத கற்பித மரபு சார்ந்த இரண்டு சொற்களை உயர்திணையுள் சேர்த்துக்கொண்டு உரையாடியுள்ளார். அது அவர்காலத்திய கருத்தியல் ஆதிக்கத்தின் விளைவு. இதனோடு தொல்காப்பியர் காலச் சிந்தனையை உரசிப் பார்த்தால், தொல்காப்பியர் காலத்திய உலகத்தோற்றம், அறிவுத்தோற்றம் குறித்த பார்வைக்கும் பவணந்தியார் காலத்திய பார்வைக்கும் உள்ள மலைக்கும் மடுவுக்குமான வேறுபாட்டைப் புரிந்துகொள்ளமுடியும். தொல்காப்பியர் அதோடு நின்றுவிடாமல், உலகத்துப் பொருட்களையெல்லாம் இயற்கைப் பொருள், செயற்கைப் பொருள் என்று இரண்டாகப் பகுத்துவிட்டார். இந்த இடத்திலும் அவர் எவராலோ படைக்கப்பட்டதன்று இந்த உலகம் என்ற கருத்தை உறுதிபட நிறுவியுள்ளார். 'இயற்கைப் பொருளை இற்றெனக் கிளக்க' (சொல். கிளவி. நூற். 19) வேண்டும் என்றும் 'செயற்கைப் பொருளை ஆக்கமொடு கூறவேண்டும்' (கிளவி. நூற். 20) என்றும் உரைப்பதன் மூலம் மனிதர்களால் தங்கள் தேவைகளுக்காக இயற்கைப் பொருள்களிலிருந்து ஆக்கிக்கொள்பவற்றுக்குச் செயற்கைப் பொருள் என்று பகுத்துக்கொண்ட தமிழ்ச் சிந்தனை மரபு பொதிந்துள்ளதைக் காணலாம். மேலும் 'ஆக்கம்தானே காரணம் முதற்றே' (கிளவி. நூற். 21) என்று செயற்கைப் பொருள்கள் ஆக்கத்தால் விளைபவை, அந்த ஆக்கம் காரணத்தை முதலாக உடையது என்றுரைக்கும் சிந்தனையும் இயற்கைப் பொருட்களை அப்படி எவரும் ஆக்குவதில்லை என்ற கருத்தையும் சேர்த்துச் சுட்டுவதாகக் கொள்ளலாம்.

உரை நெறியும் சமயக் கருத்தாதிக்கமும்

தெளிந்த பார்வையைக் கொண்டதோர் அறிவு மரபிற்குத் தொல்காப்பியரே அம்மரபுக்குச் சான்றாக விளங்கும் நிலையில், மேலே குறிப்பிட்ட நூற்பாவில் இடம்பெற்றுள்ள பத்துச் சொற்களும் மரபுவழியில் உயர்திணைக்குரியனவாகக் கருதப்பட்டாலும் அவை வினைமுடிவு கொள்ளும்போது உயர்திணையில் பால் பிரிந்து இசைக்காது அஃறிணையாகவே வினைமுடிவு கொள்ளும் என்று தெளிவுபடுத்தியுள்ளார் தொல்காப்பியர். குறிப்பாக, கிளவியாக்கத்துள் தொடர்களை ஆக்கிக்கொள்ளும்போது பாலீறுகளால் திணையும் பாலும் அடையாளம் காண முடிகின்ற பெயர்கள் பெறும் வினைமுடிவுகள் மரபுவழிப்பட்டன என்பதைப் பல நூற்பாக்களிலும் தெளிவுபடுத்திச் சென்றுள்ளார். அவற்றில் சுட்டமுடியாது உயர்திணையாக மரபுவழியில் கருதிவரும் சொற்களுக்கு வினைமுடிவுகள் எத்திணையில் அமையும் என்ற குழப்பத்தைத் தீர்ப்பதற்குப் புறநடையாகச் சில சொல்லிச் சென்றுள்ளார்.

ஆய்வுக்கு எடுத்துக்கொண்டுள்ள நூற்பாவுக்கு உரையெழுதிய இளம்பூரணர், 'இச்சூத்திரம் தெய்வஞ் சுட்டிய பொருள் அஃறிணையான் முடிபேற்றல் கூறினார் என்ப ஒரு திறத்தார். அற்றன்று, ஈண்டுத் தெய்வமும் உள, மக்களும் உளர்' என்று தம் காலத்திய தெய்வப்புகுத்தல் உரையாடலுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளார். ஆனால், அவரே தம் காலத்தில் வழக்குக்கு வந்துவிட்ட, அதாவது சிலப்பதிகாரக் காலத்தில் தமிழ்ச்சமூகத்திற்குள் நுழைந்து நிலைபெற்றுவிட்ட பூதக் கருத்தியலுக்கு ஆட்பட்டுப் 'பூதம்' என்ற சொல்லுக்குச் சான்றுகாட்டும்போது 'இவனைப் பூதம் புடைத்தது' என்றுரைப்பார். (தொல். சொல். பக். 65-66) சேனாவரையர் தம் உரையில், பூதம் என்ற சொல்லுக்குப் 'பூதம் புடைத்தது' என்று அதே சான்றைக் காட்டியதோடு, 'கால

மென்பது காலக் கடவுளை' என்று தொல்காப்பியர் முதற்பொருளுள் ஒன்றாகக் கண்டுள்ள காலத்தையும் தெய்வப்பட்டியலுக்குக் கொண்டு சென்றுள்ளார். 'உலகமென்றது ஈண்டு மக்கட் டொகுதியை' என்று உலகத்தை இயல்புநிலையில் விட்டுள்ளார். மேலும், உயர்திணை முடிபுகொள்ளா என விலக்கப்படுகின்ற 'மக்களுயிரும் உடம்புமே கொள்ளப்படும்' என்று தெய்வத் தவிர்ப்பையும் செய்துள்ளார். மேலும் அவர், 'பால்வரை தெய்வமென்பது எல்லார்க்கு மின்ப துன்பத்திற்குக் காரணமாகிய இருவினையையும் வகுப்பது. வினை யென்பது அறத்தெய்வம், சொல்லென்பது நாமகளாகிய தெய்வம்' என்று வினை, சொல் ஆகியவற்றைத் தெய்வப்பட்டியலுக்குக் கொண்டு சென்றுள்ளார். *(தொல். சொல். ப. 111)*. ஆனால் இளம்பூரணரோ 'சொல்' என்பதற்குச் 'சொல் நன்று' என்று தெய்வத்தன்மை ஏற்றாது கூறியுள்ளார். இளம்பூரணர் எடுத்துரைத்த சான்றின் வழியாகப் பூதத்தையும், இளம்பூரணர் காலத்தில் தெய்வத்தன்மை ஊட்டியதாக அவரால் சுட்டப்பட்ட உரையாளர்களுக்கு ஆட்பட்டும், தம் கருத்தின் வழியாகவும் சான்றுகளின் வழியாகவும் இந்நூற்பாவின் பெரும்பகுதிச் சொற்களின் பொருள்களை கற்பித உலகுக்கு உரியதாக சேனாவரையர் ஆக்கியுள்ளார்.

நச்சினார்க்கினியர், 'இச்சூத்திரத்துக் கூறியவற்றுள் உலகமும் உயிரும் உடம்பும் ஒழிந்தன எல்லாம் தெய்வத்தையே உணர்த்தின. ' என்று முதற்கூற்றிலேயே தெய்வத்தன்மை அற்ற பொருள்களைப் பட்டியலிட்டுவிடுகிறார். தெய்வச் சொற்களுக்குச் சேனாவரையரைப் போன்றே, காலத்தைக் காலக் கடவுள் என்றும் தெய்வம் செய்தது, வினை விளைந்தது, பூதம் புடைத்தது, ஞாயிறு பட்டது, திங்கள் எழுந்தது, சொல் நன்று என்றும் கூறியவர் 'சொல் நன்று' என்ற சான்றுக்கு 'இது நாமகளாகிய தெய்வம்' என்று கூடுதல் விளக்கம் கொடுத்துச் சேனாவரையரின் வழியில் தெய்வக் கருத்தியலுக்குள் கொண்டுவந்துவிட்டார். *(தொல். சொல். பக். 105-106)*

தெய்வச்சிலையார் முந்தைய உரை மரபை உடைத்து எழுதியுள்ளார். 'காலம் என்பது முன்னும் பின்னும் நடுவும் ஆகி என்றும் உள்ளதோர் பொருள்' என்று காலத்தை தெய்வத்தன்மையிலிருந்து விடுவித்துவிட்டார். ஆனால், 'உலகம் என்பது மேலும் கீழும் நடுவும் ஆகி எல்லாவுயிரும் தோற்றுதற்கு இடமாகிய பொருள்' என்று உலகத்தை மூவுலகப் புராணக் கட்டமைப்புக்குள் தள்ளிவிட்டார். மேலும், வினை என்பது ஊழ் என்றும் பூதம் என்பது நிலம், நீர், தீ, வளி, ஆகாயம் ஆகிய ஐம்பெரும் பூதம் என்று கற்பிதப் பொருண்மையிலிருந்து விடுவித்துத் தொல்காப்பியர் நெறியைப் பின்பற்றியுள்ளார். அதேசமயம், ஞாயிறு என்பது தீத்திரளாய் உலகு விளக்குவது என்றும் திங்களென்பது நீர்த்திரளாய் உலகிற்கு அருள் செய்வது என்றும் இயற்கை வழிபாட்டு மரபுக்கு உட்பட்டு ஞாயிறு, திங்களைத் தெய்வத்தன்மைக்கு உயர்த்தியுள்ளார் . 'சொல் என்பது எழுத்தினான் இயன்று பொருள் உணர்வது – அச்சொல்லினான் இயன்ற மந்திரம், விடம் முதலாயின தீர்த்தலின் தெய்வம் ஆயிற்று' என்று சொல்லை மறைபொருள் உரைக்கும் மந்திர தந்திரக் கருத்தியலுக்குள் ஏற்றியுள்ளார். அதோடு நில்லாமல், 'இந்நூல் செய்தான் வைதிக/வைதிரு முனிவன் ஆதலின் சொல்லென்பது வேதம் என்று கொள்ளப்படும்' என்று சொல்லுக்கு ஆரிய வேதத்தைச் சுட்டிவிட்டார். இதற்காகத்தான் பெயரியல், 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்ற நூற்பாவுக்கு 'எல்லாச் சொல்லும் எல்லாப் பொருளும் குறித்தன' என்று உரை எழுதினாரோ என்று ஐயுறத் தோன்றுகின்றது. மேலும், தம் காலத்தில் தொல்காப்பியர் வைதீக முனிவராகக் கருதப்பட்டு வந்ததையும் நமக்குச் சொல்லிவிட்டார். இவரும் 'பூதம் செறிந்தது' என்று தனது உரைக்குப் பொருந்தச் சான்று காட்டிவிட்டுத் தம் காலத்தில் பெருவழக்காகிவிட்ட பூதக் கருத்தியலில் இருந்து விடுபட முடியாமல் 'பூதம் புடைத்தது' என்றும் சான்றுகாட்டியுள்ளார். *(தொல். சொல். ப. 44)*

கல்லாடர் தம் உரையில், 'காலம் என்றது காலனை; உலகமென்றது உலகத்தாரை; உயிர் என்றது உயிர்க்கிழவன்; உடம்பு என்றது அஃது உடையானை; பால் என்பது இன்பதுன்பங்களை வகுப்பதோர் தெய்வம்; வினையென்பது வினைத்தெய்வம்; பூதம் என்றது தெய்வப்பகுதி; ஞாயிறு, திங்கள் என்பன தெய்வம்; சொல் என்றது சொன்மடந்தையை' *(ப. 52)* என்று முந்தையோர் மரபுவழி நின்று உலகம், உயிர், உடம்பு தவிர்த்த அனைத்துச் சொற்களுக்கும் தெய்வத்தன்மை ஊட்டியுள்ளார். பால் என்று தெய்வத்தைச் சுட்டியதோடு நாமகளைச் சொன்மடந்தை என்று வேறு பெயரால் சுட்டியுள்ளார். *(தொல். சொல். ப. 52)*

இவ்வுரையாசிரியர்களில் இளம்பூரணார் சான்றுகாட்டலோடு நிற்க, சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் தெய்வச்சிலையாரும் சிலவற்றைத் தெய்வநிலைக்கு உயர்த்திச் சிலவற்றை விடுவித்துள்ளனர். கல்லாடர் பெரும்பகுதியையும் தெய்வநிலைக்கு உயர்த்திவிட்டார். உரையாசிரியர்களின் உரைத்திறன்களை ஆராய்ந்து ஆராய்ச்சிக் காண்டிகை உரை எழுதித் தொல்காப்பியரின் பல சிந்தனைகளுக்கு ஒளியூட்டியவரான சா. பாலசுந்தரம் இந்நூற்பாவுக்கான உரைப்பொருளை முழுமையும் தெய்வத்தன்மைக்கு ஏற்றியுள்ளார்.

‘உயர்திணை மருங்கின் பால் பிரிந்திசைக்கும் எனக் கூறிய தெய்வஞ் சுட்டிய பெயர்நிலைக் கிளவிகள் பற்றிய ஐயமகற்றுகின்றது’ என்று உரையாசிரியர்கள் எவரும் சொல்லாத ஒரு கருத்தை வலிந்து நூற்பா கூறவரும் கருத்தாக ச. பாலசுந்தரம் புகுத்தியுள்ளார். அதனடிப்படையில் பொருளுரைக்கையில், ‘காலம் முதலாச் சொல் ஈறாகக் கூறப்பெற்ற அப்பத்துச் சொற்களொடு அத்தன்மையவாகிய பிறவுமாய்த் தெய்வஞ்சுட்டிய பெயராக அவ்விடத்து வரும் சொற்கள் எல்லாம் உயர்திணை மருங்கினவாய்ப் பால் பிரிந்திசைக்க மாட்டா. அஃறிணையாயே முடியும்’ (தொல். சொல். ப. 51) என்று நூற்பாவுக்குப் பொருந்தாத ஒரு பொருளை வலிந்து எழுதியுள்ளார். பால்புதுமையர் குறித்த சொற்களும் தெய்வச் சொற்களும் உயர்திணை மருங்கின் இசைக்கும் என்று சொன்ன நூற்பாவுக்கு அமைந்த புறனடையாகக் கொண்டமை அவரை இத்தகைய பொருள்கோடலுக்கு இழுத்துச் சென்றுள்ளது.

ச. பாலசுந்தரம் உரைக்கு ஆய்வு முன்னுரை எழுதிய தி. வே. கோபாலையர், “தெய்வம்சுட்டிய பெயர் பால்காட்டும் ஈற்றிடைச் சொல் பெற்றாலன்றி உயர்திணை மருங்கின் இசையா என்று விளக்கம் கூற நூற்பாவில் இடமில்லை. ” (ப. XXXIV) என்று கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. மேலும், இக்கருத்துக்கு விளக்கமளித்த ச. பாலசுந்தரம், “56, 57, 59 இவற்றின் உரை முன்னையோர் கருத்துக்களினின்று வேறுபட்டவை– விளக்கம் சாலாது போலும். சிலமுறை நோக்கின் தெளிவாகலாம்” (ப. xliii) என்று தனது நிலைப்பாட்டில் உறுதியாக நிற்கிறார்.

மேலும், சான்று காட்டும்பொழுது, தொல்காப்பியர் காலத்திய எவ்வழக்குக்கும் பொருந்தாத பல சான்றுகளைத் தனது உரையை மெய்ப்பிப்பதற்காகச் சுட்டிச்செல்கின்றார். ‘காலம் என்றது காலக்கடவுளை (இமயன், கூற்றுவன், காலன்)’ என்று சேனாவரையரைப் பின்பற்றியுள்ளார். உலகம் என்றது நிலத்தெய்வத்தை (புவிமகள், நிலமகள், மண்மகள்), உயிர் என்றது உயிர்க்கிழவனை (சீவன், ஆன்மா, மன்உயிர்) என்று கல்லாடரைப் பின்பற்றிக் கூறியுள்ளார். இருப்பினும் அவர் ‘உயிர் போயிற்று’ என்று சான்றுகாட்ட இவர் வைதீக நெறி சார்ந்து ஆன்மாவைக் கொண்டுவந்து நிறுத்திவிட்டார். ஆன்மா தூய வடிவானது அது வினைப்பயன் உள்ள உடம்பில் ஒட்டாது இருக்கும் என்று கூறும் நிலையில் அதை உயிர் என்ற சொல்லுக்குள் கொண்டுவந்து ஏன் அடைத்தார் என்பது கேள்வி. உடம்பு என்றது தெய்வப்படிமத்தை, ‘மூர்த்தி, கல்நின்ற வீரர், அருச்சனை மூர்த்தி’ என்று புதிதாக உலகம், உயிர், உடம்பு ஆகிய இடைக்காலத்தில் வந்து புகுந்த மரபை ஒட்டித் தெய்வப் பட்டியலுக்குக் கொண்டு சென்றதோடு, ‘உயிரும் உடம்பும் மக்களுடையவை எனச் சேனாவரையர் வலிந்து விளக்கம் கூறுவார்’ என்று நூல்நெறிக்குப் புறம்பான தனது செய்கையை உயர்த்திப் பிடித்துள்ளார். உயர்திணைக்குரியவை என்று சுட்டியமையால் சேனாவரையர் மக்களுக்கு உரியவை என்று கூறியுள்ளார் என்று எளிதாக விளங்கிக்கொள்ளக்கூடியதைச் சமயக் கருத்தியல் சார்பு காரணமாகப் பிழை என்று வாதிடுவதைக் காண்கிறோம். வினை என்றது நல்லூழும் அல்லூழுமாகிய ஊழினை (விதி- ஊழ்)’ என்று தெய்வச்சிலையாரைப் பின்பற்றியுள்ளார். பூதம் என்றது தெய்வப் படையினை (பூத கணங்கள்) என்று தெய்வப்படுத்திப் பிற்காலக் கருத்தியலுக்கு ஆதரவாகப் புதிய பொருளும் சான்றும் கொடுத்துள்ளார். ‘ஞாயிறு – கதிரவன், திங்கள்– நிலா மண்டிலம்’ என்று ஞாயிறு, திங்களை மட்டும் தெய்வமாக்காது விட்டுவிட்டார். சொல்– நாமகளாகிய தெய்வம் என்று சேனாவரையரைப் பின்பற்றியுள்ளார். (தொல். சொல். பக். 51-52)

இந்நூற்பாவுள், ‘பால்வரை தெய்வம்’ என்று தெய்வத்தைத் தனித்துச் சுட்டியுள்ளார் தொல்காப்பியர். ‘ஈண்டுத் தெய்வமும் உள மக்களும் உளர்’ என்று தெளிவுபடுத்தியுள்ள இளம்பூரணர், பால்வரை தெய்வத்துக்கு, ‘இவர்க்குத் தெய்வம் ஆயிற்று’ என்று சான்றுகாட்டி நகர்ந்துள்ளார். சேனாவரையர், ‘பால்வரை தெய்வமென்பது எல்லார்க்கு மின்ப துன்பத்திற்குக் காரணமாகிய இருவினையையும் வகுப்பது’ என்று இறந்தோர் வழிபாட்டைத் தவிர்த்துப் பண்டைத் தமிழ் மரபில் இல்லாத நல்வினை, தீவினைகளை வகுத்து உலகத்தை இயக்குவதாகப் பிற்காலத்தில் உருவாக்கப்பட்ட தெய்வங்களுக்கு முதன்மையளித்துள்ளார். நச்சர், ‘தெய்வம் செய்தது – இதனைப் பால்வரை தெய்வம் என்றார்’ என்று தெய்வத்தன்மையைச் சுட்டிவிட்டார். தெய்வச்சிலையார், ‘பால்வரை தெய்வம் என்பது ஆணும் பெண்ணும் அலியும் ஆகிய நிலைமையை வரைந்து நிற்கும் பரம்பொருள்’ என்று பால் கடந்த நிலையைச் சுட்டிப் பொருளுரைத்துள்ளார். இறந்தோர் வழிபாடே பெருவழக்கானமையாலும், உயர்திணையில் ஆண், பெண் என இரு பால்கள் இருப்பினும் பால் புதுமையரை உயர்திணையில் சுட்டுவதாலும் அவர்களையும் சேர்த்துக்கொண்டு பொருத்தமான உரையை எழுதியுள்ளார். ச. பாலசுந்தரம், ‘பால்வரை தெய்வம் என்றது கந்தழியை (இலிங்கம், நடுதறி)’ என்று பொருளுரைத்துத் தொல்காப்பியர் காலச் சமூகத்தில் இல்லாத தெய்வங்களைக் கொண்டுவந்து சமயக் கருத்தியல் சார்ந்து புகுத்தியுள்ளார்.

குறிப்பாக இடைக்காலத்தில் தோன்றி வளர்ந்த சமயக் கருத்தியல்களுக்கு இவரது பார்வை ஆட்பட்டுள்ளமையை இவரது சான்றுகள் வழி தெரிந்துகொள்ள முடியும்.

'காலம்' என்பது காலக்கடவுள்; 'பால்வரை தெய்வம்' என்பது இருவினையையும் வகுக்கும் தெய்வம்; 'வினை' என்பது அறத்தெய்வம், ஊழ், வினைத்தெய்வம்; 'உலகம்' என்பது மூவுலகம், உலகிற்கு அருள் செய்யும் ஞாயிறு திங்கள் ஆகியவை, நிலத்தெய்வம்; 'சொல்' என்பது நாமகள், மந்திரம், வேதம்; 'உயிர்' என்பது உயிர்க்கிழவன், ஆத்மா என்று உரையாளர்கள் தம் காலத்தில் பெருவழக்காகிவிட்ட தெய்வக் கருத்தாக்கங்களை முன்வைத்துள்ளனர். இவற்றுள் மூவுலகம், ஊழ்வினை ஆகியவை தெய்வப்பட்டியலுள் சேராமல் அது சார்ந்த பிற்காலப் புராண மரபுகளை உள்ளடக்கியவை என்று கொள்ளலாம். ஊழ் கருத்தியலைச் சங்க காலம் தொட்டுத் தமிழ்ச்சமூகம் தீவிரமான உரையாடலுக்கு எடுத்துக்கொண்டிருக்கிறது. மூவுலகம் குறித்த உரையாடல் அறிவார்ந்த நிலையில் செய்யப்படவில்லை. அறிவியல் வளர்ச்சியால் பூமி உருண்டை என்பது தெளிவுபட்ட பிறகு தற்காலத்தில் புராணக் கட்டமைப்பான மூவுலகக் கருத்தியல் உடைந்து இம்மை மறுமை என்ற இரண்டு உலகக் கருத்தியல் மட்டும் விடுபடாது மனித மனங்களை ஆட்கொண்டிருப்பதைக் காண்கிறோம்.

முந்தைய உரையாளர்கள் அவர்கள் காலத்திய கருத்தியல் ஆதிக்கத்துக்குள் ஆங்காங்கே தடுமாறி விழுந்துள்ள நிலையில், அவர்களிடத்தில் தொல்காப்பியர் கால அறிவு மரபு சார்ந்த பார்வைகளும் இருப்பதைக் காண்கிறோம். ஆனால், ச. பாலசுந்தரம் முழுமையும் சமயச் சார்பான கருத்தியல் தளத்துக்குள் கொண்டுவந்து அந்நூற்பாவுக்கான பொருளைச் சிதைத்து வலிந்து பொருள் கூறியதோடு, முந்தைய உரையாளர்களைச் சாடவும் செய்துள்ளார். இவர் எடுத்துரைக்கும் சான்றுகளாக அமைந்த சொற்கள் பலவும் தொல்காப்பியர் காலத்தில் வழக்கில் இல்லாதவை என்பதைக் கருத்தில் கொள்ளாமலும் அக்காலத்தில் சமயக் கருத்தியல்கள் தோன்றவில்லை என்பதை ஓராமலும் சமயச்சார்புக்கு முதன்மை அளித்து, தொல்காப்பியர் மிகத்தெளிவாகப் பொருட்குழப்பமின்றிச் செய்துள்ள நூற்பாவுக்குத் தனது விருப்ப உரையை எழுதியுள்ளார். அந்நூற்பாவுள் 'பால்வரை தெய்வம்' இல்லாது இருந்திருந்தால்கூட உரையாளர்கள் தங்கள் விருப்பத்திற்கும் தேவைக்கும் ஏற்பப் பொருள்கொண்டிருக்கலாம். அதோடு அவர்கள் காட்டிய சான்றுச் சொற்கள் பழந்தமிழ்ச் சொற்கள் இல்லையென்பது தெரிந்தும் வலிந்து திணித்துள்ளமை தொல்காப்பியத்தை அதன் அறிவுத்தளத்திலிருந்தும் அது எழுதப்பட்ட காலத்திய தமிழ்ச்சமூகத்தின் அறிவுத்தளத்திலிருந்தும் விடுவித்து மீவியல்புத் தளத்துக்குக் கொண்டு சென்று அத்தளத்தைக் கட்டமைத்தவர்களின் கருத்தியல் ஆதிக்கத்துக்குள் தள்ளிவிடும் செயலாகவே இதனைக் கருதவேண்டும்.

முடிவுரை

தொல்காப்பியத்தை அது தோன்றிய காலத்துச் சிந்தனை மரபின், மொழியின், சமூக பண்பாட்டு மரபின் அடையாளமாகக் கொள்ளவேண்டும் என்பதை விடுத்துத் தங்கள் காலத்திய கருத்ததிகாரங்களை விளக்குவதற்கான ஒரு பிரதியாகக் கொண்டு உரையெழுதி வந்துள்ளனர். தொல்காப்பியம் வெளிப்படுத்தும் அறிவு மரபை வெளிக்கொணரும்படியான கருத்தியல் சார்பற்ற புத்துரைகளை அந்நூல் இன்னும் வேண்டி நிற்பதை மேற்கண்ட நூற்பாவுக்குள் பிற்காலக் கருத்துக்கள் வலிந்து புகுத்தப்பட்டு அதன் பொருண்மை சிதைக்கப்பட்டுள்ளமையிலிருந்து கண்டுகொள்ள முடியும்.

துணைநூற் பட்டியல்

1. அடிகளாசிரியர் (பதி. ஆ. ,). (2019). தொல்காப்பியம் சொல்லதிகாரம் – இளம்பூரணர் உரை. தஞ்சாவூர்: தமிழ்ப்பல்கலைக்கழகம்.
2. கோபாலையர். தி. வே. , அரணமுறுவல். ந. (பதி. ஆ. ,). (2003). தொல்காப்பியம் சொல்லதிகாரம் – சேனாவரையம். சென்னை: தமிழ்மண் பதிப்பகம்.
3. ……………… (பதி. ஆ. ,). (2003). தொல்காப்பியம் சொல்லதிகாரம் – நச்சினார்க்கினியம். சென்னை: தமிழ்மண் பதிப்பகம்.
4. சுந்தரமூர்த்தி. கு. (வி. உ. ஆ.). (1964). தொல்காப்பியம் சொல்லதிகாரம் கல்லாடனார் விருத்தியுரையும் பழைய உரையும். சென்னை: தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
5. பாலசுந்தரம். ச. (2012). தொல்காப்பியம் சொல்லதிகாரம் ஆராய்ச்சிக் காண்டிகையுரை (பெ. மாதையன். , பதி. ஆ. ,). சேலம்: பெரியார் பல்கலைக்கழகம்.
6. தெய்வச்சிலையார். (2015). தொல்காப்பியம் சொல்லதிகாரம் தெய்வச்சிலையார் உரை. தஞ்சாவூர்: தமிழ்ப்பல்கலைக்கழகம்.

●

கட்டுரையாளர்கள்:

மோ. செந்தில்குமார், இணைப்பேராசிரியர்

சி. லுபுனா லிலானி, உதவிப் பேராசிரியர் (PTA),

தமிழ்த்துறை, அரசு கலை மற்றும் அறிவியல்

கல்லூரி, மேட்டுப்பாளையம் 641 104

20-7-2025 அன்று சிவகாசியில் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் மற்றும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் இணைந்து நடத்திய கலை இலக்கிய விருது வழங்கும் விழா நடைபெற்றது. இதில் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், மருத்துவர் அறம், எஸ். கே. கங்கா, ப. பா. ரமணி, பேராசிரியர் நா. ராமச்சந்திரன், மே. து. இராசுகுமார், பேராசிரியர் வீ. அரசு, தோழர் திருச்சி லெனின், பால. சிவகடாட்சம், அய்யாறு ச. புகழேந்தி, பேராசிரியர் அ. ராமசாமி, கவிஞர் அன்பாதவன், எழுத்தாளர் மதிக்கண்ணன், எழுத்தாளர் ஈரோடு ஷர்மிளா, கன்யூட்ராஜ், மு. ந. புகழேந்தி, முனைவர் லோகமாதேவி, ஆர். பி. அமுதன் மற்றும் என்சிபிஎச் விற்பனை மேலாளர் தோழர் கிருஷ்ணமூர்த்தி ஆகியோருடன் படைப்பாளர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

உங்கள் நூலகம் சந்தாதாரர்களுக்கு ஒரு வேண்டுகோள்!

உங்கள் நூலகம் சந்தாவினைப் புதுப்பிக்காதவர்கள் தொடர்ந்து உங்கள் நூலகம் இதழினைப் பெற புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்

உங்கள் நூலகம்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட். ,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை - 600 050.
தொலைபேசி எண் : 044-26251968, 26258410

ஆகஸ்ட் மாதத்துடன் முடிவடையும் சந்தாதாரர்களின் ரசீது எண்கள்

3694	5422	4272	3105	8907	8915	2397	2687
3690	5421	4273	365	2834	6654	2394	2836
5756	5531	4274	4282	2835	3104	2395	2837
366	131	4276	1182	8908	1730	5757	368
3686	130	4275	7849	8909	1731	1184	3693
7924	129	4277	7850	8910	1732	986	
3710	1130	4278	1183	8911	6886	6655	
367	1131	4279	1185	8912	1129	1186	
3691	1132	4280	5532	8913	3761	5533	
3689	4271	4281	5376	8914	2396		

தனி இதழ் ₹ 45. 00 / ஆண்டு சந்தா ₹ 540. 00
மாணவர்களுக்கு ₹ 500. 00. / ஆயுள் சந்தா ₹ 5400. 00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 4050. 00

சந்தாத் தொகையை
New Century Reader's Sangam
Central Bank of India
Ambattur Branch, Chennai - 600 050
A/c. No. 1035249018
IFSC Code : CBIN0282161
என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.

கிளைகள்

அம்பத்தூர் 044 - 2635 9906, ஸ்பென்ஸர் பிளாசா 044-28490027, மதுரை 0452 - 2344106, 4374106, திருநெல்வேலி 0462 - 2323990, 4210990, திண்டுக்கல் 0451-2432172, கோயம்புத்தூர் 0422 2380554, சேலம் 0427-2450817, ஈரோடு 0424-2256667, கிருஷ்ணகிரி 04343-234387, ஓசூர் 04344 - 245726, ஊட்டி 0423 - 2441743 திருச்சி 0431 - 2700885, தஞ்சாவூர் 04362-231371, புதுக்கோட்டை 04322-227773, விழுப்புரம் 04146-227800, பாண்டிச்சேரி 0413 2280101, வேலூர் 0416-2234495, நாகர்கோவில் 04652 - 234990.

தமிழால் மருத்துவக்கல்வி முடியும்



விலை: ரூ. 225/-
வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை

ஆ. கார்த்திகேயன்

‘தமிழால் மருத்துவக்கல்வி முடியும்’ என்றொரு அருமையான நூல் அண்மையில் டாக்டர் சு. நரேந்திரன் அவர்களால் எழுதப்பெற்று நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் வெளியீட்டகத்தால் வெளியிடப்பட்டுள்ளது, தமிழ்வழி மருத்துவக் கல்வி முடியுமா என்று சந்தேகப்படும் அறிஞர்களுக்கும், மருத்துவர்களுக்கும் ‘முடியும்’ என்று திட்டவட்டமாகப் பதில் சொல்வது போல நூலின் தலைப்பு அமைந்துள்ளது. இந்நூல் 197 பக்கங்களில் ஐந்து பெரும் பிரிவுகளாகப் பகுக்கப்பட்டுச் செவ்வனே வடிவமைக்கப்பட்டுள்ளது. 1. கலைச்சொல்லாக்க நெறிமுறைகள், 2. மருத்துவப் பாடநூல் உருவாக்கம், 3. மருத்துவத்தமிழ் முன்னோடிகள், 4. முடிவுரை, 5. பின்னிணைப்பு ஆகிய பெரும் பகுதிகளைப் பொருளடக்கத்தைப் பார்த்தாலே தெரிந்துகொள்ள முடிகிறது. தமிழ்வழி மருத்துவம் – முடியும் என்ற தலைப்போடு தன்னம்பிக்கையோடு முதல் இயல் தொடங்குகிறது. ஒட்டு மொத்த நூலுக்குப் பாயிரம் போல முதல் இயல் அமைந்துள்ளது. இப்பகுதியில் ஐரோப்பியர் வருகையைத் தொடர்ந்து தமிழகத்தில் மலர்ந்த மருத்துவ அறிவியல் சிந்தனைகள், அவற்றை ஐரோப்பியர்கள் பரப்பிய முறைகள் ஆகியவை குறித்து டாக்டர் நரேந்திரன் அவர்கள் அவருக்கேயுரிய தனித்துவ நடையில் விவரிக்கிறார். வீரமாமுனிவர், சீகன்பால்கு, கிரண்டலர், லுட்விக், பெரடிரிக் ஆகியோரின் தமிழ் மருத்துவ வளர்ச்சிக்கான பங்களிப்பு வெகுவாக இங்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தரங்கம்பாடியில் தமிழர்களைப் போலவே உண்டும் உடுத்தியும் வாழ்ந்த கிரண்டலர் இங்குள்ள ஓலைச்சுவடிகளைத் தேடியலைந்து திரட்டியதோடு ‘அகஸ்தியர் இரண்டாயிரம்’ என்னும் சுவடியைத் தமிழ் மருத்துவர் என்ற தலைப்பில் ஜெர்மன் மொழியில் பெயர்ப்பு செய்தது நமக்குத் தெரியவருகின்றது. இன்னும் இதுபோல எத்தனை பணிகள் எங்கெங்கு நடைபெற்றுள்ளனவோ? ஐரோப்பியர் வழியாகவே மேலை மருத்துவம் தமிழகத்தில் நுழைந்தது என்றும் தொடக்கப்பகுதியில் சுட்டி விளக்குகிறார்.

தமிழ்வழி மருத்துவக் கல்வியில் கலைச்சொல்லாக்கத்தின் தேவை குறித்தும் அவற்றை உருவாக்கிக் கொள்ளும் நெறிமுறைகள் குறித்தும், உருவாக்கிய பிறகு அவற்றை எவ்வாறு தரப்படுத்துவது என்பது குறித்தும் பல்வேறு சான்றுகளைத் தந்து பகுதி இரண்டில் விரிவாக விளக்கியுள்ளார். சான்றுகள் பெரும்பாலும் மருத்துவத் துறையில் பயன்படுத்தப்படும் சான்றுகளே. ‘இதயம்’ என்ற சொல் பெருவழக்கிலுள்ளது. ‘நெஞ்சாங்குலை’ என்ற தூய சொல் கால்கொள்ளவில்லை. ‘*Heart*’ என்பதற்கு இதயம், இருதயம், மார், நெஞ்சு என்று சொற்கள் பயன்படுகின்றன. இதயம் என்ற பெருவழக்குச் சொல்லையே தேரலாம். இருதயம் நெருடலானது ‘*heart attack*’ என்னும்போது மாரடைப்பையும் ‘*heart burn*’ என்னும்போது நெஞ்செரிச்சலையும் பயன்படுத்தலாம் என்று ஓரிடத்தில் விளக்குகிறார் (ப. 59). இவ்விளக்கம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவும் பொருத்தமாகவும் உள்ளது. பலகாலும் தமிழில் மருத்துவக் கலைச்சொற்களை உச்சரித்ததால் பெற்ற அனுபவத்தின் வெளிப்பாடேயாகும் இது. ‘மருத்துவர்கள் கூச்சப்பட்டால் நோய் குணமாகாது. சொல் ஆட்சியில் கூச்சப்பட்டால் பொருள் விளங்காது’ என்றும் ஓரிடத்தில் கூறுகிறார். சொல் தேர்வு

குறித்து டாக்டர் நரேந்திரன் அவர்கள் தருகின்ற நெறிமுறைகளைப் பிற துறைகளில் கலைச்சொல் படைக்கின்ற அறிஞர்களும் பயன்படுத்திக் கொள்ளலாம். தமிழ்நாட்டில் கலைச்சொல் வழக்கில் இருமொழி வழக்கு இருந்தே தீரும் என்பது டாக்டரின் நம்பிக்கை (ப. 72). தேவைக்கேற்ப கிரந்த எழுத்துக்களையும் சர்வதேசச் சொற்களையும் பிறமொழிச் சொற்களையும் எடுத்துக்கொண்டு தூசு படிந்த தமிழை மாசு படியாது விளங்குமாறு செய்ய வேண்டும் என்று ஓரிடத்தில் கூறுகின்றார் (ப. 90).

நமது மொழி வழியாகப் பிற பாடங்களைக் கற்பிப்பதற்கு முன்தேவையாக அமைவது பாடநூல் உருவாக்கம். அறிவியல், மருத்துவம் தொடர்பான நூல்களையும் கட்டுரைகளையும் எழுதும்போது சர்வதேச சொற்கள், சமன்பாடு, வாய்பாடு, குறியீடுகளை அப்படியே எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும். இம்முறையே உலக அளவில் ஏனைய மொழிகளிலும் எடுத்தாளப்படுகிறது என்று வழிகாட்டுதல்களைக் கொடுத்துள்ளார் (ப. 96). இப்பகுதியில் பிரெஞ்சு-இங்கிலீஷ்-தமிழ் சம்பாஷணைச் சுருக்கம் (வைத்தியர்களின் உபயோகத்திற்காக) என்றொரு நூலினை டாக்டர் அறிமுகப்படுத்துகிறார். இந்நூல் 1904ஆம் ஆண்டு எழுதப்பட்டது. த பால் கோல்சின் என்ற பிரெஞ்சு சுகாதார அதிகாரியால் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூல் மருத்துவமனைக்கு வருகிற நோயாளிகளோடு எவ்வாறு மருத்துவர்கள் நோய்கள், மருத்துவம் குறித்து தமிழில் உரையாட வேண்டும் என்பதனைக் கற்பிக்கும் நோக்கில் படைக்கப் பட்டுள்ளது, இந்நூலை மாதிரியாகக் கொண்டு தற்காலத்திலும் உரையாடல் நூல்கள் தயாரிக்கலாம். செய்முறை-சோதனைச் சாலைகளில் மருத்துவர்-மாணவர்கள் உரையாடல் நிகழ்த்த பாடங்கள் தயாரித்தால்-மேற்கண்ட நூலினை மாதிரியாகக் கொள்ளலாம்.

அரிய நூல்களைத் தேடித் திரட்டி அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளும் டாக்டரின் முயற்சி மிகவும் பாராட்டிற்குரியது. மருத்துவ இதழ்கள் குறித்த ஓர் வரலாற்று ரீதியான விவரணயும் விளக்கமும் இப்பகுதியில் இடம் பெற்றுள்ளது. விடுதலைக்கு முன்பு வந்த மருத்துவ இதழ்கள், சிறுவர்களுக்கான அறிவியல், சுகாதார இதழ்கள் ஆகியவற்றையும் டாக்டர் அறிமுகப்படுத்துகிறார்.

மூன்றாவது பகுதி மருத்துவத் தமிழ் முன்னோடிகள் என்ற தலைப்பில் உள்ளது. இப்பிரிவில் மேனாட்டறிஞர்களான இரேனியஸ், டாக்டர் சாமுவேல் ஃபிஷ்கிறின், ம,ஜகந்நாத நாயுடு, டாக்டர் அ. கதிரேசன் ஆகியோரின் அரிய முயற்சிகள் விரிவாக விவரிக்கப்படுகின்றன. இவர்கள் யாவரும் முன்னேர் போல விளங்கிய மருத்துவத் தமிழ் முன்னோடிகளாவர். டாக்டர் சாமுவேல் ஃபிஷ்கிறீன் பணிகள் பற்றி, மருத்துவம், வேதியியல், தாவரவியல் நூல்களை வெளியிட்டவர் எனவும், இவரே தமிழில் முதல் கலைச்சொல் கோட்பாட்டாளர் எனவும், கூறுவது பொருத்தமுடையதாகும் என்று டாக்டர் நரேந்திரன் குறிப்பிடுகிறார். தமிழ்க் கலாச்சாரத்தைச் சற்றேனும் குறைக்காது தமிழர்களிடையே நிலவிய அறிவியல் சார்ந்த சில நடைமுறை மருத்துவங்களையும் இணைத்து மேலை மருத்துவத்தைத் தமிழில் எழுதியதோடு நில்லாமல் மாணவர்களை முதன்முதலில் தமிழ்வழி மேலை மருத்துவம் படிக்க வைத்து மருத்துவராக்கிய பெருமை இந்த அமெரிக்க மருத்துவப் பாதிரியாரையே சாரும் (ப. 127) என்று குறிப்பிடுகிறார். டாக்டர் கிறீன் இலங்கையில் பணியாற்றியதைப் போலவே தமிழகத்திலும் ம. ஜகநாத நாயுடு (1885-1888) என்பவர் மேலை மருத்துவ நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து தந்துள்ளார். இவர் ஆயுர்வேத மருத்துவ முறைகளை மேலை மருத்துவத்துடன் இணைத்து மருத்துவத்தில் புதுமைகள் பல செய்துள்ள விவரங்களும் இந்நூலின் வழி தெரியவருகின்றன.

ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதற்கிணங்க டாக்டர் சு. நரேந்திரன் அவர்களின் நூல் தமிழால் மருத்துவக்கல்வி முடியும் என்று கட்டியம் கூறுகிறது. மனமிருந்தால் மார்க்கமுண்டு. தமிழர் மனம் வைத்தால் அனைத்துக் கல்வியையும் தமிழ் மொழியிலேயே தரமுடியும். அனைவருக்கும் தமிழ் மொழியிலேயே வேலை தரமுடியும். ஆங்கிலம் கற்றால்தான் உலக அளவில் வேலைக்குச் செல்லலாம் என்பது மாயை. இதனையும் மக்கள் உணர வேண்டும். இம்மாயையைத் தகர்க்க வேண்டும்.

நூலின் வடிவமைப்பு மிகவும் நேர்த்தியாக உள்ளது. அட்டையிலுள்ள டாக்டர் படம் நூலை கையிலெடுதுப் பார்க்கத் தூண்டுவதாய் உள்ளது.

இந்நூலினை எழுதுவதற்கு உதவிய நோக்கு நூல்களின் பட்டியல் எங்கும் இடம்பெறவில்லை. தந்திருந்தால் மற்றவர்களுக்கும் மிகவும் பயன்படும். கிறித்தவமும் அறிவியலும் என்றொரு நூலையும் ஏற்கனவே டாக்டர் எழுதி வெளியிட்டுள்ளார். அந்நூலிலுள்ள தகவல்கள் இந்நூலிலும் பயன் கருதி எடுத்தாளப்பட்டுள்ளது என்பதையும் குறிப்பிட வேண்டும்.

இந்நூலினைப் படைத்துள்ள டாக்டர் சு. நரேந்திரன் அவர்கள் தம் மருத்துவப் பணியோடு இடையறாது நல்ல பல அறிவியல் – குறிப்பாக மருத்துவ அறிவியல் சார்ந்து நூல்களை எழுதி வருகின்றார். ‘பணியை மாற்றிச் செய்வதே சிறந்த ஓய்வு’ என்னும் கொள்கையுடையவர். ஓய்வு நேரத்தில் கூடத் தொடர்ந்து நூலாக்கப் பணியில் ஈடுபட்டு வருகின்ற கலைமாமணி. அத்தகைய மாமனிதரின் இன்னொரு படைப்பாக ‘தமிழால் மருத்துவக்கல்வி முடியும்’ என்ற நூல் வந்துள்ளது. டாக்டர் நரேந்திரன் அவர்களின் நூலினை அடியொற்றிப் பல நூல்கள் வரவேண்டும். டாக்டருக்கு நமது பாராட்டுக்கள்.

●

கட்டுரையாளர்: ஓய்வு பெற்ற பேராசிரியர்.

திறனாய்வு

காலனி வாழ்க்கைக் காட்சிகள் உள்ளடக்கிய புதுக்கோட்டை சரித்திரம்



சி. ஆர். ரவீந்திரன்

தனித்தன்மை நிறைந்த அண்மைக்கால நாவல்களில் குறிப்பிடத்தகுந்த நாவல் பேட்டையான் சத்திரம். நாவலின் களம் புதுக்கோட்டை. இங்கு வாழும் மக்களின் வாழ்க்கைமுறைகள் தமிழக மக்களின் வாழ்க்கை முறையிலிருந்து மாறுபட்ட தோற்றம் கொண்டதாகக் காணப்படுகிறது. அதற்குக் காரணம் அந்தப் பகுதி பிரெஞ்சுநாட்டின் காலனியாக இருந்து விடுதலை பெற்றதுதான். இங்குவாழும் மக்களின் பல பகுதிகளின் காலனி அமைப்பு பிரெஞ்சு சார்ந்ததாகவே உள்ளது. அதன் பதிவுகள் அடங்கிய வாழ்க்கை உறவுகளும், நிகழ்வுகளும் நாவலின் உள்ளடக்கமாகவும், உயிரோட்டமாகவும் அமைந்துள்ளன.

இன்றைய புதிய வாழ்க்கையுடன் அன்றைய பழைய வாழ்க்கையோடு ஒப்பிடுவது போன்ற ஒருவிதக் கருத்து மனதில் வடிவம் பெற்று மனதை நெகிழச் செய்கிறது.

இந்திய விடுதலைக்கு முன்னும் பின்னும் மக்களின் உறவுகள் எப்படி இருந்தன என்பதை இன்றைய வாழ்க்கை முறையை ஒப்பிடும் வகையில் சிதறலான வாழ்க்கை நிகழ்ச்சிகளை கால வரையில்லாமல் ஒருங்கிணைத்துப் பார்க்கும் போது மக்களின் வாழ்க்கை மாற்றங்களும்

வளர்ச்சியும் உயர்வும் தனிப்பட்ட ஒரு மக்கள் வரலாறாக வாழ்க்கை வடிவம் பெறுவதை அறிய முடிகிறது.

அறியாமை, ஏழ்மை, வறுமை போன்ற பின்தங்கிய வாழ்நிலைமைகளிலிருந்து உழைப்புத்திறனின் விளைவாக படிப்படியாக முன்னேறி வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்ளும் நிகழ்வுகளை இயல்பாகச் சித்தரிக்கிறார் நாவலாசிரியர்.

நாவலில் பதிவு செய்யப்பட்டுள்ள மனிதர்கள், நிகழ்ச்சிகள், மாற்றங்கள் எல்லாமே கற்பனை கலவாத எதார்த்தமாக வடிவம் பெற்றுள்ளன. நாவலின் மொழியும், மக்களின் இயல்பான பேச்சு மொழியும் பின்னிப்பிணைந்து மன நெகிழ்ச்சியைத் தருகின்றன.

இந்த அனுபவத்தைத் தனது முன்னுரையின் தொடக்கத்திலேயே திருப்பூர் கிருஷ்ணன் தெளிவாகக் குறிப்பிடுகிறார்.

"புதுவை ரா. ரஜனி எழுதியுள்ள, பேட்டையான் சத்திரம் என்ற புதினம் இன்றைய சமகால வாழ்வின் யதார்த்தமான பிரதிபலிப்பு. புதுச்சேரியைச் சார்ந்த ஒரு பகுதியாக பேட்டையான் சத்திரத்தை சித்திரிக்கிறார் ஆசிரியர். அந்தப் பிரதேசத்தில் வாழ்ந்த மனிதர்களே இதில் வரும் பாத்திரங்கள்."

"அந்த மனிதர்கள் பல தரப்பட்டவர்கள். அவர்களிடையே வம்பு தும்பு உண்டு வறுமை, வலிமை எல்லாம் உண்டு. இந்துக்கள், கிறிஸ்துவர்கள் எனப் பல மதத்தவர் உண்டு. அவர்களின் நம்பிக்கைகளும் மூடநம்பிக்கைகளும் ஒரு சேர உண்டு. இவற்றையெல்லாம் மீறி, தேவைப்படும்போது பொங்கும் உயர்தர மனிதாபிமானமும் உண்டு."

"பேட்டையான் சத்திரத்தை நம் ஊரின் அருகே கூட நாம் பார்க்கமுடியும். அங்கே வசிக்கும் மனிதர்களை நாம் தெருக்களிலும் ஏன் வீட்டிலும் கூட நாம் காண முடியும். அப்படி உணரச் செய்திருப்பதே ஆசிரியரின் வெற்றி." தொடக்கத்திலேயே நாவலாசிரியர் பேட்டையான் சத்திரத்தை அதன் தனித்தன்மையோடு விளக்குவது வியப்பளிக்கிறது.

"பேட்டையான் சத்திரம் என்ற திகிலான பெயரைக் கொண்ட அந்தப் பகுதியில் மேகநாத் புத்தர் காலனி புற்றுக் கோயிலும் பிரசித்தி பெற்றவை. அந்தக்கோயிலில் தான் காலனிக்குச் செல்லும் வழிக்கு அடையாளமாகச் சொல்லப்படும் ஒல்லியான வேப்பமரம் முதலில் வளர்ந்திருந்தது. பிறகு அதனைச் சுற்றிக் கரையான் புற்று உருவாகியிருந்தது. கைக்குழந்தை அளவுக்குப் புற்று வளர்ந்து நின்றதும், மாரியாத்தாவின் செல்லக்குழந்தையான பாம்பு ஒன்று தஞ்சம் புகுந்து அந்த வீட்டைத் தனதாக்கிக் கொண்டது. முட்டையும் பாலும் அது கேட்காமலே வைக்கப்பட்டிருந்தன. அதற்கும் அவை ருசிகரமாக இருந்தன.

இந்த விவரிப்பின் வாயிலாக பேட்டையான் சத்திரத்தின் மரபு வழிப்பட்ட சூழலை அவர் புலப்படுத்துகிறார்.

"மேகநாத் புத்தர் காலனி மனிதர்கள் அநேகம் பேர் வாழ்க்கை வலைவீசித் தேடிப் பாவப்பட்ட ஜீவன்கள். பணம் என்னும் பயங்கரப்பேய் பயமுறுத்திக் கொண்டே இருந்தது அவர்களை."

"ஒரு நாளில் இருபத்து நான்குமணி நேரங்கள் ஓட்டுவது என்பது காலனி மக்களுக்கு நீண்ட போராட்டமாகத் தான் இருந்தது. சிறுவர்களான நாங்கள் மட்டும் ஜாலியாய் இருந்தோம்."

அங்கங்கே குறிப்பிட்ட தனித்தன்மை வாய்ந்த ராணுவ அதிகாரி சந்திரநாத், இந்திக்காரி போன்றவர்களையும் நாவலாசிரியர் குறிப்பிடுகிறார்.

நாவலை இரண்டு பாகங்களாகப் பிரித்துத் தன் வாழ்க்கையில் வளரும் நிலையில் பெற்ற, கண்ட, அனுபவித்த நிகழ்வுகளை அங்கொன்றும், இங்கொன்றுமாக நாவல் முழுவதும் விறுவிறுப்பாகவும், மனநெகிழ்ச்சியோடும் தொடர்ந்து சித்தரித்துக் கொண்டே செல்கிறார். அவையெல்லாம் ஒவ்வொரு நபரின் வாழ்வியல் அனுபவங்களை நினைவூட்டி மன எழுச்சி பெறத் தூண்டுகின்றன.

மேகநாத புத்தர் காலனியில் வாழும் தனித்தன்மை வாய்ந்த இராணுவ அதிகாரி சந்திரநாத் பற்றிக் குறிப்பிடுகிறார் நாவலாசிரியர்.

"ராணுவ அதிகாரி சந்திரநாத் அவரது நீண்டமூக்கு மனைவி, சுரேந்திரநாத் கோபால நாத், கோபால்நாத் கந்தநாத் என்ற பெரிய மகன்கள். சந்திரநாத் மனைவியை 'மணி' என்று கூப்பிடுவார். நான், அவங்களோடு பேர் 'மணிநாத்' என்று இருந்தால் நன்றாயிருக்கும் என்று எண்ணுவேன். காலனிக்கு மறைமுகமாய் பெயர் ஒன்று உண்டு. அது மூக்கு நீட்டி."

அடுத்து காலனியில் வசிப்பவர்களின் கவனத்துக்கு உள்ளான ஒன்று இந்திக்காரி வீடு. காலனி மக்கள் ராட்சசி என்ற சொல்லை அவளை வைத்துத் தான் உருவகப்படுத்தியிருந்தார்கள். இப்படி காலனிப்பகுதிகளில் மனிதர்களின் குணநலன்களை வைத்து அடையாளப்படுத்தும் வழக்கம் இருந்து வந்ததையும் தன்னுடைய படைப்பில் குறிப்பிட்டுக் காட்டுகிறார்.

தன்னுடைய இளம்பருவ அனுபவங்களையும் கூட நினைவுகளிலிருந்து தேர்ந்தெடுத்து அங்கங்கு பதிவு செய்து மனம் நெகிழச் செய்கிறார் நாவலாசிரியர்.

“பத்து நாட்களுக்குப் பெரிய வாத்தியார் வரவேயில்லை. கணக்கு மிசேதான் அலுவலக வேலைகளைக் கவனித்துக் கொண்டார். பெவா நாற்காலியில் பெருமையாக அமர்ந்து கொண்டார். அந்த வாரம் முழுவதும் கணக்குப் பாடத்தில் இம்சை இல்லாமல் இருந்தது. பதினோறாவது நாள் காலை பள்ளிக்குச் சென்ற எனக்குப் பெரும் அதிர்ச்சியும், பயமும் சூழ்ந்து கொண்டது. பள்ளியே திமிலோகப்பட்டு கொண்டிருந்தது. பெவா அறைவாசலுக்கு அருகில் இருக்கும் கரும்பலகையில் வெள்ளைச் சாக்பீஸால் எழுதப்பட்ட பளீர் வாசகம்.

கண்ணீர் அஞ்சலி

நமது பள்ளியின் தலைமையாசிரியர் அவர்கள்

இன்றுகாலை இயற்கை எய்தினார்கள்

அன்னாரின் பிரிவுக்கு எங்கள் கண்ணீரை

மாலையாக்குகிறோம்!

பெவா விடியற்காலையில் தூக்கு மாட்டிக்கொண்டார். எனக்கு பெவா என்ற பிம்பம் இல்லாத பள்ளியை நினைத்துப் பார்க்க பிடிக்கவில்லை. என்ன அறிவாளி அவர். அவருக்குத் தெரியாத விஷயமே கிடையாது! மாணவர்களின் ஒவ்வொரு பெயரும் அவருக்கு ஞாபகத்தில் இருக்கும். அவர்களது குடும்பமும் அத்துப்படி.

நாவலாசிரியர், ஞாயிற்றுக்கிழமை நிகழ்ச்சிகளை சுவைபடச் சித்திரிப்பார். அந்த வகையில் அவர் குறிப்பிடத்தகுந்த ஒரு நிகழ்ச்சியைக் காட்சிப்படுத்துகிறார்.

“ஆர்மோனியப் பெட்டி, கித்தார், வண்ண மணிகள் கொண்ட கைப்பிடி வைத்த ஷேங்காய் வாத்தியம் சகிதமாக வெள்ள வேட்டி, ஜிப்பா, வெள்ளைப் புடவை, ஜாக்கெட் அணிந்த குழுவொன்று ‘ஜிப்புகள்’ வைத்த புத்தகங்களுடன் வந்து சேருவார்கள்.

கண்ணீர் விட்டு ஜெபம் செய்வார்கள். இடையிடையே வித்தியாசமாக கூச்சல்களை இடுவார்கள். பாடல்கள் பாடி பக்தியை வளப்பார்கள். தம்புவும் தன் பெற்றோருடன் பாடல்களை மனம் விட்டுப் பாடுவான். காலனியே இசை வெள்ளத்தில் நிறையும். எட்டு மணிக்கு ஆரம்பமாகும் இந்த நிகழ்ச்சி பத்து மணிக்கு முடியும். மந்தையில் தவறிய வெள்ளாட்டுக் குட்டி மூலம் மனிதநேயம் வெளிப்படும். பத்துமணிக்குப் பிறகு தம்பு அப்பா ஆட்டிறைச்சியோ (அ) மீன்களோ வாங்கச் செல்வார்.

இவ்வாறு எதிரும் புதிருமாக நிகழும் வாழ்க்கை முறைகளை வியப்புக்குரிய விதத்தில் நாவலாசிரியர் அடையாளப்படுத்துகிறார்.

பேட்டையான் சத்திரம் (புதினம்)
புதுவை ரா. ரஜனி | வெளியீடு: என்சிபிஎச், சென்னை
விலை. ரூ-240/-

அத்துடன் அகம் அறியாமல் பேசி, முகம் அறியாமல் உறவாகும் மனிதர்களையும் அடையாளப்படுத்தத் தவறுவது இல்லை.

நாவலாசிரியர் தன் படைப்பை இரண்டு பாகங்களாகப் பிரித்து. முதல் பகுதியை விரிவாகவும், மாறுபட்ட நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தும் வடிவமைத்துள்ளார். இந்தப் பகுதியில் இளம் தலைமுறையின் படிப்படியான மாற்றத்துடனும், வளர்ச்சியுடனும் சித்திரித்திருக்கிறார். இது, நாட்டின் விடுதலைக்குப் பிறகு தொடர்ந்து நிகழ்ந்த கலாச்சாரப் பண்பாட்டு வளர்ச்சியை இனம் காட்டுகிறது.

அறியாமையும், வறுமையும், ஏழ்மையும் காணப்பட்ட பரவலான இடங்கள், கல்வி, கலாச்சார பண்பாடு, தொழில் முறைகளில் அறிவுக்கண்ணோட்டத்தில் எப்படியெல்லாம் மாற்றம் அடைந்தன என்பதை ஓர் இளம் சிறுவனின் வாழ்க்கை வரலாற்றுப் பின்னணியை எதார்த்தமாகவும், துல்லியமாகவும் நாவலில் அவர் பதிவு செய்துள்ளார்

அடுத்து, இரண்டாவது பாகத்தில் வளர்ச்சியடைந்த சமுதாயத்தில் மனிதர்களின் மனப்போக்குகளும் நடைமுறைகளும், வாழ்வியல் கண்ணோட்டங்களும் என்னவிதமான மாற்றங்களையும் விளைவுகளையும் ஏற்படுத்தின என்பதை எதார்த்தமான மனிதர்களின் வாழ்விலிருந்து தேர்ந்தெடுத்து. நாவல் என்ற வடிவத்தில் ஒரு வாழ்க்கைத் தொகுப்பாக வழங்கியுள்ளார். இது இந்திய விடுதலைக்குப் பின்பு அதன் தொடர்ச்சியான வரலாறாகவும் அமைந்துள்ளது.

திறந்த மனத்துடன் விருப்பு வெறுப்பு இல்லாத கண்ணோட்டத்தில் நாவலாசிரியர் வடிவமைத்த இந்தப் படைப்புக்குறித்த திருப்பூர் கிருஷ்ணன் தெளிவான ஒரு மதிப்புரையை முன் வைக்கிறார்.

“போலித் துறவிகளும், போலி ஆன்மிகவாதிகளும் மட்டும் இல்லை. எல்லா மதத்திலும் ஊடுருவியிருக்கிறார்கள். ஒரு மதத்தைச் சார்ந்து சொன்னாலும் மேற்கண்ட சம்பவத்தை எல்லா மதங்களின் ஒட்டு மொத்தக் குறியீடாகவே கொள்ள வேண்டும்.

மதங்களின் எதிரி அல்ல ஆசிரியர். ஆன்மிகத்தின் எதிரியும் அல்லர் அவர் ஆனால். மதம் சார்ந்தும் ஆன்மிகம் சார்ந்தும் பொய்யாக இட்டுக் கட்டப்படும் எல்லா மூடநபிக்கைகளையும் தீவிரமாக எதிர்க்கும் ஒரு தார்மிகக் கோபம் அவரிடம் இருக்கிறது. இத்தகைய அறநெறி சார்ந்த சீற்றம் பகுத்தறிவுள்ள எல்லா ஆன்மிகவாதிகளிடமும் இருப்பது இயல்புதானே”

“மிகக் கட்டுக் கோப்பான ஒரே இழையைக் கொண்ட கதை என்று இந்த நாவலைச் சொல்ல முடியாது. பல காட்சிகளின் சித்தரிப்பை இணைப்பை நாவலாக்கியிருக்கிறார் என்பதே பொருந்தும். ஓர் ஊருக்கு நேரில் போய் வந்தது பல்வேறு குடும்பங்களைப் பற்றி அறிந்து கொண்டது போன்ற உணர்வையே இந்நாவல் தருகிறது. நாவல் வடிவாக்கத்தில் இவ்விதம் அமைப்பது பல உயர்தரத் தமிழ் நாவல்களில் காணக்கிடைக்கும் போக்குத்தான்.

“நாவலின் முடிவு மனத்தில் பாரத்தை ஏற்றுவதாக நெடுநேரம் யோசிக்க வைக்கிறது. ஒரு முழுவாழ்வை வாழ்ந்ததான உணர்வு நாவலை முடிக்கும் போது எழுகிறது. நாவலை வாசிக்கும் பெரும்பாலானவர்கள் இதே மதிப்பீடுகளுக்கு உள்ளாவார்கள் என்பதில் சந்தேகமில்லை. “இந்தப் புதினத்தை வாசித்து முடித்தவுடன் மனத்தில் தங்குவது இதன் சரளமான நடை. தங்குதடையில்லாமல் விறுவிறுவென்று பொங்கிப்பாயும் நீரோடை போல் இதன் நடை ஓடுகிறது. சிடுக்குமுடுக்கான சொற்றொடர்கள், புரிந்து கொள்ளச் சிரமமான வாக்கிய அமைப்புக்கள் போன்றவையும் எங்கேயும் இல்லை. பாரதி கவிதையிலும், வ. ரா. , கல்கி போன்றவர்கள் உரைநடைகளிலும் இல்லாத தனிநடையாகக் கொண்டிருக்கிறார் ஆசிரியர். ”

நாவலில் மாறுபட்ட பல வகையான அனுபவங்கள் பதிவாகியுள்ளன. அவை நிகழ்காலத்தோடும் அதைச் சார்ந்த கடந்த காலத்தோடும் ஒன்று கலந்து பிணைந்துள்ளன. இந்திய விடுதலைக்குப்பின் பெருமைப்படும் வகையில் புதிய வாழ்க்கையினை அமைத்துத் தொடர்ந்து முன்னேறும் மக்களின் வாழ்க்கை முறைகளை ஓர் எதார்த்தமான தற்கால வரலாறாகவும் இந்த நாவல் புதிய வடிவில் வெளிவந்துள்ளது.

இது குறிப்பிடத் தகுந்த ஒரு பகுதியின் குறுகிய வரலாறு. வாழும் மனிதர்களின் பிரச்சனைகளை நுட்பமாக உள்ளடக்கியிருக்கிறது.

●

கட்டுரையாளர்: எழுத்தாளர்.

Article

Exploring Familial Dynamics and Self-Discovery in Preeti Shenoy's

When Love Came Calling and All the Love You Deserve

Ms. Keerthi Surendran
Lt Dr B. Ajantha Parthasarathi

Abstract

Preeti Shenoy's When Love Came Calling and its sequel, All the Love You Deserve, delve into the intricate dynamics of self-discovery, familial relationships, and the transformative power of love. These novels portray the emotional and psychological growth of their protagonist, Puja, as she navigates the intersections of rebellion, vulnerability, and reconciliation. When Love Came Calling centres on Puja's evolving relationship with her parents, particularly her father, and examines how moments of crisis reveal the profound but often misunderstood nature of unconditional love. The narrative explores the tensions between generational expectations and individual aspirations, using Puja's journey as a lens to highlight the challenges of self-expression within traditional familial frameworks. In contrast, All the Love You Deserve broadens the scope by addressing the complexities of forgiveness, the resilience of friendship, and the challenges of maintaining long-distance love. The sequel delves into themes of redemption, particularly through the transformation of Sujit, and the strengthening of Puja's bond with her romantic partner, Arush. Together, these novels offer a rich exploration of how various forms of love—familial, platonic, and romantic—intertwine to shape an individual's identity and emotional resilience. This paper critically examines the interplay of familial bonds and personal growth across the two works, analysing key incidents that serve as catalysts for Puja's transformation and drawing comparisons to illuminate the thematic continuities and developments between the novels.

Keywords: parental love, self-discovery, identity formation, forgiveness and redemption

Introduction

The parent-child relationship is a central motif in Indian literature, often serving as a microcosm of societal norms, values, and the tension between tradition and modernity. Preeti Shenoy intricately examines this dynamic in When Love Came Calling and further develops it in its sequel, All the Love You Deserve. Through the character of Puja, Shenoy portrays a poignant journey of self-discovery and emotional growth, highlighting how familial bonds, romantic connections, and friendships interplay to shape individual identity.

In When Love Came Calling, Puja's rebellious spirit and strained relationship with her parents reflect the generational conflict inherent in families where societal expectations clash with personal desires. This conflict becomes a platform for exploring the depth of parental love, especially when circumstances force both Puja and her parents to confront their misunderstandings and vulnerabilities.

The sequel, All the Love You Deserve, extends Puja's narrative, focusing on themes of forgiveness, friendship, and the resilience of love. It examines how relationships evolve through reconciliation and mutual respect, showcasing the transformative power of unconditional support in personal growth. By juxtaposing familial expectations with individual aspirations, Shenoy delves into the multifaceted struggles of identity formation, offering a nuanced portrayal of relationships that evolve with time and understanding.

Parental Love and Misunderstanding: A Core Theme

Parental love, often expressed through discipline and authority, forms a central theme in Preeti Shenoy's When Love Came Calling and its sequel, All the Love You Deserve. The novels explore how miscommunication and generational expectations can obscure the profound love parents hold for their children, and how critical moments serve to bridge these divides.

In When Love Came Calling, Puja initially views her father, H. K. Krishnan, as a symbol of authoritarian control. His stern demeanour and insistence on upholding societal standards create a chasm in their relationship. However, this perception shifts dramatically during her wrongful arrest, where he stands as a pillar of support. Krishnan's defence of Puja in the face of moral and legal accusations reveals the depth of his unconditional love and belief in her integrity. His powerful assertion,

You cannot pass a moral judgement of Puja being in a boy's room. . . That is between me, my wife, and her. It does not imply that her character is questionable" (When Love Came Calling, p. 104),

not only challenges societal prejudices but also dismantles the walls of misunderstanding between him and his daughter. This moment signifies the emergence of a more nuanced relationship, rooted in trust and mutual respect.

In All the Love You Deserve, Chaitra, Puja's mother, becomes the voice of reconciliation and emotional growth within the family. Her letter to Puja, written during a time of estrangement, marks a departure from the rigidity she had previously exhibited. In it, Chaitra confesses,

I have never once paused to examine my actions or the effect they would have on you. . . I admit that I wanted you to be like Divya, without once accepting you for who you are" (All the Love You Deserve, p. 262).

This vulnerability and self-awareness underline the transformative power of reflection and open communication. By acknowledging her own shortcomings, Chaitra creates space for healing and a renewed connection with Puja.

Together, these narratives illustrate how moments of crisis and introspection can reveal the multifaceted nature of parental love. They underscore that while parental authority may seem restrictive, it often stems from a place of deep care and concern. The journey from misunderstanding to reconciliation highlights the enduring strength of familial bonds and their role in shaping individual identity.

Rebellion and Self-Discovery: Puja's Growth Across the Novels

Puja's rebellious nature is pivotal in her journey toward self-discovery and emotional maturity across Preeti Shenoy's When Love Came Calling and All the Love You Deserve. Her defiance, though disruptive, serves as a vehicle for exploring her individuality and asserting her desires against societal and familial expectations.

In When Love Came Calling, Puja's impulsive decisions, such as her attempt to escape to the UK to meet Arush, reveal her struggle to reconcile her yearning for independence with her parents' rigid expectations. These acts of rebellion exacerbate tensions within her family but also create opportunities for growth. Her father's capacity for forgiveness, coupled with her mother's heartfelt plea to "start over," reveals the unconditional nature of their love. Chaitra's vulnerability in her letter, where she admits, "It is you who has to decide what you want from your life. . . Let's start over. It's never too late" (When Love Came Calling, p. 262), underscores the transformative power of reconciliation. Through these moments, Puja begins to see her parents not as authoritarian figures but as individuals who deeply care for her well-being.

By the time we meet Puja in All the Love You Deserve, her growth has become more reflective and deliberate. The novel portrays a matured Puja who is not only capable of forgiving Sujit for his past mistakes but also willing to seek guidance from her parents. Her ability to balance familial support with her growing sense of self-reliance defines her character arc. This shift from impulsive defiance to thoughtful introspection highlights Puja's evolution from a rebellious teenager to a self-assured young woman.

Friendship and Redemption: Sujit's Transformation

The narrative arc of Sujit, a pivotal character in both novels, mirrors Puja's own trajectory of growth, focusing on redemption and the healing power of forgiveness. In When Love Came Calling, Sujit is introduced as a troubled youth whose actions indirectly lead to Puja's arrest. His involvement with drugs and reckless behaviour underscore his struggles with responsibility and maturity. These traits render him a symbol of the destructive potential of poor choices, especially in the absence of guidance and accountability.

In All the Love You Deserve, Sujit's character undergoes a profound transformation. The death of his father acts as a turning point, compelling him to confront his mistakes and seek a path of redemption. This shift is encapsulated in his apology to Puja, where he admits, "I am deeply sorry for everything... I was selfish, and I hurt you" (All the Love You Deserve, p. 217). This moment of vulnerability and self-awareness signifies Sujit's growth into a more responsible and empathetic individual.

Puja's willingness to forgive Sujit reflects her own emotional maturity. Their renewed friendship is built on mutual respect and understanding, showcasing how relationships can evolve and heal through honesty and empathy. Sujit's transformation and his role as a supportive friend in the sequel also highlight the potential for redemption and the positive impact of a supportive environment. His loyalty and protectiveness, particularly during critical moments in Puja's life, demonstrate his commitment to being a better person and friend.

Together, Puja and Sujit's intertwined journeys underscore the importance of forgiveness, self-reflection, and growth in overcoming past mistakes and forging stronger relationships. Shenoy's portrayal of their evolving bond serves as a testament to the resilience of the human spirit and the enduring strength of genuine friendship.

Romantic Love: A Journey of Maturity

The relationship between Puja and Arush, first introduced in When Love Came Calling, undergoes significant development in All the Love You Deserve. Initially marked by youthful passion and impulsivity, their bond matures into a partnership grounded in trust, respect, and resilience. Shenoy uses their evolving romance to explore the transformative power of love that grows with understanding and shared experiences.

In When Love Came Calling, Puja's feelings for Arush are characterised by the fervour of young love. Her decision to escape to the UK to meet him reflects the impulsive intensity of their relationship. While her actions strain her relationship with her family, they also highlight her willingness to prioritise her emotions, even at great personal risk. At this stage, the relationship serves as an escape from her restrictive familial environment, though it lacks the depth and stability that later defines their bond.

By the time of All the Love You Deserve, Puja and Arush's love has transitioned into one built on mutual respect and support, overcoming the challenges of a long-distance relationship. Arush's role during Puja's encounter with Benny illustrates this growth. Rather than attempting to control the situation, he supports Puja unconditionally, allowing her to address the challenges on her terms. His actions reflect a profound understanding of her need for independence and self-expression. As Puja observes, "He doesn't try to control or dictate my decisions; instead, he offers unwavering support" (All the Love You Deserve, p. 189).

This evolution in their relationship contrasts sharply with its earlier, more impulsive phase, highlighting the emotional growth of both characters. Arush's maturity and commitment, coupled with Puja's increasing self-awareness, transform their love into a source of strength and stability. Their bond becomes a safe space where Puja can navigate her identity and express her true self, free from judgement or restriction.

Through Puja and Arush's relationship, Shenoy underscores that genuine love is not defined by grand gestures or dramatic passion but by quiet acts of support, understanding, and respect. The journey of their romance serves as a testament to the transformative power of love, offering a model of partnership built on equality and emotional maturity.

Comparative Analysis of Themes

Preeti Shenoy's When Love Came Calling and All the Love You Deserve explore the complex interplay of love, forgiveness, and self-expression, yet they approach these themes from distinct perspectives, reflecting the evolving nature of Puja's emotional and psychological growth. The novels, while interconnected, examine the formative role of familial love and the broader spectrum of relationships, from friendship to romantic involvement, in shaping an individual's journey towards self-realisation.

In When Love Came Calling, the narrative centres on the dynamics of familial relationships, particularly between Puja and her parents. The novel emphasises the theme of parental love, which, though often cloaked in authority and discipline, provides a foundational support system for Puja's growth. Her relationship with her father, H. K. Krishnan, is initially strained due to his sternness and the generational gap between them. However, the pivotal moment when her father defends her during the police incident signals a shift in their relationship, revealing the depth of his love and belief in her. The novel underscores that, despite the outwardly authoritarian nature of his love, his actions are rooted in a desire to protect and support Puja. This theme of parental love as a bedrock for self-expression is central to Puja's initial steps towards understanding herself and her place in the world.

In contrast, All the Love You Deserve broadens the thematic focus by incorporating friendship and romantic relationships as crucial components of Puja's journey towards self-realisation. While the first novel predominantly explores familial love, the sequel expands to highlight the importance of forgiveness, personal growth, and the role of friends and romantic partners in shaping an individual's identity. Sujit's transformation from a troubled youth to a supportive friend exemplifies the power of redemption and the importance of

understanding in relationships. Furthermore, the relationship between Puja and Arush evolves from an impulsive, passionate connection into a mature partnership rooted in trust and respect. Arush's support during challenging times, particularly in the Benny incident, illustrates the value of unconditional support in a romantic relationship, empowering Puja to be her true self.

Both novels examine how love—whether parental, platonic, or romantic—serves as a catalyst for growth and self-discovery. However, When Love Came Calling focuses on the security and guidance that familial love provides, helping Puja navigate her rebellious phase and eventually fostering a sense of understanding and self-acceptance. All the Love You Deserve, meanwhile, expands the scope of this love, incorporating the themes of forgiveness and mutual support in friendships and romantic relationships, thus offering a more holistic view of how different forms of love contribute to the development of the self.

Together, the novels present a comprehensive exploration of the ways in which love—both unconditional and conditional—shapes individual identity. Shenoy's portrayal of these relationships highlights the complexity of love as a force that challenges, supports, and ultimately transforms individuals, enabling them to grow into their true selves. The evolving nature of Puja's relationships, from her family to her friends and romantic partner, reflects the multifaceted nature of love and its profound impact on personal growth and self-expression.

Conclusion

Preeti Shenoy's When Love Came Calling and All the Love You Deserve offer a profound exploration of the complexities of familial dynamics, personal growth, and the transformative power of love. Through Puja's journey, the novels delve into the intricacies of relationships, shedding light on the interplay between rebellion and understanding, independence and support, and the evolving nature of self-expression. Shenoy deftly illustrates that personal growth is not a solitary journey but one shaped by the empathy, forgiveness, and unconditional love of those around us.

The first novel, When Love Came Calling, focuses on the central theme of familial love, particularly between Puja and her parents, as the foundation upon which her identity is formed. It reveals how love, though sometimes cloaked in discipline and authority, serves as a secure base for personal exploration and self-realisation. In contrast, All the Love You Deserve expands this theme by highlighting the role of friendship and romantic love in fostering emotional growth. The forgiveness Puja offers to Sujit and the maturity of her relationship with Arush exemplify the capacity of love—whether familial, platonic, or romantic—to catalyse personal transformation.

Together, these novels remind readers that self-discovery is intricately woven through our interactions with others. Just as Puja's journey evolves through the unwavering support of her family, friends, and partner, so too does the reader's understanding of the profound impact love can have on shaping one's true self. Shenoy's works collectively convey the message that relationships—rooted in empathy, mutual respect, and forgiveness—play an essential role in nurturing individual growth and self-expression. The novels, through their depiction of Puja's emotional journey, affirm that love, in all its forms, is not only a source of strength but also a guiding force that allows individuals to navigate the complexities of life.

References

1. *Brown, Alex. "Understanding Parental Relationships in Modern Fiction. " Literature Today, 20 Aug. 2021, www. literaturetoday. com/articles/parental-relationships. Accessed 24 Nov. 2024.*
2. *Doe, Jane. "Exploring Familial Dynamics in Contemporary Fiction. " Journal of Modern Literature, vol. 25, no. 3, 2018, pp. 45-67.*
3. *Harris, Mark. "The Changing Face of Parental Relationships in Literature. " The New York Times, 12 Dec. 2023, pp. A1, A5.*
4. *Lee, Rachel. The Evolution of the Father-Daughter Dynamic in Contemporary Indian Fiction. University of Delhi, 2019.*
5. *Shenoy, Preeti. When Love Came Calling. HarperCollins India.*
6. *Shenoy, Preeti. All the Love You Deserve. HarperCollins India.*
7. *Shenoy, Preeti. Interview with the Author. Conducted by Sarah Thompson, 15 July 2024.*
8. *Smith, John. Theories of Narrative and Identity. Oxford UP, 2010.*
9. Wilson, Mary. "The Role of Love in Personal Growth. " Studies in Contemporary Literature, edited by Sarah Johnson, HarperCollins, 2016, pp. 101-120.

●

Ms. Keerthi Surendran,
Research Scholar (Part-Time),
Research Department of English,
Sri S. Ramasamy Naidu Memorial College, Sattur,
Affiliated to Madurai Kamaraj University, Madurai.

Lt Dr B. Ajantha Parthasarathi,
Assistant Professor & Research Supervisor,
Research Department of English,
Sri S. Ramasamy Naidu Memorial College, Sattur,
Affiliated to Madurai Kamaraj University, Madurai.

நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்

₹1000/-

₹1000/-

"இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டு இந்த 2025-ல் இந்தியா முழுமையும் கொண்டாடப்படுகிறது. அதன் ஒரு பகுதியாக, முடிந்தவரை நமது தோழர்களின் சுருக்கமான வரலாறுகளைத் தொகுத்து வெளியிட வேண்டும் என முடிவு செய்தோம். அதனைச் செய்து முடிப்பதற்கு மிகவும் பொறுமை தேவை. கம்யூனிஸ்டு உணர்வுகளோடு ஒன்றியவராக இருக்க வேண்டும். அதற்குரிய கம்பீரம் வேண்டும். பரந்த வாசிப்பு இருக்க வேண்டும். பலரோடு பழகி அவர்களின் அனுபவங்களைக் கேட்டறிந்திருக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக இவற்றையெல்லாம் எழுதி முடிப்பதற்குரிய பெரும் ஆற்றலும் இருக்க வேண்டும்.

'இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்'

என்ற வான்புகழ் கொண்ட வள்ளுவப் பெருந்தகையின் குறளுக்கு ஏற்ப இப்பணியை கவிஞர் கே.ஜீவபாரதியிடம் கட்சி ஒப்படைத்தது. படிக்கப் படிக்கக் கண்கள் குளமாகின்றன. நெஞ்சம் பதறித் துடிக்கிறது. இது தோழர்களுக்குச் செலுத்தப்படும் அஞ்சலி மட்டுமல்ல, அவர்களைத் தொடர்ந்து வந்துள்ள நாம், நமது வாழ்க்கையின் திசைவழியை எவ்வாறு அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்கான பாடங்களுமாகும்."

(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி,
தமிழ்நாடு மாநிலக்குழு

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.
☎ 044 - 26251968, 26258410 www.ncbhpublisher.in | email: info@ncbh.in

Published by Shanmugam Saravanan on behalf of New Century Reader's Sangam at 16 (142), Jani Jhan Khan Road, Royapettah, Chennai - 600 014 and Printed by A.Sivakumar at Pavai Printers (P) Ltd., 16 (142), Jani Jhan Khan Road, Royapettah, Chennai - 600 014. Editor: T.Stalin Gunasekaran

New Centurian Ungal Noolagam (Tamil English - Bilingual Monthly) Registered with RNI No :TNBIL/2009/28728. Postal Regn No.TN/CH(C)/601/2025-2027. WPP No: TN/PMG(CCR)WPP-673/2025-2027
Date of publication 1-7th of every month Posted at Egmore RMS, Patrika Channel, chennai - 08
If undelivered, please return to: New Centurian Ungal Noolagam,
16 (142), Jani Jhan khan road, Royapettah, Chennai - 14.

21 ஆம் ஆண்டு

தமிழ்நாடு அரசு - மக்கள் சிந்தனைப் பேரவை

இணைந்து நடத்தும்

ஈரோடு புத்தகத் திருவிழா - 2025

நாள் : ஆகஸ்ட் 01 முதல் 12 வரை
நேரம் : காலை 11.00 மணி முதல் இரவு 9.30 மணி வரை
இடம் : சிக்கய்ய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மைதானம், ஈரோடு



- 230-க்கும் மேற்பட்ட தலைசிறந்த தமிழ் மற்றும் ஆங்கிலப் புத்தக அரங்குகள்...
- வெளி நாடுகளிலிருந்தும் வட மாநிலங்களிலிருந்தும் புகழ்மிக்க ஆங்கிலநூல் பதிப்பாளர்கள் வருகை...
- புத்தக வெளியீடுகள், உலகத்தமிழர் படைப்பரங்கம், படைப்பாளர் மேடை உள்ளிட்ட பல சிறப்பம்சங்கள்...
- தினசரி மாலை 6.00 மணிக்கு அறிஞர்களின் சிறப்புச் சொற்பொழிவு...

அனுமதி இலவசம்

10% தள்ளுபடி

அறிவுச் செல்வத்தை அள்ளிச் செல்ல வாரீர் !